# உதயன்

சுடர் 31 கதிர் 063 வள்ளுவர் ஆண்டு 2047 தை 14, வியாழக்கிழமை 28.01.2016



மஹஜன சம்பத

இன்றைய சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 15,003,094/-

(ஒரு கோடியே ஐம்பது இலட்சம்)

www.nlb.lk

தேசிய லொத்தர் சபை


## நலன்புரி நிலைய மக்களின் காணிகளை 2 வாரங்களுக்குள் அடையாளப்படுத்துக

### இராணுவத்தினர், அரச அதிகாரிகளுக்கு நேற்று பாதுகாப்புச் செயலர் யாழில் வைத்துப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் சொந்த நிலங்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளை, இராணுவத்தினர் - பிரதேச செயலக அதிகாரிகள் இணைந்து மேற்கொள்ளுமாறும், இரண்டு வாரங்களில் இந்த நடவடிக்கைகளை முடிவுறுத்துமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி அறிவுறுத்தியுள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினரின் ஆகக் குறைந்த தேவைக்குரிய காணிகள் தவிர பக். 23

## பொன்சேகாவுக்கு வலை வீசுகின்றது ஐ.தே. கட்சி

கொழும்பு, ஜன. 28

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு தெற்கில் புதிய கட்சியொன்றை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளை மகிந்த ஆதரவு அணியினர் தீவிரமாக மேற்கொண்டுவரும் நிலையில், பக். 21

முச்சந்தி முரளி



ஏன் இந்த மனுசன் இப்பிடி அடம்பிடிக்குதோ தெரியேல்ல...

# சர்வதேசத் தலையீட்டை நிராகரிக்கவில்லை அரசு

### ஜெனிவாத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே பொறுப்புக்கூறல் செயல்முறை என்கிறார் பிரதமர்

லண்டன், ஜனவரி 28

ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இலங்கையின் செயல்முறை அமையும். அந்த வகையில் போர்க்குற்ற விசாரணைகளில், வெளிநாடுகளின் தலையீட்டை இதுவரை இலங்கை அரசு நிராகரிக்கவில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

லண்டன் சனல்-4 ஊடகத்துக்குக் கொழும்பில் வைத்து வழங்கிய விசேட நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாடுகளின் தலையீட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளமை பக். 23



வாக்குறுதிகளை மீறுகின்றாரா ஜனாதிபதி? பக். 12

## நிலவெடிப்பு நடந்த பகுதியில் வசிப்பதில் அச்சமேதுமில்லை

### தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 28

நவக்கிரிப் பிரதேசத்தில் நில வெடிப்பு இடம்பெற்ற பகுதியில் குடியிருப்பதற்கோ அல்லது பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கோ அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் தேசிய கட்டட பக்.22

## அரசமைப்பு கட்டாயம் மறுசீரமைப்பு

### மைத்திரி உறுதி

கொழும்பு, ஜன 28

புதிய அரசமைப்பு கொண்டுவரப்படாவிடினும் நாட்டிலுள்ள தற்போதைய அரசமைப்பு கட்டாயமாக மறுசீரமைப்புச் செய்யப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பக். 21

## பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பங்கேற்க வடக்கு முதல்வர் மறுப்பு

### அவரது பிரதிநிதியாக ஐங்கரநேசனை நியமித்ததால் அதிகாரிகள் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 28

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தன்னால் பங்கெடுக்க முடியாது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தனக்குப் பதிலாக அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பங்கேற்பார் பக். 21

## சுதந்திர தினத்துக்கு முன் விடுதலை இல்லையேல் பட்டினிப் போராட்டம்

### தமிழ் அரசியல் கைதிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழ் அரசியல் கைதிகள் எவரும் சிறையில் இல்லை என்று டாவோஸில் பிரதமர் அபாண்டமான பொய்யைக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள், சுதந்திர தினத்துக்கு முன்னர் தம்மை விடுதலை செய்யாவிடின் பட்டினிப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

ஐ.நா.வுக்கான மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை வரவுள்ளதால் அவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்து தருமாறும் தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் கோரியுள்ளனர். பக். 21

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான மூன்று பேர் விடுதலை

### மேலும் 14 கைதிகள் புனர்வாழ்வுக்கு

கொழும்பு, ஜன. 28

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் 3 பேர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத் பக். 23

## உள்ளக இடம்பெயர்ந்தோர் என்ற சொற்பதம் நீக்கப்படும்

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

இலங்கை வரலாற்றில் குறுகிய காலத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற சொற்பதத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகின்றது என்று பக். 22

## விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீள்குடியேறாதது ஏன்?

### யாழ்ப்பாணத்தில் நேற்று கேள்வி எழுப்பினார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஜன. 28

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே மக்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை. இவ்வாறானதொரு நிலையில் மேலும் காணி விடுவிப்புப் பற்றி ஏன் கேள்வி எழுப்பப்படுகின்றது என்று இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா, யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பக். 23


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்னும் 1 நாள்

JITF 2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## நாயைக் குளிப்பாட்ட சென்றவர் கடலேரியில் சடலமாக மீட்பு

சாவகச்சேரி, ஜன. 28
நாயைக் குளிப்பாட்டுவதற்கு கடலேரிக்கு அழைத்துச் சென்றவர் கடலேரிக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி வடக்கு நீர்வேலி தரவைக் கடலேரியில் நடந்துள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த செல்லையா கணநாதன் (வயது-68) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நாயைக் குளிப்பாட்டுவதற்கு கடலேரிக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டவர் என்றும், நேற்றுமுன்தினம் மாலையும் அவ்வாறு நாயை அழைத்துக்கொண்டு சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மாலை 6 மணியளவில் நாய் வீடு திரும்பியபோதும், கணநாதன் வீடு திரும்பவில்லை. இதையடுத்து கடலேரிப் பகுதியில் அவரைத் தேடியபோது நீரோட்டமுள்ள பகுதியில் நீருக்குள் அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் அனுப்பப்பட்டதன் பின்னர் சடலம் கரைக்குக் கொண்டுவரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. நேற்று முற்பகல் வரை சடலம் கரையில் வைக்கப்பட்டிருந்தது என்றும் அதன்பின்னரே பொலிஸார் சடலத்தைக் கொண்டுசென்றனர் என்றும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். (ற-9)

# இந்த ஆண்டின் இறுதிக்குள் இடமாறும் யாழ்.பஸ் நிலையம்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28
யாழ். மத்திய பஸ் நிலையத்தை இடமாற்றம் செய்யும் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக வெளிமாவட்டத்துக்கான தூர சேவை பஸ் தரிப்பிடம் யாழ். ரயில் நிலையத்துக்கு அருகில் இடமாற்றப்படவுள்ளது. நகரில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு செல்வதற்கான தூரசேவை பஸ் தரிப்பிடம் யாழ். பிரதான ரயில் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்படவுள்ளது. உள்ளக சேவையில் ஈடுபடும் பஸ்களும், வெளியூர் சேவையில் ஈடுபடும் பஸ்களும் நகரின் ஒரே பகுதியில் அருகருகே நிறுத்தப்படுவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. முக்கியமாக வெளி மாவட்ட பஸ்களுக்கு இடையே மோதல்கள் ஏற்படும் வாய்ப்புகளும் உருவாகின்றன. அத்துடன் போக்குவரத்துச் சேவையைப் பெறுவதற்கு பொதுமக்கள் நேரத்தை விரயம் செய்யும் நிலைமையும் காணப்படுகின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு பஸ் நிலையத்தை இடமாற்றும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

கடந்த வாரங்களில் ஜனாதிபதி மாவட்ட அரச அதிபர்களுடன் கொழும்பில் கலந்துரையாடலை நடத்தியிருந்தார். அதில் பஸ் தரிப்பிட இடமாற்றம் குறித்துப் பேசப்பட்டது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

யு.டி.ஏ.எப். திட்டத்தின் மூலம் யாழ். ரயில் நிலையத்துக்கு அண்மையில் வெளிமாவட்ட பஸ்களுக்கான புதிய தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான இடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்கு பஸ் தரிப்பிட மாற்றம் செய்துமுடிக்கப்படும் என்றார்.

தந்திரோபாய நகரத் திட்டமிடலுக்காக 2014 ஆம் ஆண்டு இலங்கை அரசு மேற் கொண்ட முயற்சிகள் காரணமாக உலக வங்கி, நாட்டின் ஆறு மாவட்டங்களைத் தேர்வு செய்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அவற்றில் காலி, கண்டி ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்றாவதாக உள்வாங்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தில் இரு பஸ் தரிப்பிடங்களையும் இடமாற்றும் கோரிக்கைகள் உலக வங்கியால் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களில் விடுக்கப்பட்டிருந்தன. யாழ்.மாநகர சபையும் பஸ் தரிப்பிட இடமாற்றத்துக்கு சம்மதம் தெரிவித்திருந்தது.(ற-ரி5)

## மாணவிகள் துஷ்பிரயோக வழக்கு; அதிபர் உட்பட இருவருக்குப் பிணை

சாவகச்சேரி, ஜன. 28
பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென்மராட்சி கல்வி வலய அதிபரும், பாடசாலை விடுதியின் பெண் மேற்பார்வையாளரும் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த அதிபர் கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். ஒக்ரோபர் மாதம் விடுதியின் பெண் மேற்பார்வையாளர் கைது செய்யப்பட்டிருந்தார். இவர்கள் இருவரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த இருவரும் தலா ஒரு லட்சம் பெறுமதியான மூன்று ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். அத்துடன் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும், சாட்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத் தில் செயற்படக் கூடாது என்றும் நீதிவான் அறிவுறுத்தினார். (ற-9)



விற்பனைக்குத் தயாராக பொதியிடப்பட்ட நிலையில் 10 கிலோகிராம் கஞ்சா நேற்றுமுன்தினம் மன்னாரில் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ற-4)



என்.டி.பி. வங்கி தனது புதிய கிளை ஒன்றை மானிப்பாயில் நேற்றுத் திறந்தது. அதில் பிரதம விருந்தினராக வங்கியின் பிரதம செயலாற்றுப் பணிப்பாளர் டெனன் சேனாதிராசாவும் ஏனைய விருந்தினர்களாக வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி றா.தியாகராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வங்கி முகாமையாளர் செ.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-4,21)

## மோ.சைக்கிள் மோதி பெண் காயம்

சாவகச்சேரி, ஜன. 28
பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முயன்ற இளம் பெண்ணை மறுபக்கத்தில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு மிருசுவில் வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது. மிருசுவில் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய இந்தப் பெண் காயங்களுடன் கொடிகாமம் அம் புலன்ஸ் வாகனத்தில் கொண்டு வரப்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)

# இருநாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு மனிதாபிமானத்துடன் தீர்வு தேவை

### இந்திய துணைத் தூதரக யாழ்.இணைப்பாளர் நடராஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28
மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான ரீதியில் செயற்பட்டு முடிவு எடுத்தால் சிறந்ததாக இருக்கும் என்று குறிப்பிட்டார் இந்தியத் தூதரக யாழ்.இணைப்பாளர் நடராஜன்.

இந்திய குடியசு தினத்தையொட்டிய மாலை நேர நிகழ்வு ஒன்று யாழ்.நகர விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சில சில பிரச்சினைகள் உள்ளன. அவை சிறிய பிரச்சினையா அல்லது பெரிய பிரச்சினையா என்று எனக்குத் தெரியவில்லை. அதாவது மீனவர் பிரச்சினை. அதற்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -
இலங்கையில் போருக்குப் பின்னர் இந்தியா சில திட்டங்களை வகுத்து உட்கட்டமைப்பு, புனரமைப்பு உள்ளிட்ட பலவற்றை நடத்தி வருகிறது. வீட்டுத் திட்டம், ரயில் பாதை புனரமைப்பு எனப் பல பணிகள் முடிந்துள்ளன.

எதிர்காலத்தில் யாழில் பிரமாண்டமான கலையரங்கு ஒன்றை 1.2 பில்லியன் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது. மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் கோயில் கட்டடப் பணிகள் 326 மில்லியன் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது. யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு புனரமைப்புப் பணிகளும் 146 மில்லியன் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன.

கல்வித் துறையில், இந்தியாவால் இலங்கை மாணவர் பலருக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அந்த எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இந்திய தொழிநுட்ப பொருளாதாரத் திட்டம் ஒன்று உள்ளது. அதன்மூலமாக கடந்த வருடத்தில் 25 வடமாகாண அதிகாரிகள்



இந்தியாவுக்குக் குறுகிய பயிற்சிக்குச் சென்று பலர் திரும்பி வந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்துடனான வர்த்தக பொருளாதார வளர்ச்சியில் உச்சக் கட்ட வளர்ச்சியைக் கொடுக்க விரும்புகிறோம். விரைவில் தென்னிந்திய வர்த்தகர்கள் 60 பேர் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர்.

அரசியலைத் தவிர பொருளாதாரத்திலும் நாம் வளர்ச்சியடைய வேண்டும். முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்திய ஜனநாயகத்தைப் பொறுத்தவரையில் வலுவானதாக உள்ளது. இந்திய -இலங்கை உறவில் இந்தியா இலங்கைக்கு அதிக பட்ச முக்கியத்துவம் கொடுக்கிறது. அரசியல் தலைவர்கள் இரு நாடுகளினதும் நட்பை வளர்க்கும் வகையில் நிலையான தொடர்பைப் பேணுவதில் உள்ளதோடு, அபிவிருத்தியையும் கருத்துக்களையும் பரிமாறுவதில் ஈடுபட்டு வருகின்றனர்- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பளிகக்கார கலந்து கொண்டு உரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடமாகாண பிரதம செயலர் அ.பத்திநாதன், வடமாகாண சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். அங்கு இசை நிகழ்வும் மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசார தேரர் வைத்தியசாலையில் அனுமதி

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஞானசார தேரர் நேற்றுமுன்தினம் இரவு முதல் சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்றுப் பகல் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் ஹோமகம பொலிஸில் சரணடைந்த ஞானசார தேரரைக் கைது செய்து நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

பெப்ரவரி 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து சிறையில் இருந்த நிலையிலேயே ஞானசார தேரர் சிறைச் சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (கு)

## பொலிஸார் எனக் கூறி வீட்டுக்குள் நுழைந்தோர் பெண்ணைத் தாக்கினர்

சாவகச்சேரி, ஜன. 28

மாலை வேளையில் தாங்கள் பொலிஸார் என்றும், வீட்டைச் சோதனையிட வேண்டுமெனவும் கூறி வீட்டினுள் புகுந்த மூன்று பெண்கள் உட்பட 7 பேர் அங்கிருந்த குடும்பப் பெண்ணை மோசமாகத் தாக்கி விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான பெண் இப்பகு தியில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்தப்பெண் தெரிவிக்கையில், நானும் கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். சம்பவம் நடந்த தினத்தன்று கணவருடன் வந்த மூன்று பெண்கள் உட்பட ஏழு பேர் தாங்கள் பொலிஸார் எனவும் வீட்டைச் சோதனையிடவுள்ளோம் எனவும் கூறினர். ஆண் கள் அனைவரும் ரீ- சேர்ட் அணிந்திருந்தனர். அவர்கள் வீட்டுக்குள் சென்ற போது நானும் பின் தொடர்ந்து சென்றேன். வீட்டினுள் வைத்து அனைவரும் என்னைத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர். வீட்டை அவர்கள் சோத னையிடவில்லை. என்னைத் தாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்திருக்கவேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் -என்றார். (த-9)

Galaxy Star
வெற்றி வாரம் 029 திகதி 27.01.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 10 26 53 57
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,304, 100/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2731 திகதி 27.01.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 14 17 51 M
போனஸ் இல. 62
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 10,000,000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919
2016.01.30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியரான
திருமதி சிவாமினி குணேந்திரன்
அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் 20.01.2016 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (Master of Arts in Tamil Secound Class) பட்டம் பெற்றமையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்விப்படிவம் பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் வேலைநாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 17.02.2016 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 03.02.2016 ஆம் திகதியிலிருந்து 17.02.2016 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

05. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 17.02.2016ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் உட்பட) | ஒப்பந்தக் காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | JMC/WD/01/CF.Rd /2016/06 | திருமகள் வீதி புனரமைப்பு | 1.92 | 2.146 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | 30,000.00 | 91 நாள்கள் |
| 02 | JMC/WD/01/CF.Rd /2016/07 | B.A தம்பி லேண் புனரமைப்பு | 1.09 | 1.218 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 15,000.00 | 91 நாள்கள் |
| 03 | JMC/WD/01/CF.Rd /2016/08 | சந்தனமாதா 2ஆம் ஒழுங்கை புனரமைப்பு | 2.78 | 3.116 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | 40,000.00 | 91 நாள்கள் |
| 04 | JMC/WD/01/CF.Rd /2016/09 | கச்சேரி கிழக்கு ஒழுங்கை புனரமைப்பு | 2.56 | 2.868 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | 40,000.00 | 91 நாள்கள் |
| 05 | JMC/WD/01/CF.Rd /2016/10 | பிரப்பங்குளம் வீதி புனரமைப்பு | 1.12 | 1.258 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 15,000.00 | 91 நாள்கள் |
| | JMC/WD/01/CF.Ch /2016/11 | பிரப்பங்குளம் வீதி பெட்டி மதகுஅமைப்பு | 1.05 | 1.159 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 15,000.00 | 91 நாள்கள் |
| 06 | JMC/WD/01/CF.Rd /2016/12 | கந்தப்பசேகரம் வீதி புனரமைப்பு | 1.15 | 1.292 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 20,000.00 | 91 நாள்கள் |
| | JMC/WD/01/CF.Ch /2016/13 | கந்தப்பசேகரம் வீதி வடிகால் புனரமைப்பு | 4.18 | 4.725 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | 65,000.00 | 91 நாள்கள் |
| 07 | JMC/WD/01/CF.Rd /2016/14 | கேசாவில் பிள்ளையார் வீதி புனரமைப்பு | 1.75 | 1.957 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 25,000.00 | 91 நாள்கள் |
| 08 | JMC/WD/01/CF.Rd /2016/15 | பேரின்பநாயகம் வீதி புனரமைப்பு | 1.35 | 1.510 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 20,000.00 | 91 நாள்கள் |
| 09 | JMC/WD/01/CF.Rd /2016/16 | நடுத்தெரு வீதி புனரமைப்பு | 1.69 | 1.893 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 25,000.00 | 91 நாள்கள் |
| 10 | JMC/WD/01/CF.Rd /2016/17 | மலர்மகள் வீதி புனரமைப்பு | 1.48 | 1.662 | 3 மாதங்கள் | C9 அல்லது அதற்குமேல் | 20,000.00 | 91 நாள்கள் |
| 11 | JMC/WD/01/CF.Rd /2016/18 | இலந்தைக்குளம் வீதி புனரமைப்பு | 2.99 | 3.346 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்குமேல் | 45,000.00 | 91 நாள்கள் |

தலைவர் / ஆணையாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2019

28.01.2016

ஆங்கில வகுப்புக்கள்
IELTS, TOFEL, Diploma in English, ஆங்கில இலக்கியம் ஆகியவற்றுக்கான வகுப்புக்கள் Latin, French ஆகியவற்றை கற்பித்தலில் 46 ஆண்டு கால அனுபவம் உள்ள ஆசிரியரால் நடத்தப்படுகின்றது.
தொடர்பு: K.C. சிவசுப்பிரமணியம்
கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு, புலோலி.
தொ.பே: 021 2260277

வேலையாள்கள் தேவை 0214923724
யாழ் நகரில் இயங்கும் பிரபல பலசரக்கு மொத்த வியாபார நிலையத்துக்கு உதவி ஆள்கள் தேவை.
ஆண்கள் மட்டும்.
பருத்தித்துறையில் இயங்கும் பார்சல் சேர்விஸ் நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை. ஆண்கள் மட்டும்.
ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

CCTV
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Next Batch : 30-January-2016
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி,
076 - 7013060 , 021-7306000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRADE FINANCE & INVESTMENTS PLC

## பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு

| MODEL | REG.NO | CHASIS NO |
|---|---|---|
| XL-R-125 | NPBAG -65XX | LTMJD2193D5102763 |
| ROAD MATE | NPQY - 38XX | LSRHCKL11A1COO308 |
| ROAD MATE | NPQY - 39XX | LSRHCKLI1B1300097 |
| DISCOVER - 125 | NPXE-98XX | MD2DSJZZZUWE82168 |
| PASSION PRO | NP BAE - 65XX | MBLHA10AXCGLO1728 |
| HF DELUXE | NP BBA - 88XX | MBLHA11AEE9E11024 |
| DISCOVER - 125 | NP BBK - 67XX | MD2A57AZ7EWE41086 |
| THREE WHEELER | NPYU - 59XX | MD6M14PK8B4G34550 |
| GLAMOUR | NP BBC - 07XX | MBLJA06AHEGBO1135 |
| DELUXE | NPBAG - 57XX | MBLHA11EWD9A22232 |
| PHOTO COPY MACHINE | TOSHIBA | DP - 1810 |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக் கொள்ளலாம்.
நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு: 021 228 0110, 021 228 0108
077 166 1648, 077 109 2236

(சி/28902)(11,15,18)


# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் நேற்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன 28

கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றும் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்களின் சேவையை உறுதிப்படுத்தக் கோரி இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் நேற்றுப் புதன்கிழமை ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு அந்தந்த மாகாண கல்வித் திணைக்களங்களுக்கும் மனுக்கள் கையளிக்கப்பட்டன.

இதில் வடமாகாணத்தில் சேவையாற்றும் அனைத்துப் பாடங்களுக்குமான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் தமது சேவையை உறுதிப்படுத்தக் கோரி நேற்று முற்பகல் 10 மணியளவில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலிலிருந்து வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வரைக்கும் தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ஆகியோரிடம் தமது நியமனத்தை உறுதிப்படுத்தக் கோரி மனுக்களைக் கையளித்தனர்.

கடந்த ஆண்டு தமது தாய்ச் சங்கத்தால் வழக்குத்தொடரப்பட்டு உயர் நீதிமன்றத்தால் சேவையை உறுதிப்படுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்ட போதும் தமது சேவையை உறுதிப்படுத்துவதில் இழுத்தடிப்பு நிலை உருவாவதையடுத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான நடவடிக்கையைக் கல்வி அமைச்சு உடனடியாக மேற்கொள்ளாவிட்டால் தமது பொறுப்புக்களை வரையறுத்துச் செய்யப்போவதாகவும், இதனால் தமிழ்த் தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகள், கணிதப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற இணைப்பாடவிதானப் போட்டிகளை நடத்துவதற்குத் தமது பங்களிப்பை வழங்காது வெறுமனவே சட்டப்படி மாத்திரம் பணியில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமது நியமனத்தை வெகுவிரைவில் உறுதிப்படுத்தித்தரும்படி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-422)


# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/ RE/ 2016-03 | Associated Works for the Four Storied Hostel for the Vavuniya Campus of the University of Jaffna | 13.0 | 90 | C6 or above | Rs. 130,000 | 15th June, 2016 |
| 2 | YA/CWP/ RE/ 2016-04 | Associated Works for the 2 Nos Four Storied Hostels in Kilinochchi for University of Jaffna | 18.5 | 90 | C6 or above | Rs. 185,000 | 15th June, 2016 |
| 3 | YA/CWP/ RE/ 2016-05 | Renovation and Improvements to Fisheries Building, Insectory Block and lecture halls of Faculty of Science, University of Jaffna | 5.6 | 60 | C7 or above | Rs. 55,000 | 15th June, 2016 |
| 4 | YA/CWP/ RE/ 2016-06 | Repairs and Renovations to Natural Science Block Stage-I, University of Jaffna. | 21.4 | 120 | C6 or above | Rs. 200,000 | 15th June, 2016 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00 hrs to 16:00 hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 28th January, 2016** until **15th February, 2016 from 9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of **rupees two thousand (Rs. 2,000/-) for each bid.**
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the 16th February 2016.** Bids will be opened immediately thereafter **on 16th February 2016** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - For the amount as indicated in the above table.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **8th February, 2016 for the all works.**

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**
**26.01.2016**


# திருடிய இருவர் கைது பொருள்களும் மீட்பு

*விளக்கமறியலில் வைக்க உத்தரவு*



யாழ்ப்பாணம், ஜன. 28

வல்வெட்டித்துறையில் 3 இடங்களில் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் திருடியதை ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறையில் மருந்தகம், வீடு, அலைபேசிக் கடை ஆகியவற்றில் சில வாரங்களுக்கு முன்னர் திருட்டு இடம் பெற்றிருந்தது. எனினும் உடனடியாக எவரும் கைது செய்யப்படவில்லை. இந்நிலையில் விசாரணை மேற்கொண்டு 2 பேரையும் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியைச் சேர்ந்தவர்கள் என்றும், 14 மற்றும் 17 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவர்கள் திருடியதை ஒப்புக் கொண்டனர் என்றும் திருடிய பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்குமாறு நீதிமன்று பணித்து வழக்கு ஒத்திவைத்துள்ளது. (த-4-109)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்: 15**
**ஆதன இலக்கம்: 101 (புதிய இலக்கம்)**
**தேனிப்புளியடி வீதி, சண்டிலிப்பாய்**
**கிராமசேவையாளர் பிரிவு: J/143 சண்டிலிப்பாய்**

வட்டாரம் 15 தேனிப்புளியடி வீதி , சண்டிலிப்பாய் ஆதன இலக்கம் 101 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயில்பற்று சண்டிலிப்பாய் இறை " பீ அடைப்பு கெலிவளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 13.5 கொண்ட) இவ்வாதனமானது மானிப்பாய் மார்க்கற் லேனைச்சேர்ந்த சொர்ணலிங்கம் பெண் சிவகுமாரி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சண்டிலிப்பாய் மேற்கு சண்டிப்பாய்ச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெயரூபன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.நா. அரியபுத்திரன் முகதாவில் நிறைவேறிய 1791 ஆம் இலக்க 2014.08.28 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆணைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "பீ அடைப்பு கெலிவளவு" நிலப்பரப்பு 03 குளி 13.5 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் சிவசுப்பிரமணியம் ஜெயரூபன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஆசிரியரது வீட்டில் கொள்ளையடித்தோர் சிக்கினர்

## நகைகளும், பணமும் மீட்பு மன்னார் பொலிஸார் அதிரடி

மன்னார். ஜன. 28

மன்னார் எழுத்தூர் கிராமத்தில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மற்றும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.



ஒரு பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரை தேடி வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மன்னார் எழுத்தூர் கிராம அலுவலகர் பிரிவில் வசித்து வரும் முருங்கன் பாடசாலை ஆசிரியரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் ஆசிரியர் அவரது மனைவி மற்றும் தந்தை ஆகியோரை கண்மூடித்தனமாக தாக்கிய பின் அவர்களைக் கட்டி வைத்து வீட்டில் இருந்த பணம் மற்றும் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தின் உபபொலிஸ் பரிசோதகர் ஆர். ஆர்.சரத் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸ் குழுவினர் பிரதான சந்தேகநபர்கள் 3 பேரையும் அவர்களுக்கு உதவியதாக கூறப்படும் 4 பேர் உள்ளடங்கலாக 7பேரைதற்போது கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேக நபர்கள் 3 பேரும் எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, புத்தளம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த மன்னார் பொலிஸார் குறித்த பிரதான சந்தேகநபர்களை முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்றவர், திருடப்பட்ட நகைகளை விலைக்கு வாங்கியவர்கள் என மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் பயன்படுத்திய முச்சக்கர வண்டி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் புத்தளம் பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன என்றும், கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்ட நகை கள் மீட்கப்பட் டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 11 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் பணமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர்கள் மூவர் உட்பட ஏழு பேரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின்பின் குறித்த சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று மன்னார் பொலிஸ் நிலையத்தின் உபபொலிஸ்பரிசோதகர் ஆர்.ஆர்.சரத் தெரிவித்தார்.

(ற-56)

வெளிவந்துவிட்டது

ஆசிரியர்
திரு.சி. பிரணவனின்
ICT நூல்
பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
நாடு பூராகவும் உள்ள
புத்தகக் கடைகளில்
கிடைக்கும்
தொடர்பு:
077 6679500



வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு நிர்வாக சம்பந்தமான வேலையாளர்கள் தேவை.
* மேற்பார்வையாளர்கள்
* களஞ்சிய காப்பாளர்கள்
O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
தொடர்புகளுக்கு:
077 077 1377, 077 966 0885

வீடு தேவை
தொடர்பு:
071 239 2626
யாழ். மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

காணி விற்பனைக்கு
தொடர்பு:
077 6916 980
பருத்தித்துறை வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருபாலை கிழக்கு றோட்டில் வீடு கட்டக் கூடிய 11 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

கணினி வகுப்புக்கள்
PHOTOSHOP
சனி, ஞாயிறு
9.00 AM-10.00AM
IPS Thirunelveli Mobile : 0766852529
ஆரம்பம் : 30,31/01/2016

கணினி வகுப்புக்கள்
TALLY ACCOUNTING
IPS Thirunelveli Mobile : 0766852529
ஆரம்பம் : 30,31/01/2016
சனி, ஞாயிறு
10.00 AM-11.00AM

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
30.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளருக்கு காரியதரிசி தேவை
தகைமைகள்
* சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும். (இலகுரக வாகனம்)
* ஆங்கிலத்தில் உரையாட கூடியவரும் கணினியில் தட்டெழுத்து தெரிந்திருத்தல் வேண்டும்.
* வயதெல்லை 25 - 45
* ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 070 250 2502



உ

சிவமயம்

### திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிக்கென சிலர் நிதி சேகரிக்க முயல்வதாகச் செய்தி கிடைத்திருக்கின்றது. ஆலயத் திருப்பணிக்கு நிதி சேகரிக்க எவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதனையும். அப்படி யாரும் நிதி சேகரிக்க முயற்சித்தால் எங்களின் கவனத்திற்கு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆலய திருப்பணிக்கு நிதி உதவி செய்யவிரும்பும் அடியார்கள் ஆலயக் கணக்கிற்கு " A/C Payee " காசோலை. காசுக்கட்டளை மூலமாக அல்லது நேரில் ஆலய அலுவலகத்தில் நன்கொடையைச் செலுத்தலாம்.

அ.திருநாவுக்கரசு
செ.இராகவன்
இணைச் செயலாளர்கள்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

தொடர்பு : 023 205 0800, 023 323 0034, 011 258 5975

காத்தருடைய பரிசுத்தவான்களின் மரணம்
அவர் பார்வைக்கு அருமையானது. சங்கீதம் 116:15

### நன்றி செலுத்தும் ஆராதனை அழைப்பு



06.12.2015 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது அன்புச் செல்வன்

**சத்தியசிவம்**
**யோசுவா அன்ட்று**

அவர்களின் நினைவு நாள் நிகழ்வு இன்று (28.01.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ள ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
26 . 10 . 1947



இறப்பு
25 . 01 . 2016

**அமரர் வேலும்மயிலும் கணேசமூர்த்தி ஐயா**

அமரர் வேலும்மயிலும் கணேசமூர்த்தி ஐயா அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நாமும் இல்லக்குழந்தைகளும் பேரதிர்ச்சியடைந்தோம். ஆதரவற்றவர்களை அணைத்து நல்வழி காட்டும் அற்புத மனிதர் கணேசமூர்த்தி ஐயா. இவர் எமது இல்லக்குழந்தைகள் மீது அன்பும் பாசமும் கொண்ட ஒருவர். இல்லக்குழந்தைகளின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களின் பராமரிப்பிலும் மிகவும் அக்கறை கொண்டு அயராது உழைத்த உத்தமர். எமது இல்லக்குழந்தைகளை நாம் நல்லமுறையில் வளர்ப்பதற்கு மிக நெருக்கடியான காலத்திலும் பண உதவி உள்ளிட்ட தன்னாலான சகல ஒத்துழைப்பையும் எமக்கு வழங்கி சமூகநேயத்துடன் சமூகதொண்டனாக விளங்கிய பெருமகன். அன்னாரின் இவ்வுலக மறைவானது எமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இருந்தும் மரணம் மனிதனை அழிப்பதில்லை மரணத்தின் பின்னும் நல்ல மனிதர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் நீடு நிலைத்து வாழ்கிறார்கள். அவ்வாறே அமரர் வேலும்மயிலும் கணேசமூர்த்தி ஐயா அவர்களும் எம்மவர் அனைவரின் மனத்திலும் நிலைத்து வாழ்கிறார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

தி.இராசநாயகம் தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.

# ஹோமாகம பதற்றநிலை குறித்து விசாரணைக்குப் பிரதமர் உத்தரவு

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரானகலகொட அத்தே ஞானசார தேரரை விளக் கமறியலில் வைக்குமாறு உத்த ரவுபிறப்பிக்கப்பட்டதையடுத்து,நீதி மன்ற வளாகத்தில் ஏற்பட்ட பதற் றநிலை தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதொரு அறிக்கையைச்சமர்ப்பிக்குமாறு,பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு உத் தரவிட்டுள்ளார்.விசாரணை அறிக்கையை மல்வத்து மகாநாயக்கதேரர்,கோட்டை விகாராதிபதிஆகியோருக்குச்சமர்ப்பிக்குமாறு தான் பணிப்புரை விடுத்துள்ளதாகப் பிரதமர் கூறினார்.நாடாளுமன் றத்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை ஒத்தி வைப்புவேளை,பிரே ரணை மீதான விவா தத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறியவை வருமாறு, ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் துரதிர்ஷ்ட மான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. சந் தியாஎக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்த விவகாரத்தால் கலகொட அத்தே ஞானசார தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது நீதி மன்றத்தின் தீர்ப்பு. நீதிமன்றத் தீர்ப்பை மதித் துச் செயற்படுவது அவ சியம்.ஆனால்,நீதிமன்ற வளாகத்துக்குச் சென் றுள்ளசிலகும்பல்,ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. காவியுடை போர்த்திய சிலரும் அங்குஇருந்துள் ளனர். நீதிமன்றத்துக் குள்ளே செல்வதற்கும் முற்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர் பில் விசாரணை நடத்தி முழுமையான தொரு அறிக்கையைமல்வத்து மகாநாயக்கதேரர்,கோட்டே மகா நாயக்க தேரர் ஆகியோருக்கு வழங்கு மாறுநான் பொலிஸா ருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளேன். சட்டம் என்பது அனைவருக்கும் சமனானது. அதற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்களைப் பார்க் கையில் பௌத்தன் என்ற வகையில் வெட்கமாக இருக்கிறது என்றார். அதேவேளை, இலங் கையின் நீதிமன்ற கட்ட மைப்பைப் பாதுகாக்க வேண்டும். அதைப் பலப் படுத்தவேண்டும்.எனவே, ஜனாதிபதி கூறிய விட யத்தில் தவறு இல்லை. தேவையேற்பட்டால் ஆலோசனையைப் பெறலாம். உண்மை நல்லிணக்கஆணைக்குழு அமைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(த-சி)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
25
.
10
.
1928

உதிர்வு
08
.
02
.
2015

அமரர் **வள்ளியம்மை சுப்பிரமணியம்**
(அல்வாய்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவமாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவராய் வாழ்ந்து எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்ததம்மா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

இலகடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்

நீங்கா உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி


**லயன் செல்லர் துரைசிங்கம்**
(ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி யாழ் கல்வித் திணைக்களம்)



சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியை திருமதி S.A. சிற்சபேசன் அவர்களின் அன்புத் தந்தையார் காலமான செய்தி அறிந்து மனவேதனை அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தரம் 2B மாணவர்களும் , பெற்றோர்களும்
சென்ஜோன்ஸ் கல்லூரி

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கதிரவேலு குணரத்தினம்.**
(டிங்கர் – குணம்)

தோற்றம்
05.05.1944

மறைவு
08.02.2015

திதி: 28.01.2016

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து எமைப்
- பார்த்திட்ட பாசமே
ஒருகால் நினைந்துமை துதிக்கவென்றெண்ணித் தொடங்கிய
- வரிகளிதனைதிருமால் தாழ்
பணிந்தெட்டுத் திசையுமுள்ள நின் அன்பர்க்கும் திடமாகச்
- சொல்லிடவே

சிறுகோல் கொண்டு எமதெண்ணம் இங்கு நாம்
வடிக்கின்றோம் நின் நிலையான சாந்தி வேண்டி
நீராண்ட இராச்சியம் நீராவியாகிப்போய் ஓராண்டு ஓடினாலும்
பாராண்ட மன்னர்போல் எமைக்காத்து வந்த விதம் எம் மன மீது
- படிந்த அதனால்

நூறாண்டு சென்றிடினும் நீறாகும் வரையிலே நிந்தன்
- நினைவில் நாம் வாழ்ந்து நிற்போம்
நின்னுயிர் வேருண்டி அவன் தாளில் விருப்புடனே உறைந்
- திருந்து வெகுகாலம் சாந்தியுறவே
கார்மேகம் சூழ்ந்திட்ட கைலாசமலையானைக் கரம் கூப்பி
- வேண்டி நிற்கும்

கராஜ் லேன்,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (68380) (13.17.18)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
22.03.1945



மறைவு
29.12.2015

## அமரர் காசிப்பிள்ளை அருளம்பலம்
(அருள் - ஆனந்த பிடைவையகம் - சங்கானை)

கடந்த 29.12.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் காசிப்பிள்ளை அருளம்பலம் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் 28.01.2016 வியாழக்கிழமை (இன்று) கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியை கள் 30.01.2016 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டும், சரீர உதவிகள், பிற உதவிகள் புரிந்த அனைத்துள்ளங்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பை அனைவரும் தயவுகூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்)

அராலி வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இந்திரன் சண்முகலிங்கம்**
(டொமினிக்)

மண்ணின் மைந்தனாய்
மக்களின் தோழனாய்
மகத்தான சேவை செய்து
மக்கள் மனதில் இடம் பிடித்தவரே
மனைவியும் மகளும்
உமையிழந்து வேதனையில் வாட
மகத்தான தோழர்கள் நாம் உமையிழந்து
தவிக்க இவ்வுலகை விட்டு நீங்கி
இறைவனடி சேர்ந்து
ஆண்டொன்று சென்றாலும்
ஆண்டுகள் பல எம்முடன் வாழ்வீர்.

தோற்றம்
20.01.1963

மறைவு
08.02.2015

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதிச் சட்டம் இல்லாதமையால் முத்திரை வரி வருமானம் இழப்பு


யாழ்ப்பாணம். ஜன. 28
வட மாகாண சபையில் நியதிச் சட்டம் இன்மையால் காணி உறுதிகள் கை மாற்றம் செய்யப் படும்போது சரியான பெறுமதிக் கான முத்திரை வரி செலுத்தப் படுவது கிடையாது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வட மாகாணத்தின் கீழ் உள்ள 5 நிர்வாக மாவட்டங்களின் மாவட் டச் செயலகங்களிலும் தற்போது கை மாற்றப்படும் காணி களுக் கான பெரும்பாலான உறுதி களில் உண்மைப் பெறுமதிகள் பதியப்படுவதில்லை. மாகாண சபையில் நியதிச் சட்டம் இன்மை யால் காணி உறுதிகள் கை மாற்றம் செய்யப்படும்போது சரியான பெறுமதிக்கான முத்திரை வரி செலுத்தப் படுவது கிடையாது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

குறிப்பாக வட பகுதியில் தற் போது காணிகள் மில்லியன் ரூபா பெறுமதிக்குக் கை மாறுகின்ற போதும் உறுதிகளில் சில லட்சம் ரூபாவே பெறுமதி எழுதப்படுகின் றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு பல பில் லியன் ரூபா அரசுக்கு வர வேண் டிய வருமானம் கறுப்புப் பணமாக மாறுகின்றது.

> வட மாகாணத்தின் கீழ் உள்ள 5 நிர்வாக மாவட் டங்களின் மாவட்டச் செயலகங்களிலும் தற்போது கை மாற்றப்படும் காணிகளுக்கான பெரும்பாலான உறுதிகளில் உண்மைப் பெறுமதிகள் பதி யப்படுவதில்லை.

இலங்கையின் ஏனைய மாகா ணங்களில்மாகாண சபைகள் மூலம் நியதிச் சட்டங் கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் அலு வலகம் உருவாக் கப் பட்டுள்ளது. காணி களை கை மாற்றுவ தானால் முதலில் அந் தப் பெறுமதி தொடர் பாக தீர்மானச் செய லகத்திற்கு விண்ணப் பித்து அவர் கள் தீர்மா னிக்கும் பெறுமதிக்குக் குறையாத விலை நிர்ணயத்திற்கே உறுதி கள் எழுதப்படும். ஆனால் வடக்கு மாகாண சபையில் இதுவரைக் கும் இதற்கான நியதிச் சட்டம் இன்மையால் இப் பணி இடம் பெறுவது கிடையாது. இதனால் முத்திரை வரியாகக் கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப் படுகின்றது என்று தெரிவிக்கப்பட் டது. (ற-101)



சரித்திரப் புகழ் பெற்ற நல்லூர் கைலாய பிள்ளையார் ஆலய இராஜகோபுரத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற் றுக்கிழமை தைப்பூசத் தினத்தன்று நடைபெற்றது. இராஜ கோபுரத்துக்கான அடிக்கல்லை வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் உட்பட மற்றும் தொண்டர்கள் குருமார் களும் நட்டனர். (ற-86)

## வரலாற்று ஆவண இறுவட்டும் நூல் வெளியீட்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜன.28
தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையம் நடத்துகின்ற லய ஞான குபேரபூபதி தெட்சணா மூர்த்தியின் வரலாற்று ஆவண இறுவட்டு மற்றும் நூல் வெளி யீட்டு விழா நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை, மாலை அமர்வுகளாக நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள் ளன.

தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையத்தின் தலைவர் க.சோம சேகரம் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதர் ஆறு முகம் நடராஜன் கலந்து கொள் ளவுள்ளதுடன் காலை அமர் வின் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் முன்னாள் துணைவேந் தரும் சமூகவியல்துறைத் தலை வருமான சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் வட மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் உதவிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரனும், மாலை அமர்வின் சிறப்பு விருந்தினர் களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள்.தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், ஜப்பான் சுட்சுயின் பல்கலைக் கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண் முகதாசும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து காலை 8.30 மணியளவில் ஆரம்பமா கும் காலை நிகழ்வுகளில் தலை மையுரையை தவில் மேதை தெட்சணாமூர்த்தி அமையத்தின் தலைவர் மற்றம் பொறியிய லாளர் க.நற்குணமும் நினை வுரையை சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், வெளியீட்டுரையை தென்னிந்தி ய திரைப்பட இயக்குநர் அம்சன் குமாரும்,நினைவுப் பகிர்வை தவில் வித்துவான் லயஞான சிரோன்மணி இ.புண்ணிய மூர்த்தி யும் நிகழ்த்தவுள்ளனர்.

மாலை அமர்வுகளின் சிறப்பு நிகழ்வுகளாக யாழ்ப்பாணத்தின் முன்னணி வாய்ப்பாட்டுக் கலை ஞர்கள் மற்றும் வயலின், மிரு தங்க வித்துவான்கள் வழங்கும் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் இசைநிகழ்வுஇடம்பெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு பிரபல வயலின் மேதை கன் னியாகுமரி அம்மாவின் பிரதம சிஷ்யர்களான தமிழ்நாடு திரும ருகல் கணேஸ் - தினேஸ் சகோத ரர்களின் வயலின் இசை நிகழ் வும் மாலை அமர்வின் இறுதி நிகழ்வாக மெண்டலின் சிவகுமா ரின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன. (ற-ரி2)

## வர்த்தகருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜன.28
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 17 வர்த்தகர்களுக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக் கப்பட்டது.

யாழ்.மாவட்ட விலைக்கட்டுப் பாட்டுப் பகுதியினரால் பிர தேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர் பரிசோதனையின்போது நிறை குறைவாக பொருள்கள் விற்பனை செய்தமை விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை, அதிகரித்த விலைக்கு பொருள் களை விற்பனை செய்தமை, திகதி காலாவதியான பொருள் களை விற்பனைக்கு வைத்தி ருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக் களுடன் 17 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன் றில் வழக்குகள் தாக்கல் செய்தி ருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது வர்த்தகர்கள் குற் றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து வர்த்தகர்களுக்குத் தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அப ராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

## வழிப்பறிச் சந்தேகநபர் கைக்குண்டுடன் கைது

யாழ்ப்பாணம், ஜன.28
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்ற வழிப்பறி மற்றும் கொள்ளைச் சம்பவங் களுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் இளைஞர் ஒருவர் கைக் குண்டுடன்கைது செய்யப்பட்டுள் ளார் என மானிப்பாய் பொலி ஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரக சியத் தகவலை அடுத்து இணு வில் வாசிகசாலைக்கு அண் மையில் பதுங்கியிருந்த பொலி ஸார் குறித்த இளைஞரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் இணுவில், தாவடி, மானிப்பாய் பகுதிகளில் வீதியில் தனியாகச் செல்வோரை வழி மறித்து கொள்ளைகள் மற் றும் வழிப்பறிகளில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் விசார ணையின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித் தனர். இவர் எட்டுக்கும் மேற்பட்ட குற் றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)

## வடமராட்சிக் கடற்பகுதியில் கரைவலை மீன்பிடி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.28
வடமராட்சி கிழக்குக் கடற்பகுதி யில் கரைவலையைப் பயன் படுத்தி மீன்பிடிக்கும் பணிகள் கடந்த தைப்பூச தினத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்கரைப் பகுதியில் அதற் கான வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதால் கடல் அலை மற்றும் அதன் கடும்சீற்றம்காரணமாகமீன்களின் பிடிபாடு குறைவாகவே காணப் படும்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணத்தால் அடுத்து வரும் நாள்களில் கரை வலையை முழு மையாகப் பயன்படுத்தி மீன்பிடி யில் ஈடுபடவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-17)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.28
சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் நாளை வெள்ளிக் கிழமை காலை 7.30 மணி முதல் மு.ப. 9.10 மணி வரை இடம்பெற வுள்ளன.

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வாமதேவ சிவாச்சாரியார் தலைமையில்இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் அடிய வர்கள் அனைவரையும் கலந்து கொண்டு இறைய ருளைப்பெற்றுக்கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-ரி2)

## டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு அஞ்சல் திணைக்களமும் பங்களிப்பு

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

சாவகச்சேரி, ஜன.28
தென்மராட்சிப் பிரதேசத்தில் சுகாதாரத் திணைக்களத்தால் மேற் கொள்ளப்பட்டு வரும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக் கையில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகமும் இணைந்து தம்மாலான பங்களிப்புகளை வழங்க முன்வந்துள்ளனர்.

சாவகச்சேரி அஞ்சல் அலு வலகப் பிரிவுக்குட்பட்ட பிரிவு களில் டெங்கின் தாக்கம் அதி கமாகக் காணப்படும் பகுதி களில் விநியோகிக்கும் அஞ்சல்களுடன், டெங்குக் கட் டுப்பாட்டு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங் களை [illegible] திங்கட்கிழமை தொடக்கம் விநியோகித்து வருகின்ற னர்.

வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகத்தில் அண் மையில் அஞ்சல் அதிபர் களுக்கு இடம்பெற்ற கலந் துரையாடலில் டெங்கு பாதித் துள்ள பகுதிகளில் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற் கொள்ளப் படும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை களுக்கு ஒத்து ழைப்பு வழங் குமாறு பிரதி அஞ்சல் மா அதி பர் அறிவுறுத்தியுள்ளார்.

அதையடுத்து சாவகச்சேரி [illegible] தொடர்புகொண்டு அங்கிருந்து பெறப்பட்ட டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களைப் பெற்று வீடுகளுக்கு அஞ்சல் விநியோகிக்கும் போது துண்டுப் பிரசுரங்களையும் குடியிருப் பாளர்களுக்கு விநியோகித்து வருகின்றனர் எனத் தெரிவிக் கப்பட்டது.

டெங்குக் கட்டுப்பாட்டு செயற் பாட்டு வாரம் இடம்பெறும் காலங்களில்சுகாதாரத் திணைக் களத்தினருடன் இணைந்து அஞ்சல் அலுவலக பணி யாளர்களும் செயற்படவுள்ள [illegible] சாவ கச்சேரி அஞ்சல் அதிபர் தெரிவித்தார். (ற-ஐ-9)

## நெதர்லாந்துப் பெண்மணியின் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம். ஜன. 28
ஆலய வழிபாட்டுக்குச் சென்ற நெதர் லாந்து நாட்டுப் பெண்மணியின் பெறு மதி மிக்க சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்ற நெதர்லாந்து நாட்டுப் பெண் மணி ஆலயப் பாதுகாப்பு வேலிக்கு வெளியே 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான தனது சைக்கிளை நிறுத்தி விட்டுச் சென்று ஆலய வழி பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

வழிபாடு முடித்து வெளியேறிய சமயம் தனது சைக்கிள் திருடப்பட்டுள்ளதை அவர் அறிந்தார். இது தொடர் பில் நெதர்லாந்து நாட்டுப் பெண் மணி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தில் எழுத்து மூலம் முறையிட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலி ஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட் டுள்ளனர். (ற-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் படை வசம் 23,000 ஏக்கர் காணிகள்

## நல்லாட்சி அரசின் காலத்தில் 14 ஏக்கர் மட்டுமே விடுவிப்பு

வவுனியா, ஜன.28
வவுனியா மாவட்டத்தில் படையினர் வசம் பொதுமக்களின் 23 ஆயிரத்து 777 ஏக்கர் காணிகள் உள்ளன. தற்போதைய நல்லாட்சி அரசின் காலப் பகுதியில் 14 ஏக்கர் காணி மட்டுமே படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு மாவட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் மட்டும் 71 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் அதிகமான நிலப்பரப்பு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 23 ஆயிரத்து 777 ஏக்கர் நிலப் பரப்பு மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளடங்குகின்றது.

நல்லாட்சி அரசு பதவியேற்று ஓராண்டுக்கு அதிகமான காலம் சென்றுள்ள நிலையில், வெறும் 14 ஏக்கர் காணியே படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-101)

# ஒட்டுசுட்டானில் விரைவில் தொழிற்சாலை அமையும்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் பனை தென்னை மூலப்பொருள்களைக் கொண்ட கைத்தொழிற்சாலை ஒன்று விரைவில் அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்தார் கைத்தொழில் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்உள்ளபனைதென்னை வளங்கள் உரிய முறையில் கவனிக்கப்படாமல் வீணாகின்றது என்றும், அந்த வளத்தைப் பாதுகாத்து அதனூடாக ஒரு வருமானம் ஈட்ட கூடிய முறையிலான திட்டம் ஒன்றை முன்மொழிய வேண்டும்என்றும்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனைஅடுத்துகருத்துத் தெரிவித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன், தொழிற்சாலை அமைப்பதற்கான காணியை ஒதுக்குமாறு ஒட்டுசுட்டான்பிரதேசசெயலாளருக்குப் பணித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு மத்திய பகுதியில்தான் தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும் அப்போது தான் கொள்வனவு செய்பவர்களில் இருந்து வேலைக்கு வருபவர்கள் வரை அந்த இடத்திற்கு இலகுவாக வரமுடியும். எனவே ஒட்டுசுட்டான் தான் இதற்குப் பொருத்தமான இடம் எனவும் விரைவில் குறித்த இடத்திலேயே பனை தென்னை வளங்களை ஊக்கப்படுத்தும், கைத்தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தரப்படும் என்றும் தெரிவித்தார். (ற-21,ரி7)

# அபிவிருத்தி செய்யப்படாததால் சேவைகள் வழங்குவதில் சிரமம்

## முல்லைத்தீவு அரச போக்குவரத்து அதிகாரிகள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்துத் துறை சார்ந்த எந்த அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மனிதவள தேவைகள் இன்னும் அதிகமாகக் காணப்படுகின்றன என்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில்இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே திணைக்களத்தால் குறித்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 அரச பஸ்களுக்குத் தேவை இருக்கின்ற போதும் 13 பஸ்களே தற்போது சேவையில் ஈடுபடுகின்றன.

இன்னும் 11 பஸ்களும், 31 சாரதிகளுடைய தேவையும் இருக்கின்ற போது 17 சாரதிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ள நிலையில் 14 சாரதிகள் பற்றாக்குறையாகவுள்ளனர்.

39 நடத்துநர்களுடைய தேவை இருக்கின்ற நிலையில் தற்போது 29 நடத்துநர்களே பணியில் உள்ளனர். இன்னும் 10 நடத்துநர்களுக்கு தேவை இருக்கின்றது என்றும், வாகன திருத்துநர்கள் 12 பேர் தேவைப்படுகின்றனர் என்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச பஸ் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தேவைகள் அதிகமாக இருப்பதனாலேயே பொது மக்களுக்குப் பூரணமானசேவைகளைத் தம்மால் செய்ய முடியாது உள்ளது என்றும், தற்போதுள்ள வளங்களைக்கொண்டு இயன்றளவு பொதுமக்களுக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்த அவர்கள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படின் சிறப்பான சேவைகளை வழங்க முடியும் என்றும் சுட்டிக் காட்டினர். (ற-21,ரி7)

# தீயில் எரிந்து வீடு நாசம்; முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவு அலம்பில் தெற்கு பகுதியில் தற்கா லிக வீடு ஒன்று தீயில் எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது. வீட்டிலிருந்த ஒரு லட்சம் ரூபா பணம் உட்பட 10 பவுண் நகைகளும் எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு முல்லைத்தீவு அலம்பில் தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் க.விஜயராசா என்பரது தற்காலிக வீடே இவ்வாறு தீக்கிரையாகி முற்றாக அழிந்துள்ளது.

நிரந்தரமாக வீடு ஒன்றை கட்டுவதால், தற்காலிகமாக போடப்பட்ட வீட்டிலேயே உடைமைகள் அனைத்தும் வைக்கப்படுவதாகவும், அவ்வாறு அனைத்தும் வைக்கப்பட்ட தற்காலிக வீடே தீயில் எரிந்துள்ள தாகவும் வீட்டின் உரிமையாளரால் தெரிவிக்கப்பட் டது.

அந்த வகையில் குறித்த வீட்டினுள் இருந்த ஒரு லட்சம் ரூபா பணம், 10 பவுண் நகைகள், தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள் என அனைத்தும் எரிந்து போயுள்ளன என்று தெரிவித்த வீட்டின் உரிமையாளர் எவ்வாறு தீ பற்றியது என்று தனக்குத் தெரியாது எனவும் தெரிவித்தார். (ற-ஜ-21,ரி7)

# 10,000 குடும்பங்களுக்கு வவுனியாவில் வீடுகள்

## அமைச்சர் ரிசாத் உறுதி

வவுனியா, ஜன.28
வவுனியா மாவட்டத்தில் வறிய குடும்பங்களுக்கு வீடு அமைக்க வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட கடன்களை ரத்து செய்யுமாறு கோரிய அமைச்சர் ரிசாத் பதியுதீன் மேலும் வவுனியா மாவட்டத்தில் வறுமையில் உள்ள 10 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை பெற்று கொடுப்பேன் என்று தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்ததில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

1983 ஆம் ஆண்டுகாலப்பகுதிலிருந்து 1992 வரையான காலப்பகுதில் வவுனியாவில் வீடுகட்ட வறிய குடும்பங்களைச் சார்ந்த பலருக்கு வீடமைப்பு அதிகாரசபை 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையான கடன்களை வழங்கியது.

பலர் தற்போது அதன்னைக் கட்டுவதற்கு வசதியற்றும் உள்ளனர். எனவே கடன் தொகையை ரத்து செய்து அவர்கள் மீளச் செலுத்தவேண்டாம் என்ற அறிவித் தலை வழங்கச் செய்யுமாறும் அவர்களுக்கு நாம் உதவ வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

தற்போது வவுனியா மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளின் தரம் பற்றி பரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது.

இன்னமும் வவுனியா மாவட்டத்தில் 10 ஆயிரம் வீடுகள் வறிய மக்கள் பலருக்கு தேவைப்படுகிறது. 15 ஆயிரம் மலசலகூடங்கள் தேவைப்படுகிறது என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

இது குறித்து கிராமங்களைச் சேர்ந்த கிராம சேவகர்கள், பிரதேச செயலாளர்கள் சரியான தகவலை தந்தால் அவர்களுக்கான வீட்டுத் திட்டம் பெற்றுக் கொடுக்கப்படும்.- என்றார். (ற-ஜ-402)

# முல்லையில் தமிழருக்கு மாற்றுக் காணி வழங்குவதை உடன் நிறுத்த வேண்டும்

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவில் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலத்துக்கு பதிலாக தமிழ் மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்க மகாவலி அதிகாரசபை மேற்கொண்டு வரும் முயற்சிகளை உடன் நிறுத்த வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு எல்லைக் கிராமங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்குச் சொந்தமான 2 ஆயிரத்து 149 ஏக்கர் விவசாய நிலம் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போது மாவட்டத்தை சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தமிழ்மக்களுடையவிவசாயநிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும், அவ்வாறு அபகரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளுக்கு மாற்றுக்காணிகளை வழங்குவதற்கு மகாவலி அதிகாரசபை மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார்.

கொக்குத்தொடுவாய், கருணாட்டுக் கேணி, கொக்கிளாய் ஆகிய எல்லைக் கிராமங்களில் இருந்து 1984 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் வெளியேறியதன் பின்னர் அந்த மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தநிலையில் நிலத்தை இழந்த மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நிலை இவ்வாறிருக்க அபகரித்து சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளித்த காணிகளுக்கு மாற்றாக மக்கள் மானாவாரி நெற்செய்கை மேற்கொண்டுவரும் நிலங்களை வழங்குவதற்கு மகாவலி அதிகாரசபை கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்திருக்கின்றது.

இதனை அந்த மக்கள் விரும்பவில்லை என்பதுடன் தங்களுடைய நிலங்களே தங்களுக்குத் தேவை என்பதை திடமாக கூறி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் சகல ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று ரவிகரன் மேலும் சபையில் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அல்லது முயற்சிகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என முதலமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்களில் ஒருவருமான க.விவிக்னேஸ்வரனால்கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ஏனைய இணைத்தலைவர்களினால் குறித்த விடயம் தீர்மானமாக எடுக்கப்பட்டது. (ற-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக எல்லைகளை அடையாளப்படுத்தல் ஆரம்பம்

## மக்கள் மீள்குடியமர்வதற்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஜன.28

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நிர்வாக சேவையின் நிமித்தம் காணித் திணைக்களத்தின் ஊடாக பிரதேச எல்லைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட வளலாய், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலும் ஏனைய பகுதிகளான பலாலி கிழக்கு, வடக்கு, தெற்கு பகுதிகள் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலும் உள்ளடங்கும் நிலையில் – இந்த இரண்டு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகள் அளவீடு செய்யப்பட்டு எல்லை பிரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் வளலாயில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

> புதிதாக அமைக்கப்பட்டிருந்த வீதிகளால் அவ்விடங்களின் நிர்வாக எல்லைகளை அறிந்து கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது

அத்துடன் இராணுவத்தால் பலாலி கிழக்கு,தெற்கு பகுதியில் கடந்த காலங்களில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த வீதிகளால் அவ்விடங்களின் நிர்வாக எல்லைகளை அறிந்து கொள் வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது என்று நில அளவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆரம்பக் காலங்களில் நதிகள், மற்றும் வீதிகளைமையமாக வைத்தே நிர்வாகப் பிரிவுகள்பிரிக்கப்பட்டிருந்தன.

நதிகள் இல்லாத காரணத்தால் வீதிகளை அடிப்படையாகக் கொண்டே யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலக எல்லைகள் வரையறுக்கப்பட்டிருந்தன.

இந்தப் பகுதி தற்போது மீள் குடியேற்றப் பகுதியாக காணப்படுவதால் இரு பிரதேச செயலர்களின் பகுதிகளில் உள்ள மக்கள் தமது தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ள இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ஐ-107)

## மக்கள் பயன்பாட்டு இடமாக மாறும் கீரிமலை கல்குவாரி

வலி.வடக்கு, ஜன.28

கொரிய நாட்டு ஒத்துழைப்பு திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம்–கீரிமலை கல்குவாரி பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு பயன்பாட்டுக்கான இடமாக மாற்றப்படவுள்ளது.

முதற்கட்டமாக கீரிமலை மாவிட்டபுரம் வீதியில் அமைந்துள்ள கல்குவாரி யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் அளவிடப்பட்டது.

கடந்த காலத்தில் இந்தப் பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த வேளையில் கற்கள் அகழப்பட்டுள்ள நிலையில் இந்தப் பகுதி பெரும் பள்ளமாகக் காணப்படுகின்றது. அத்துடன் கடல் உள்வரக்கூடிய நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் கொரிய நாட்டு அபிவிருத்தி திட்ட உதவியின் கீழ் முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலப்பரப்பு மூடப்பட்டு அதில் விளையாட்டு மைதானம் மற்றும் பொழுது போக்கு வசதிகள் வாகன தரிப்பிடங்கள் அமைக்கப்படவுள்ளது என்று வலி. வடக்குப் பிரதேச செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ஐ-ஐ-86)

## சாவா. வைத்தியசாலை முன் ஒளிராதுள்ள வீதி விளக்குகள்

### திருத்தம் செய்யுமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.28

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள தெரு விளக்குகள் ஒளிராதுள்ளன. அவற்றைத் திருத்தம் செய்து புதிய விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விளக்குகள் ஒளிராமல் இருப்பதால் வைத்தியசாலைக்கு நோயாளர்களை வாகனங்களில் மற்றும் கால்நடையாகவும் கொண்டு வரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பெரும்பாலான வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த தெரு விளக்குகள் பழுதடைந்துள்ள போதிலும் அவை உடனுக்குடன் திருத்தப்படுவதில்லை என்றும், இதனால் பல வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக நகரசபை செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை ஒளிமயமான நகரமாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் அனைத்து தெருவிளக்ககளும் புதிதாகப் பொருத்துவதற்கென 400க்கும் மேற்பட்ட தெருவிளக்குகள் கொள்வனவு செய்துள்ளோம். அவற்றை வட்டார ரீதியாகவும், வீதிகள் ரீதியாகவும் பொருத்தும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. வீதி ரீதியாக புதிய தெருவிளக்குகள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதால், ஏனைய வீதிகளில் பழுதடையும் தெருவிளக்குகளுக்கு பதிலாக புதிய விளக்குகள் பொருத்தும் பணிகள் சற்று தாமதமடைந்து வருகின்றன.

நகரசபையால் நியமிக்கப்பட்ட மின்பகுதி பணியாளருடன் இலங்கை மின்சார சபையினர் வாரத்தில் ஒருநாள் பணியாளர் ஒருவரை வழங்கி வருகின்றனர். அவரின் உதவியுடன் புதிய தெரு விளக்குகள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வைத்தியசாலை மற்றும் நகரின் முக்கியமான இடங்களில் பழுதடைந்துள்ள தெரு விளக்குகளுக்கு பதிலாக புதிய விளக்குகள் விரைவில் பொருத்தப்படவுள்ளன – என்றார். (ஐ-ஐ-9)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஜன.28

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-ஜ)

## சுண்டிக்குளம் நீர் ஏரியில் இறால் பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.28

வடமராட்சி சுண்டிக்குளம் கடல் நீர் ஏரியில் வீச்சு வலையைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தக் கடல்நீர் ஏரியில் இறால் வளர்ப்பு மற்றும் அதன் பெருக்கத்துக்கான இறால் பிடிப்பது தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது இறால் பருவகாலம் ஆகையால், நீர் ஏரியில் அவற்றின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனை அடுத்து இறாலை வீச்சு வலையைப் பயன்படுத்திப் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் இறால் கூடுகளைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடல் நீர் ஏரியில் இறால் கூடுகளைப் பயன்படுத்தி இறால் பிடித்தால் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கைப்பட்டுள்ளது. (ஐ-ஐ-17)

## மின்சாரம் திருடிய மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.28

சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்திய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வருகைதந்திருந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை – தீருவில் பகுதியில் மின்சார வயரைச் சேதப்படுத்தி மின்சாரம் பெற்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல் கடந்த திங்கட்கிழமை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதிகளில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்மானியின் சுழற்சியைக் குறைக்க ஊசி வைத்த குற்றச்சாட்டில் ஒருவரும் மற்றும் மின்சார வயரைச் சேதப்படுத்தி மின்சாரம் பெற்ற ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-ஐ-107)

## ஆதார வைத்தியசாலைகளின் வருமானங்களை பயன்படுத்த நலன்புரி சங்கங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.28

ஆதார வைத்திய சாலைகளில் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை, வாகனத் தரிப்பிடங்களால் பெறப்படும் வருமானங்கள் அனைத்தும் வைத்தியசாலைகளின் நோயாளர் நலன்புரி சங்கத்தால் முன்னெடுக்கப்படும் நோயாளர் நலன்களைப் பேணுவதற்கு பயன்படுத்தப்படுவதால், இந்த வருமானங்களை கையாளும் அனுமதி நோயாளர் நலன்புரி சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாண சபையின் அமர்வுகைதடியில்அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாக ஆராயப்பட்டது. அதன் பின்னர் வடமாகாண சபையால் இந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைகளில், நோயாளர் நலன்புரி சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் சிற்றுண்டிச்சாலை, வாகனத் தரிப்பிடம் என்பவற்றில் பெறப்பட்ட வருமானத்தை அரச வருமானமாக மாற்றுவதற்கு எத்தணிக்கும் மகாண கணக்குக் குழுவின் தீர்மானம் தொடர்பான முறைப்பாடு பதியப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடுகளின்படி குறித்த சங்கங்களால் ஈட்டப்படும் வருமானமானது நோயாளருக்கு தேவையான அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் வைத்தியசாலைகளில் இயங்கும் நோயாளர் நலன்புரி சங்கங்கள் திருப்திகரமாக இயங்குவதை உறுதிப்படுத்தி, கட்டடம் அல்லது நிலத்துக்கான வாடகையை மதிப்பீடு செய்து வாடகைப் பெறுமதியை அறவிடுவதற்கும் சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையத்தை நிர்வகிப்பதற்கும் நோயாளர் நலன்புரி சங்கத்தை அனுமதிப்பது என முறைப்பாட்டுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண சபையின் சுகாதாரத் துறை அமைச்சர் சத்தியலிங்கம், நலன்புரி நிலையங்கள் நோயாளர்களுக்காக பல்வேறு சேவைகளை செய்து வருகின்றன. இது போன்ற செயற்பாடுகளால் மேற்கொள்ளப்படும் நல்ல திட்டங்கள் அனைத்தும் மாகாணத்தின் அனைத்து வைத்தியசாலை சாலைகளிலும் செயற்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கான திட்டங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து சுகாதாரத்துறை சார்ந்து நியதிச்சட்டங்கள் உருவாக்கப்படும்போது இந்த நலன்புரி நிலையங்களை எவ்வாறான ஒரு திணைக்களத்தில் பதிவு செய்ய முடியும் எனக் குறிப்பிடப்படவில்லை. எனவே எந்தத் திணைக்களத்தில் இவர்களுடைய பதிவுகள் மேற்கொள்ளப்படும்? என உறுப்பினர் ப்ரஞ்சோதியின் கேள்விக்குப் பதில் வழங்கிய அவைத்தலைவர் சி.வீ.கே.சிஞ்ஞானம், இவர்களுடைய பதிவுகள் அனைத்தும் சமூக சேவைகள் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம் அல்லது கூட்டுறவுச் சங்கங்களில் பதிவை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார். (ஐ-ஐ-ரி5)

## நீதிமன்றால் உழவு இயந்திரம் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜன.28

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நீதிமன்றால் கடந்த வெள்ளிக்கிழமை 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட உழவு இயந்திரம், மீண்டும் சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பயன் படுத்தப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைபற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருரே இவ்வாறு மீண்டும் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர் ஆவார். அரியாலைப் பகுதியில் மணல் அகழ்ந்து கொண்டு சென்ற வேளை குறித்த உழ்வு இயந்திரம் கல்வியங்காடு பகுதியில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ஐ-ஐ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகளை விசாரிக்க ஆணைக்குழு வேண்டும்

## அரசை வலியுறுத்திக் கையெழுத்து வேட்டை ஆரம்பம்



கொழும்பு, ஜன 28
ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமற் ஆக்கப்பட்டமை மற்றும் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவை அரசு உடன்நிறுவவேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பு கோட்டையில் நேற்றுமுன்தினம் முதல் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும் எதிராக இடம்பெற்ற அனைத்துக் குற்றங்களையும் விசாரணைசெய்ய ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை நியமிக்குமாறு கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. என்றாலும் இதுவரை இந்த விடயம் தொடர்பில் அரசு எந்த வித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. எனவே, இது தொடர்பில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டையில் நேற்றுமுன்தினம் இந்தக் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கையெழுத்து வேட்டையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள் மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர் களின் உறவினர்கள் மற்றும் நாட்டிலுள்ள பல்வேறு ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு பிரதானமாக பிரகீத் எக்னெலிகொட, நிமலராஜன், லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்டவர்களின் கடத்தல், படுகொலை தொடர்பில் நடவடிக்கையெடுக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை அரசு உடன் நியமிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பில் பெறப்படும் கையெழுத்துக்களுடன் கூடிய மனு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# மலையக மக்களின் தனித்துவத்தை பாதுகாக்கும் அரசமைப்பே தேவை

## தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்து

கொழும்பு, ஜன. 28
இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் உரிமைகளை புதிய அரசமைப்பில் உள்ளடக்கவும், இம்மக்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கவும் தமிழ் முற்போக்குக் கூட்டணி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும். அத்துடன், அதிகாரப்பகிர்வின்போது இந்த மக்களுக்கு தனித்துவத்துக்கும், விகிதாசாரத்துக்கும் ஏற்ப அதிகாரப்பரவலாக்கலுடன் கூடிய வேலைத்திட்டமொன்று அவசியமாகும்.

இவ்வாறு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்தியவம்சாவளிமலையகத்தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அண்மையில் சமூக ஆய்வாளர் முத்துலிங்கம் தலைமையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி நிபுணர் குழுவொன்றை நியமித்தது. இக்குழு முதற்கட்டமாகக் கூடி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சில் அமைச்சர் திகாம்பரம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.திலகராஜ், வேலுகுமார், அரவிந்குமார், நிபுணர் குழுவின் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், பேராசியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நிபுணர் குழுவின் தலைவர் முத்துலிங்கம், வரலாற்றில் இழைக்கப்பட்ட அரசியல் ரீதியான பிழை காரணமாக எமது மக்களின் அடிப்படை உரிமை முதல் உள்ளூராட்சி, மாகாண சபை, நாடாளுமன்றம் என அனைத்து அரசியல் உரிமைகளும் ஒடுக்கப்பட்டுள்ளன. எமது சமூகம் நான்காம் இலக்கமாகக் கணிக்கப்படுகின்றது. இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் மலையக மக்களை இன்னமும் இணைக்காததன் காரணமாக இந்தச் சமூகம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்படுத்தப்போகும் அரசமைப்பில் காலம்காலமாக தட்டிக்கழிக்கப்பட்டதுபோல் இம்முறையும் மலையகத் தமிழர்களின் உரிமைகளைத் தட்டிக்கழிக்க முடியாது. எமது மக்களின் தேவை எவை என்று நாம் ஆய்வுசெய்து வருகின்றோம். ஏனையவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது போன்று மலையக மக்களின் அபிலாசைகளும் தனித்துவமான முறையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதிகாரப்பரவலாக்கலின் போது இவர்களுக்கென்று ஒரு தனியான கொள்கை வகுப்பு அவசியமாகவுள்ளது - என்றார். (த-சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் வயிற்றினுள் 8 கிலோ எடையுடைய கல்

### *அகற்றி கிளங்கன் வைத்தியசாலை சாதனை*

ஹற்றன் ஜன.28

அக்கரப்பத்தனை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் வயிற்றிலிருந்து சுமார் 8 கிலோகிராம் எடையுடைய கல்லைத் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி, டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலை சாதனை படைத்துள்ளது.



நீண்ட காலமாகக் கடும் வயிற்று வலியால் அவதியுள்ள குறித்த பெண், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்லும்போது வயிற்றில் கல் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் ஆலோசனையுடன், குறித்த பெண்ணுக்கு நேற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சுமார் நான்கு மணித்தியால அறுவைச் சிகிச்சையின் பின்னர் பெண்ணின் வயிற்றில் காணப்பட்ட 8 கிலோ கிராம் எடையுடைய கல் அகற்றப்பட்டதோடு, பாதிக்கப்பட்ட பெண் நலமாக இருப்பதாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலை அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர் சி.யூ.குமாரசிரி தெரிவித்தார். அத்துடன், குறித்த அறுவைச் சிகிச்சை கிளங்கன் வைத்தியசாலைக்கு ஒரு சாதனை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

# இலங்கையில் பறிமுதல் செய்த 359 யானைத் தந்தங்கள் அழிப்பு



கொழும்பு, ஜன.28

இலங்கையில் பறிமுதல் செய் யப்பட்ட 359 யானைத் தந் தங்கள் நேற்றுமுன் தினம் அழிக்கப்பட்டன. காலி முகத்திடலில் இந்தத் தந்த அழிப்பு நடவடிக்கைகள் பகிரங்கமாக இடம்பெற்றன.

தந்தங்களை அழிக்க ஓர் இயந் திரம் பயன்படுத்தப்பட்டது. அழிக்கப்பட்ட தந்தங்கள் பின்னர் எரிக்கப்படுவதற்காக ஒரு சிமெந் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

இந்தத் தந்த அழிப்பு நடவடிக்கைக்குச் சிறப்பு அதிரடிப் படையினரும் இராணுவமும் கடும் பாதுகாப்பு அளித்தன.

கென்யாவி லிருந்து வந்த ஒரு கப்பலில் கடந்த 2012ஆம் ஆண்டும் மே மாதம் 12ஆம் திகதி இலங்கைக்கு இந்தத் தந்தங்கள் வந்தன. இந்தத் தந்தங்களின் எடை 1528.9கிலோ என் றும் இதன் மதிப்பு சுமார் 387 மில்லியன் இலங்கை ரூபா என்றும் கூறப்படுகிறது.

கடத்தல்காரர்கள் இந்த நடவடிக் கையின் மூலம் இலாபம் எதையும் பெறலாம் என்ற நம்பிக்கைகளைக் குலைக்கவே இந் தத் தந்தங்கள் அழிக்கப்படுவதாக சுங்க இலாகா அதிகாரிகள் கூறினர்.

இந்தத் தந்தங்கள் ஆபிரிக்க நாடான தான்ஸானியாவில் கொல்லப்பட்ட யானைகளிலிருந்து பெறப்பட்டவை என்று அவைகளின் மீது நடத்தப்பட்ட மரபணுப் பரிசோதனைகள் காட்டின. கொல்லப்பட்ட யானைகளுக்காக புத்த பிக்குகள் பிரார்த்தனை ஒன்றையும் நடத்தியிருந்தனர். (கு-சி)

# வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து மங்களவின் நிலைப்பாடு என்ன?

### *சபையில் தினேஷ் எம்.பி. கேள்வி*

கொழும்பு, ஜன 28

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள் அழைக்கப்படமாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். அந்தக் கூற்றை அவர் வாபஸ் பெறமாட்டார். இந்நிலையில், மேற்படித் தரப்பினரின் ஆலோசனை பெறப்படும் எனக் கூறிய வெளிவிவகார அமைச்சரின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவிக்கவேண்டும் என ஐ.ம.சு.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன் தினம்சபையில்வலியுறுத்தினார்.

> அன்னியசெலாவணி வீழ்ச்சி, ரூபா மதிப்பிறக்கம் என்பன பிரச்சினையாக உள்ளன. இந்நிலையில், வெளிநாடுகளுடனான முதலீடுகளை மேற்கொள்வது குறித்து மிக ஆழமாக ஆராயவேண்டும்.

அரசும், வெளிவிவகார அமைச்சும் முரண்பாட்டு நிலையைக் கலைத்து செயற்பட்டால்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரத் தன்மையுடன் கொண்டுசெல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலும் காந்தியின் பேரனான கோபாலகிருஷ்ண காந்தியின் கருத்துகளை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நிராகரித்திருந்ததையும் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

இதன்போதுகட்டார்,தாய்லாந்து,இந்தோனேஷியா, எகிப்து, குவைத், வியட்நாம், சீனா, மலேசியா, பாகிஸ்தான், ஈரான், செக்குடியரசு, இந்தியா முதலான 12 நாடுகளுடன் செய்துகொள்ளப்பட்ட பொருளாதார உடன்படிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை, பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்ட தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை பெரும் பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகிறது. அன்னியசெலாவணி வீழ்ச்சி, ரூபா மதிப்பிறக்கம் என்பன பிரச்சினையாக உள்ளன. இந்நிலையில், வெளிநாடுகளுடனான முதலீடுகளை மேற்கொள்வது குறித்து மிக ஆழமாக ஆராயவேண்டும்.

தூதரக சேவையில் அரசியலுடன் தொடர்புடைய நியமனங்கள் இருக்காது என நல்லாட்சி அரசு கூறியது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழுவின் அங்கத்தவர்கள் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனூடாக நல்லாட்சி அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியுள்ளது.

இதேவேளை – ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்வைத்தீர்கள். பி.பி.சி. செய்திச் சேவைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய நேர்காணலில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள் அழைக்கப்படமாட்டார்கள் என்றுகூறியுள்ளார்.

அந்தக் கருத்தை அவர் வாபஸ் பெறமாட்டார்.

இந்த நிலையில், மேற்படி விடயம் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களின் ஆலோசனை பெறப்படும் என வெளிவிவகார அமைச்சர் முன்னர் கூறியுள்ளார். 3 மாதங்களுக்கு முன்னர் ஒரு கருத்து, பின்னர் ஒரு கருத்தும் கூறப்படுகிறது. எனவே, இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் நிலைப்பாடு என்னவென்று கூற வேண்டும்.

ஜனாதிபதியின் கருத்துக்கு மனித உரிமை கண்காணிப்பகமும் கண்டனம் வெளியிட்டிருந்தது.

இதேவேளை, ஜனாதிபதியின் ஓராண்டு ஆட்சி பூர்த்தியை முன்னிட்டு முன்னாள் தூதுவராக செயற்பட்டவர் கோபாலகிருஷ்ண காந்தி. இலங்கைக்கு அழைக்கப்பட்டு உரையும் ஆற்றினார். இவரின்கருத்துக்களைபீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகா நிராகரித்திருந்தார். அத்துடன், பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்றும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அரசும் வெளிவிவகார அமைச்சும் முரண்பாடான கருத்துகளை வெளியிடுகின்றன.

இந்த முரண்பாட்டு நிலையைக் கலைத்து செயற்பட்டால்தான் ஸ்திரத்தன்மைமிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் – என்றார்.(த-சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமஷ்டி ஆட்சி வடிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டிய வேளை இது

ஏனைய இனத்தவர்கள் போன்று, தமிழ் மக்களும் சமபங்குடன் அரச நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கு கொள்வதற்கான சமஷ்டி ஆட்சிமுறை, வடக்கு-கிழக்கின் இணைப்பு ஆகிய இரண்டும் அவர்களின் தேவைகள்.

அவற்றை வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமான கோரிக்கையை முன்வைத்துள்ளது. அதன் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் சார்பில் அதனை வெளிப்படுத்தி உள்ளார்.

தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய-அவர்களுக்கு வழங்க வேண்டிய-உரிமைகளை வழங்குவதற்கு, சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள் பலரும் முன்னர் விருப்பம் கொண்டிருந்தனர்.

ஆனால், அதற்கு இடையூறாக இருந்தவர்கள், பெரும்பான்மை இனத்தின் இனத்தலைவர்களை திசை திருப்பியதோடு, தத்தமது அரசியல் தேவைகளுக்காக, ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக, இனத்துவேசத்தை விதைத்தனர்.

அது நாட்டின் கறை படிந்த சரித்திரமாகியது; தொடர்ந்தும் அதுவே ஊன்றிப் பதியப்பட்டு, தமிழ் மக்களுக்கு உரிய, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகள், பலவந்தமாகப் பறித்து எடுக்கப்பட்டுள்ளன!

இப்போது, நாட்டின் அரசமைப்பை உருவாக்குவதில், என்றும் இல்லாதவாறு, தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளை வென்று எடுக்க உழைக்க வேண்டியது, அவர்களின் வாக்குகளை வாங்கி, நாடாளுமன்றக் கதிரைகளில்-ஆசனங்களில்-அமர்ந்திருப்போரின் தட்டிக்கழிக்கக் கூடாத கடமையும் பொறுப்பும் ஆகும். அதனை அவர்கள் மனதில் ஊன்றிப் பதிக்க வேண்டும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்கள் வழங்கிய அரசியல் ஆணைகளையும், கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் வரிசைப்படுத்தி, அழுத்திக் காட்டியுள்ளார். அவற்றைத் தொட்டுக் காட்டுவது பொருத்தம்.

நிரந்தரமான அரசியல் தீர்வு, எமது மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவது, நிர்வாகத்தில், ஏனைய இனமக்களைப் போன்று நேரடியாகப் பங்குகொள்ளும் சமஷ்டி ஆட்சி முறை, வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்துப் புதிய மாற்றம் ஒன்றைக் கொண்டு வருதல்-உருவாக்குதல் ஆகியவற்றையும் இப்போதைய அரசு, சுணங்கிச் சிணுங்காமல், செயல் வடிவங்களாக மேலெழுப்ப வேண்டும்.

மொத்தத்தில், புகழ்பூத்த சிங்கள அரசியல் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஷ்டி ஆட்சி முறையே நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது என்ற கருத்தை, உணர்வை உள்வாங்கிச் செயற்படுமாறும், சுமந்திரன் அழுத்திக் கூறியுள்ளார். அது அவர் சார்ந்திருக்கும் அரசியல் கட்சிக்கும் பொருத்தமே.

தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களிடம் மட்டுமன்றி, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ள இப்போதைய கூட்டு அரசிடமும், ஒத்துழைப்பு வழங்குமாறு பகிரங்கமாகக் கேட்டிருப்பது, ஊன்றிப் பதிக்க வேண்டிய விடயம்; விவகாரம் எனலாம்.

சமஷ்டி என்பது நாட்டைப் பிரித்துக் கொள்வதற்கான முன்னோட்டம் என்று இனவாதிகளும், குழப்பம் காய்ச்சி அதில் சூடேற்றி அரசியல் செய்யும் பிரகிருதிகளும், பூதங்கள் போன்று வெளிக்கிளம்புவார்கள். அந்தப் பழைய புலுமாசுகளைப் பொசுக்கி எரித்து-

நாடு பிளவுறாமல், மக்கள் சகோதரத்துவத்துடனும் இன, மத சௌயன்யத்துடனும் வாழ்வதற்கு கால்கோள் இடவேண்டிய வேளை இது. நல்லாட்சி அரசிடம் அதனை எதிர்பார்க்கலாமா....?

# வாக்குறுதிகளை மீறுகின்றாரா ஜனாதிபதி?

சேரலாதன்

அண்மைய நாள்களாக நாட்டின் தென் பகுதியில் இனவாதிகளின் இனவாதச் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. அரசியல்வாதிகளும், இன ஐக்கியத்தை விரும்பாத சில சக்திகளும் இதன் பின்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழுகின்ற இடங்களைக் குறிவைத்து இனவாதச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. வீடுகளில் சிங்க இரத்தம் எனப் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படுவதும், வெடிகள் கொளுத்தி ஆரவாரம் செய்வதும் இடம் பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைவிட தேசியக் கொடியில் சிறுபான்மை இனங்களைப் பிரதிபலிக்கும் அடையாளங்கள் அகற்றப்பட்டுள்ளன. இதனால் தேசியக் கொடியின் மதிப்புக்கும், கௌரவத்துக்கும் மாசுறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### மோசமான செயல்களை ஏற்க முடியாது

ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகைய மோசமான செயல்கள் இடம்பெறுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசு இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. மாறாகவேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், நாட்டில் ஓரளவு அமைதி நிலவுவதைக் காண முடிகின்றது. சிறுபான்மையின மக்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் அச்சமின்றிச் சென்று வருகின்றனர். இதைப்போன்றே பெரும்பான்மையின மக்களும் நடந்து கொள்ள முடிகின்றது. நாட்டில் இன ஐக்கியத்தை விரும்பாத சக்திகளால் இதைப்பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மீண்டுமொரு இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதில் குளிர் காயவே அவர்கள் விரும்புகின்றனர்.

### போரின் வடுக்கள் மறையவில்லை

நீண்ட காலமாக இடம்பெற்ற போர் ஓய்ந்தாலும்அதன் வடுக்கள் இன்னமும் மறையவில்லை. குறிப்பாக போரின் வடுக்களைத் தமிழர்களே அதிகளவில் தாங்கி நிற்கின்றனர். இழப்புக்கள் ஒரு புறமிருக்க பலர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களுக்குச் சொந்தமான பெருமளவு காணிகள் படையி னராலும் பெரும்பான்மையின மக்களாலும் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் காலப்போக்கில் தமிழர்களின் கைகளைவிட்டு நழுவப்போகின்றன என்பதைச்சொல்லித் தெரியவேண்டியதில்லை. இதைவிட காணாமற்போனவர்களை இறந்தவர்களாகவே கருதவேண்டுமன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதால் பெரும் குழப்பநிலையொன்று தமிழர்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

> “தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், நாட்டில் ஓரளவு அமைதி நிலவுவதைக் காண முடிகின்றது. சிறுபான்மையின மக்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் அச்சமின்றிச் சென்று வருகின்றனர். இதைப் போன்றே பெரும்பான்மையின மக்களும் நடந்து கொள்ள முடிகின்றது.”

தென்பகுதி இனவாதிகள் தற்போது அரசை மிரட்டிக் காரியம் சாதிக்கின்ற மனநிலையில் உள்ளனர். சுதந்திரக் கட்சிக்குள் இரண்டு அணிகள் இயங்கி வருகின்றமை இவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. தற்போது சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி வகித்து வருகின்றார். ஆனால் அந்தப் பதவியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை அமர்த்தும் வகையில் காய்கள் நகர்த்தப்பட்டு வருகின்றன. சில வேளை இது சாத்தியமாகும் பட்சத்தில் சுதந்திரக் கட்சியை மகிந்த தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார். இது ஜனாதிபதிக்குத் தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்தி விடும்.

### வரலாற்றில் அதிசயமான நிகழ்வு

அரசியலில் எப்போதுமே எதிரும் புதிருமான நிலையில் காணப்பட்ட சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியில் பங்குகொள்கின்றமை இந்த நாட்டின் வரலாற்றிலேயே அதிசயமானதொரு நிகழ்வுதான். ஆனால் இந்த உறவு நீடிக்குமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது. ஏனென்றால் சுதந்திரக் கட்சியில் உள்ள மகிந்த அணியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவைப் பேணுவதை எதிர்த்து வருகின்றனர். இதன் காரணமாகவே சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர் பிரதமர் தலைமையில் இடம்பெறுகின்ற அமைச்சரவைக் கூட்டங்களில்தாம் பங்கு பற்றப்போவதில்லையென அறிவித்துள்ளனர். ஆகவே அரசு சங்கடங்களை எதிர்கொள்ளப்போகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

### பின்வாங்குகிறார் ஜனாதிபதி

தமக்கு ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தங்கள் காரணமாகவோ என்னவோ ஜனாதிபதி தாம் முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கி வருகின்றார். தமிழ்க் கைதிகளின் விடுதலை, வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு, வித்தியா கொலை வழக்கு, காணாமற் போனவர்களின் விவகாரம் போன்றன ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக இழுபறி நிலையிலயே காணப்படுகின்றன. மேலும் இறுதிப் போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் இடம்பெறுவதைத் தான் ஒருபோதுமே அனுமதிக்கப்போவதில்லை என அவர் கூறியிருப்பது போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. மகிந்த வழியில் தற்போதைய ஜனாதிபதியும் செல்வதற்கு முயற்சிக்கின்றாரா? என்ற சந்தேகத்தையும் அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ளன.

தமிழர்களுக்கு ஒரு சிறு துரும்பை எடுத்துப்போட்டால்கூட தென்பகுதியில் உள்ள இனவாதிகள் துடித்துப் போய்விடுவார்கள். இந்த நாடு எமக்கு மட்டுமே சொந்தமானது. இதில் எவருமே உரிமை கோரமுடியாது என்ற எண்ணம் பெரும்பான்மை மக்களின் மனங்களில் இனவாதிகளால் விதைக்கப்பட்டு விட்டது. இதை அழிப்பதென்பது முடியாத காரியம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# போர்க்குற்ற விசாரணைகளில் அரசின் நழுவல் போக்கு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் பெருமளவு தமிழ்மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்ற உண்மையை எவரும் மறுப்பதற்கில்லை. உலகமே அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என வலியுறுத் தப்பட்டும் வந்தது. அது ஒப்புக் கொள்ளப்பட்டபோதும் பின்னர் இடம்பெற்ற இலங்கை அரசின் பிடிவாதத்தால் சர்வதேச விசாரணை உள்ளக விசாரணையாக மாறிக் கொண்டது. சர்வதேச விசாரணை உள்ளக விசாரணையாக மாற வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் குரலும் ஒலித்தது தெரிந்ததே. போர்க் குற்றவாளிகளாகப் பார்க்கப்பட்டவர்களில் அன்றைய அரசுத்தலைவர் மகிந்தவும், அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலருமாகிய கோத்தபாயவும், படை அதிகாரிகளும் அடங்குகின்றனர்.



இதனால் சர்வதேச விசாரணையை எதிர்க்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். சர்வதேச விசாரணை இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை நிச்சயம் என்பது அவர் அறியாததல்ல. தற்போதைய அரசுத் தலைமைகளும் போர்க்குற்றவாளிகள் என்றவகையில் சிலர் தண்டிக்கப்படுவதை விரும்பவில்லை. அதனாலேயே உள்ளக விசாரணை என்ற விடயத்தை அரசு தூக்கிப்பிடித்ததுடன் அமெரிக்காஇந்தியா என்று அங்கும் இங்குமாக ஓடி ஒருபடியாகத் தனது நோக்கத்தை வெற்றிகரமாக்கிக் கொண்டது.

### அரசும் படையினரும் காரணம்

போர்க்குற்றங்களைப் பொறுத்தவரை பெருமளவு மக்களின் கொலைக்குக் காரணம் அரசும், படையினருமே. இருதரப்பினரின் இசைவும் இணைந்ததாகவே இது இடம்பெற்றது. இதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. இது ஓர் இனத்தை அழிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பதால் ஒரே இனத்தைச் சேர்ந்த ஆட்சித்தலைமைகளும் படைத்தலைமைகளும் இணைந்ததாக இந்த வன்முறைகள் நிகழ்ந்துள்ளது. இந்த உண்மையைச் சர்வதேசமும் தெரிந்து கொண்டும் இலங்கை அரசின் எதிர்பார்ப்புக்கு விட்டுக்கொடுத்துள்ளது. உள்ளக விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை. இலங்கையில் இடம்பெறப்போகும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் சர்வதேசத்தின் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இதன்மூலம் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழியில் இருந்து அவர் விலகிச் செல்ல முயல்கிறார் போலுள்ளது. அதேசமயம் உள்நாட்டுப்பொறிமுறையை உருவாக்கவென உதவும் பொருட்டு ஜப்பான் போர்க்குற்ற விசாரணை நீதிபதி மோட்டு துகுபி இங்கு வருகை தரவுள்ளார். நடைபெறப்போகும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் குறித்த விசாரணைகளில் கலந்து கொள்ளக்கூடியதாக வெளிநாட்டு நீதிபதிகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் கருத்துக்கள் அரசுத் தலைமைகளிடையே காணப்படுகின்றது. எனவே இந்த உள்ளக விசாரணை என்பது அரசினதும் படையினதும் விருப்பங்களை மட்டுமன்றி போர்க்குற்றத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களையும் பாதுகாக்கும் ஒன்றாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

### நம்பிக்கையை இழந்த மக்கள்

பல ஆயிரக்கணக்கான தமிழர்களைச் சாவெடுத்த சம்பவம் இது. அப்போதைய ஆட்சியாளரால் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்ட ஒன்று. சர்வதேச விசாரணை ஒன்றினூடாகத் தமது உறவுகள் குறித்த கொலைகளுக்கான நீதியை எதிர் பார்த்திருந்த மக்கள் அந்த நம்பிக்கையை இழந்துள்ளனர். தமிழ் மக்கள் தமது அபிலாசைகள் நிறைவுபெறும் என்ற எதிர்பார்ப்புடன் ஆட்சியில் அமரக் கைகொடுத்தார்கள். ஆட்சியில் அமர்ந்தவர்களோ போர்க்குற்றங்களின் மூலவர்களெனக் கருதப்படுபவர்களையே சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தத் தயங்கி, உள்ளக நீதி விசாரணைக்கு வித்திட்டுள்ளனர். உள்ளக விசாரணை கேள்விக் குறியானதாகவே தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. சர்வதேசத்தின் பங்களிப்பு போர்க்குற்ற விசாரணைகளில் அவசியம். உள்ளக விசாரணைப் பொறிமுறைகள் நீண்டகாலம் தோல்வியடைந்த வரலாறு உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் நீதி விசாரணையில் நம்பிக்கை வைக்க சர்வதேசத்தின் பங்களிப்பு இதில் அவசியம் என்கிறார் சர்வதேச உண்மைகள் மற்றும் நீதி வேலைத்திட்டம் அமைப்பின் இயக்குநர் யஸ்மின் சூக்கா.

> " இலங்கையில் இடம்பெறப் போகும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் சர்வதேசத்தின் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இதன் மூலம் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதி மொழியில் இருந்து அவர் விலகிச் செல்ல முயல்கிறார் போலுள்ளது. "

## முதியோர் அடையாள அட்டையால் பூரணமான பயன் கிடைக்குமா?

25/04/0190 என இலக்கமிடப்பட்ட முதியோர் அடையாள அட்டை 17.07.2009 இல் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் வழங்கப்பட்டது. இதற்குரித்தானவர் சுகாதார சேவைகள், வங்கிச் சேவைகள், போக்குவரத்து வசதிகள், பொலிஸ் நீதி ஆலோசனைகள், தபாலும் ஓய்வூதியம், அலுவலக அலுவல்கள் போன்ற சேவைகளின்போது முன்னுரிமை பெற உரித்துடையவர்களாவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கியைப் பொறுத்தவரையில் வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட UDRA SENIOR CITIZENS ENTILEMENT CARD மூலமாகச் சலுகையை அனுபவித்து வருகின்றேன். அலுவல்கள் நிமித்தம் சிறிலங்கா தொலைத்தொடர்பு நிலையத்துக்குச் செல்கின்றபோது அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்னை ஓர் இருக்கையில் அமர்த்திவிட்டு எனது தேவையைப் பூர்த்தி செய்கின்றார்கள். மின்சார சபைக்கு மின்கட்டணம் செலுத்தச் சென்றால் அங்குள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் எனது இயலாமையைக் கருதி முன்னுரிமை அளிக்கின்றார்கள். இவ்வாறு பலரும் உதவ முன்வருகின்றபோது சுகாதார சேவைகளில் மட்டும் எனக்கு உதவ யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. மாதாந்தம் சத்திர சிகிச்சைக் கிளினிக், மெடிக்கல் கிளினிக் ஆகியவற்றுக்கும், பல தடவைகள் சத்திர சிகிச்சைத் தியேட்டருக்கும் செல்கின்ற நான் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கின்றது. எனது காலில் ஏற்பட்ட காயத்துக்கு போதனா வைத்தியசாலை 29 ஆம் விடுதிக்கு நாளாந்தம் சென்று மருந்து கட்டும்படி மருத்துவர்கள் பணித்துள்ளார்கள். நாளாந்தம் ஓட்டோவில் சென்று மருந்து கட்டுகின்றேன். மருந்து கட்டிமுடிவடைய காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஆகலாம். ஆனால் முதியோர் அடையாள அட்டையில் குறிப்பிட்டவாறு எனக்கு முன்னுரிமை கிடைப்பதில்லை. சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் எனக்கு வழங்கப்பட்ட முன்னுரிமையை நடைமுறைப்படுத்தும்படி யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரை பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு எனது பணிவான சமர்ப்பணம்.

இ.இராஜேந்திரா, சமாதான நீதிவான்

## பெண்களுக்கு நீதி கிடைக்குமா?

கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை உதயனில் நீதிபதி இளம்செழியனால் எழுதப்பட்ட 'ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சமர்ப்பணமும்' என்ற கட்டுரையானது மனதுக்கு சந்தோசத்தையும், இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு நன்றியுள்ள மாணவனா? என வியக்கவைக்கிறது. நீதிபதி அவர்களின் பணிவு, கீழ்ப்படிவு, சொன்ன சொற் கேட்டல், நன்றியுணர்வு என்பன இன்றைய எம் மாணவர்களுக்கும், மாணவனின் எதிர்காலம் பற்றி அக்கறை கொண்டு கட்டம் கட்டமாக நீ நீதிபதியாக வா என அறிவு கொடுத்து உயர்வடைய காரணமாய் இருந்த தலைமை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம் ஐயா இன்றைய ஆசிரியர்களுக்கும் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. சிறந்ததொரு ஆசிரியத்துவம் அவரை ஆளுமை செய்தது என்பது மறுக்க முடியாத ஒன்று. மாணவ சமுதாயத்தில் போதைவஸ்துக் குற்றங்களை ஒழி என்ற குருவின் சொல் கேட்டு அதன்படி நீதிபதியாக வந்து சமுதாயக் குற்றங்களை ஒழிக்கும் நடவடிக்கையில் துரிதமாக செயற்படும் நீதிபதி, போதைவஸ்தினால் பெண்ணினம் எதிர்நோக்கும் வன்புணர்வுகளுக்கு (வித்யா உட்பட) துரிதமாக தண்டனை வழங்க வேண்டும், எமது சமுதாயத்தில் பெண்கள் வன்முறைகள், வன்புணர்வுகள், படுகொலைகளில் இருந்து மீள ஆவன செய்யவேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

உடுவிலூர் கலா

## சமூக சேவை அதிகாரிகளின் கவனத்துக்கு

யாழ்.பஸ் நிலையப் பகுதியில் இளம்பெண்கள் சிலர் சாம்பிராணிக் குச்சிகள் அடங்கிய பெட்டிகளை விற்பனை செய்வதை அவதானிக்க முடிகின்றது.

இவர்களில் சிலர் கைக் குழந்தைகளைத் தாங்கியவாறு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதைப் பார்க்கும்போது பரிதாபமாக உள்ளது. இவர்கள் பஸ்களில் ஏறி அங்கு அமர்ந்திருக்கும் பயணிகளிடம் தம்மிடமுள்ள பொருளை வாங்குமாறு கேட்கின்றனர். ஆனால் இதற்குச் செவிசாய்ப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் இந்தப் பெண்கள் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

இவர்களின் வறுமை நிலை காரணமாகவே இந்தத் தொழிலில் இவர்கள் ஈடுபட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டதெனக் கருத முடிகின்றது.

சமூக சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

பொன்.மாதவன், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் பெரும் மனிதப் புதைகுழி

## 40 க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்பு



பக்தாத், ஜன.28
ஈராக்கின் மேற்கு பக்தாத் பகுதியான ரமாடி நகரில் மனிதப் புதைகுழியைக் கண்டு பிடித்துள்ளனர்.
பெண்கள், குழந்தைகள் உட்பட 40 க்கும் மேற்பட்டோரின் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். உள்துறை அமைச்சக ஊடகப் பேச்சாளர் சாத்மான், சிவிலியன்களையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கொன்று புதைத்துள்ளனர் எனத் தெரிவித்தார். தடயவியல் நிபுணர்களும், உள்ளூர்ப் பாதுகாப்புப்படையினரும் இணைந்து தோண்டும் பணியில் ஈடுபட்டனர்.
அன்பார் மாகாணத்தின் தலைநகரம் ரமாடி ஆகும். கடந்த வருடம் மே மாதம் ஐ.எஸ். கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதன் பின்னர் அமெரிக்க கூட்டுப் படையின் வான் வழித் தாக்குதலின் உதவியுடன், ஈராக் படையினர் கடந்த மாதம் மீண்டும் ரமாடி நகரை மீட்டனர். இதே போன்ற புதைகுழிகள் ஈராக் மற்றும் சிரியா பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
கடந்த மாதம் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் வட ஈராக்கின் சிஞ்சார் நகரில் 16 புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஈராக்கின் வடக்கு, மேற்குப் பகுதியில், மத ரீதியில் சிறுபான்மை இனத்தவரான யாசிடியினர் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், பெண்கள் பாலியல் அடிமைகளாக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான ஈராக் படையினரின் உடல்கள் புதைகுழிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம்காண பல மாத காலங்கள் எடுக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

# 4 லட்சம் ஆபா
# முடக்க பாகிஸ்

லாகூர், ஜன.28
பாகிஸ்தானில் ஆபாச இணையத்தளங்களை முடக்க அந்நாட்டு தொலைத்தொடர்பு அதிகாரிகள் இணைய வழங்குநர்களுக்குக் கட்டளையிட்டுள்ளனர்.
கிட்டத்தட்ட 4லட்சம் இணையத்தளங்களை முடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த உத்தரவு பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
ஆபாசமான விடயங்களால் இளைஞர் சமூகம் பாதிக்கப்படுவதைத் தடுக்கவும், ஆபாச செயற்பாடுகளை தவிர்க்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தொலைத்தொடர்புப் பிரிவின் கோரிக்கைக்கு இணங்க இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
உச்ச நீதிமன்றத்தால்வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய 4லட்சத்து 29ஆயிரத்து 343 இணையத்தளங்கள் தொலைத்தொடர்பு அதிகாரிகளால் முடக்கப்பட்டுள்ளன.



இந்த முய
குரியவை
பாகிஸ்தா
அந்நாட்டு

# கட்டுக்கடங்காம

## அமெரிக்கக் கண்டத்தில் அதிக பாதிப்பு

வொஷிங்டன், ஜன. 28,
தற்போது அமெரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகளில் சிகா என்ற வைரஸ் நோய் பரவி வருகிறது. இந்த நோய் கர்ப்பத்தில் வளரும் குழந்தைககளின் மூளை வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்கிறது. இதன் மூலம் பிறக்கும் குழந்தைகள் சிறிய தலைகளுடன் பிறக்கின்றன. அது சிக்குன் குனியா, டெங்கு உள்ளிட்ட நோய்களைப் பரப்பும் 'ஏடிஸ்' கொசுக்களால் பரவுவதாக முதலில் தெரிவிக்கப்பட்டது.
தற்போது இந்த நோய் கொசுக்கள் மட்டு
மல்ல. பாலியல் மூலமு
கண்டுபிடிக்கப்பட்டுள்
கிடையே 44 வயது ஆண்
விலும், சிறுநீரிலும் சிகா
தது கடந்த 2013 ஆம் அ
கண்டறியப்பட்டது. அப்
ரத்தத்தில் அந்தவைரஸ் கி
இதை பிரான்ஸ் விஞ்ஞ
கண்டு பிடித்தார்.
அந்தக் கிருமி அவரது
வளவு காலம் இருந்தது
யாகக் கணக்கிட முடியவில்
இந்தக் கிருமி பாலியல் மூ




# ஸை
# செய

மட்ரிட், ஜன
ஸ்பெயினி
மகளைக்
பயிற்சியில்
தியுள்ளது.
விலங்கு
பொறுப்பற்
ர்சித்துள்ள
ஒர்டநீஸ்
குழந்தை இ
எனத் தெரி
இதற்கு ஆ
டுவிட்டரில்
ளனர். மே
டன் இருக்
குறித்த
இன்ரகிறா

# மகத

டன்ரலா, ஜ
பிள்ளையி
இந்தியாவி
டன்தல பிர
பிப்லப் மன்
வன் ஆவா
டால் ஆகி
யுடன் சென்
கலைப் பி
யத்தில் தந்
முடியவில்
யார் தெரி
தான் 9 ஆ
தன்னால்
தனது பெற்
கிடைக்கும்
கின்றனர். ப
படிப்பதற்க
மேலும் மே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாச இணையங்களை
# ஸ்தான் அரசு உத்தரவு



ட்டங்களுக்குட்பட்டு இருத்தல் கட்டாயமாகும்.
2011 ஆம் ஆண்டு ஆயிரம் இணையத்தளங்கள் முடக்கப்பட்டன. அதன் பின்னர் செயல்படுத்தப்பட்ட பிரமாண்டமான முடக்குதல் இதுவாகும்.
இந்தச் செயற்பாட்டுக்குப் பின்னர் ஆபாச இறுவட்டுகளின் விற்பனை அதிகரித்துள்ளது. இது தொடர்பில் பொழுது போக்கு முகவர் தெரிவிக்கையில், மக்கள் சினிமாப் படங்களைப் பார்ப்பதை விட ஆபாசப்படங்களை அதிகம் நாடுகின்றனர்,

த முயற்சி பிரம்மாண்டமானதும், எச்சரிப்புக்
பவை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
ஸ்தா னின் இணையச் சேவை வழங்குநர்கள்
நாட்டு அதிகாரிகளால் விதிக்கப்பட்ட சட்டதி

எனத் தெரிவித்தார். மேலும் 90 சதவீத வருமானம் அவற்றின் மூலம் கிடைக்கின்றது எனவும் கூறினார். (த-ரி4)

# மல் பரவும் சிகா வைரஸ்

திப்பு

மூலமும் பரவுவது
ட்டுள்ளது. இதற்
ஆணின் விந்தணு
சிகா வைரஸ் இருந்
ஆம் ஆண்டிலேயே
. அப்போது அவரது
வரஸ்கிருமி இல்லை.
விஞ்ஞானி ஒருவர்

வரது உடலில் எவ்
ந்தது என்பதை சரி
டியவில்லை. எனவே
ரியல் மூலமும் பரவ

வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். சிகா என்ற இந்த வைரஸ் கிருமி கடந்த 2008 ஆம் ஆண்டிலேயே உருவாகி இருக்க வாய்ப்பு உள்ளதாகக் கணித்துள்ளனர். இந்த நிலையில், அமெரிக்காவைக் கடந்து ஐரோப்பிய கண்டத்துக்கும் சிகா நோய் இன்று பரவியுள்ளது.
இங்குள்ள ஆர்ஹஸ் நகரைச் சேர்ந்த ஒருவர் சமீபத்தில் அமெரிக்க நாடுகளுக்குச் சென்று வந்தார். அவரைப் பரிசோதித்ததில் சிகா நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது என டென்மார்க் நாட்டின் பிரதான தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.
இதனைக்குணப்படுத்தும் மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஏற்கனவே பிரேசில் நாட்டில் ஆயி ரத்துக்கும் அதிகமான குழந்தைகள் சிகா நோய்ப் பாதிப்புடன் பிறந்துள்ளன. இதனால் சில ஆண்டு காலங்களுக்குக் கர்ப்பம் தரிக்க வேண்டாம் என பிரே சில், லத்தீன் அமெரிக்க நாடுகளில் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# தனது உயிரைக் கொடுத்து இரண்டு மாணவர்களை காப்பாற்றினார் அதிபர்



நியூயோர்க், ஜன 28
அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் அதிபர் ஒருவர் தனது உயிரைக் கொடுத்து பாடசாலைப் பிள்ளைகள் இருவரைக் காப்பாற்றிய சம்பவம் அனைவரையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.
நேற்று முன்தினம் சூசன் ஜோர்டன் என்னும் அதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கட்டுப்பாட்டை இழந்த பாடசாலை பேருந்து இரு சிறுவர்கள் மீது மோத வந்துள்ளது. அந்த நேரத்தில் இடையில் சென்று அவர்களைத் தள்ளிவிட்டுக் காப்பாற்றிய கணத்தில் சூசன் விபத்தில் சிக்குண்டார். இந்தச் சம்பவத்தில் சிறுவர்கள் இருவரும் காயங்களுடன் உயிர் தப்பினர். மேலும் 10 மாணவர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டனர். கட்டுப்பாட்டை இழந்த பேருந்தின் பாதைகளில் நின்ற பலரை அவர் தள்ளிவிட்டுக் காப்பாற்றியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என இண்டியானா பொலிஸ் தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர். தற் செயலாக, எதிர்பாராத விதத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பேருந்துச் சாரதி தெரிவித்தார்.
மேலும் 20 வருடங்களாக அதிபராகப் பணியாற்றும் சூசன் அனைவரின் மதிப்புக்குமுரியவர். போக்குவரத்தின்போது சிறுவர்களிடம் அக்கறையுடன் நடந்துகொள்வார் எனவும் தெரிவித்தார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்றும் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர். (த-ரி4)




# கையில்குழந்தையுடன் பயிற்சி
# செய்த காளையை அடக்கும் வீரர்

ட், ஜன.28
பயினின் காளை அடக்கும் வீரர் ஒருவர் தனது
ளைக் கையில் ஏந்திக் கொண்டு காளையுடன்
ற்சியில் ஈடுபடும் படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்
ள்ளது.
ங்கு உரிமை ஆர்வலர்கள் இதனைப்
றுப்பற்ற முட்டாள்தனமான செயல் என விம
துள்ளனர். இதற்குப் பிரான்சிஸ்கோ ரிவேரா
நீஸ் என்ற அந்த வீரர், தனது கையில்
ந்தை இருக்கும் வரை எந்த ஆபத்தும் இல்லை
த் தெரிவித் துள்ளார்.
ற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக சக வீரர்கள்
ட்டரில் ஆதரவான பதிவுகளை பதிவேற்றியுள்
ர். மேலும் தமது குழந்தைகளும் மிருகங்களு
இருக்கும் படங்களைப் பதிவேற்றியுள்ளனர்.
த்த ஒளிப்படம், கடந்த திங்கட்கிழமை
ரகிறாமில், 5 மாதக் குழந்தைக்கு அறிமுகம்



என்ற தலைப்புடன் பதிவேற்றப்பட்டிருந்தது. வீரர் ரிவேரா நாட்டின் காளையை அடக்கும் சிறந்த வீரர்களில் ஒருவர் ஆவார். கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வயிற்றில் காளை முட்டியதில் இருந்து தொழில் ரீதியான காளை அடக்கும் போட்டியில் கலந்து கொள்வதை இடைநிறுத்திக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# கனுடன் கல்வி கற்கும் பெற்றோர்

ரலா, ஜன.28
ளையின் வகுப்பில் பெற்றோரும் படிக்கும் விந்தை
தியாவின் மேற்கு வங்காள மாவட்டமான நாதியவில்
தல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
லப் மண்டால் என்பவர் 11 ஆம் வகுப்பு படிக்கும் மாண
ஆவார். தந்தை பால்ராம் மண்டால், தாய் கல்யானி மண்
ஆகியோருடன் பாடசாலைக்கு, பாடசாலை சீருடை
ன் சென்று ஒரே வகுப்பில் குடும்பமாகப் படித்து வருகின்றனர்.
லப் பிரிவில் மூவரும் கற்கின்றனர். தனது சிறுபிரா
தில் தந்தையை இழந்த காரணத்தால் தொடர்ந்து படிக்க



யவில்லை. அதனால், தான் தொடர்ந்து படித்துப் பட்டதாரியாக விரும்புவதாகப் பிப்லப்பின் தந்தை
தெரிவித்தார்.
ர் 9 ஆம் ஆண்டு கல்வி கற்கும் போதே தன்னைத் திருமணம் முடித்து வைத்துவிட்டனர், இதனால்
னால் கல்வியைத் தொடர முடியவில்லை எனப் பிப்லப்பின் தாயார் தெரிவித்தார்.
து பெற்றோர் தனது நண்பர்களைப் போன்றவர்கள், உலகில் எத்தனை பேருக்கு இவ்வாறான சந்தர்ப்பம்
டக்கும் என பெருமிதத்துடன் பிப்லப் கூறினார். பிப்லப்பின் பெற்றோர் படிப்பதற்கு ஆர்வம் காட்டு
றனர். படிக்க வேண்டும் என்ற ஆசையுடன் பலதடவைகள் பாடசாலைக்கு வந்தமைதத்தை அடுத்து அவர்கள்
பதற்கான ஏற்பாடுகளை பாடசாலையின் அதிபர் செய்தார் என வகுப்பு ஆசிரியர் தெரிவித்தார்.
லும் மேல்நிலை கல்விச் சபை அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
ஆத்தியடி, புலோலி

# சோதிடம்

சோதனை+திடம்=சோதிடம். இந்து வேதத்தின் ஆறு பாகங்களில் சோதிடம் ஒன்று. பலன் அறியவும், சில குறித்த சம்பவங்கள் நடைபெறும் தருணங்களை அறியவும் பயன்படுகிறது. இந்திய முறையில் வாக்கியம், திருக்கணிதம்என இருவகை உள்ளன.

வாக்கிய கணிதம் ஏற்பட்ட பின்னர் விஞ்ஞானத்தில் நிரூபிக்கப்பட்ட சில சிறிய மாறுதல்கள் ஏற்கப்பட்டு, சிறிய மாறுதல்களுடன் கணிக்கப்படுவது திருக்கணிதம். சோதிடமானது மை வித்தைகள், பில்லி, ஏவுதல், சூனியம், மந்திர வித்தைகள், கைரேகை முதலான எந்தத் துறையுடனும் சேர்ந்தது அல்ல.

எமது இந்து மத நம்பிக்கையின்படி ஒரு குழந்தை தன் முற்பிறப்பில் செய்த பாவம், புண்ணியம் இவற்றைத் தழுவியே இந்தப் பிறவியில் அந்தப் பலன்களை அனுபவிக்கப் பிறவி எடுக்கிறது. இதனால், ஒருவர் விதியின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பது பொருளல்ல. விதி வலிது. எனினும் விதியை மதியால் வெல்ல முடியும். ஆயுள், சில கொடிய வியாதிகள் தவிர, மற்றவை எமது திடமான தெய்வ நம்பிக்கை, முயற்சி மூலமும், பரிகாரங்கள் மூலமும் ஓரளவுக்கு மாற்றத் தக்கன.

'முயற்சி திருவினையாக்கும்'

"Fool obey planets white"-முட்டாள் கிரகங்களுக்கு அடி பணிகின்றான்.

wise men control them-புத்திசாலிகள் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன.

சோதிடம் அறிந்து நாம் நல்வழியில் ஒழுகலாம். துன்பங்களை முன்னதாக அறிந்து தற்காப்பு செய்து, நிதானத்துடன் நல்வாழ்வு வாழலாம்.

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'



### மேற்கத்திய சோதிடம்

சாயன முறை- சூரியனின் சலனத்தைக் கொண்டு மற்ற கிரகங்களின் இருப்பைக் கணிப்பது.

### இந்து சோதிடம்

நிராயன முறை-சந்திரனின் சலனத்தைக் கொண்டு கணிப்பது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

சோதிடத்தில் அச்சுவினி-ரேவதி வரை 27 நட்சத்திரங் களைக் கொண்டே கணிக்கப்படும். ஏனெனில் சோதிடத்தில் எடுக்கப்பட்டுள்ள நவக்கிரகங்கள் இந்த 27 நட் சத்திரங்கள் இருக்கும் பாதையில் தான் சஞ்சாரம் செய்கின்றன. எனவே இவைகள்தான் பூமியிலுள்ள சகல ஜீவராசிகளின் வாழ்வில் தொடர்பு கொண்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு கலி பிறந்து 5117 ஆண்டுகள் ஆகின்றன.

> வாக்கிய கணிதம் ஏற்பட்ட பின்னர் விஞ்ஞானத்தில் நிரூபிக்கப்பட்ட சில சிறிய மாறுதல்கள் ஏற்கப்பட்டு, சிறிய மாறுதல்களுடன் கணிக்கப்படுவது திருக் கணிதம். சோதிடமானது மை வித்தைகள், பில்லி, ஏவுதல், சூனியம், மந்திர வித்தைகள், கை ரேகை முதலான எந்தத் துறையுடனும் சேர்ந்தது அல்ல.






## துலாம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் துலாம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். துலாம் ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

### விவசாயிகள்

பயிர் விளைச்சல் அமோகமாக இருக்கும். விளை பொருளுக்கேற்ற விலை சந்தையில் கிடைக்கப் பெறுவதால் உழைப்பிற்கேற்ற பலனைப் பெறுவீர்கள். புதிய நவீன கருவிகள் வாங்கும் யோகம். பூமி, மனை போன்றவற்றால் அதிர்ஷ்டம் உண்டாகும். குடும்பத்திலும் சுபிட்சமான நிலையிருக்கும். சுப காரியங்களும் நடைபெறும். ஆண்டின் பிற்பாதியில் பண விடயங்களில் கவனமுடனிருப்பது நல்லது.

### பெண்கள்

கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடிய காலம் என்பதால், விட்டுக்கொடுத்து நடந்துகொள்வது நல்லது. நெருங்கியவர்களாலும் தேவையற்ற மனச் சஞ்சலங்கள் உண்டாகும். ஆண்டின் தொடக்கத்தில் பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் ஆகஸ்ட் மாதத்திற்குப்பின் தேவையற்ற வீண் விரயங்கள் ஏற்படும். புத்திரர்களால் சிறுசிறு மனச் சஞ்சலங்கள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

### மாணவ- மாணவியர்

கல்வி பயிலுபவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருக்கும். ஞாபக மறதி, கவனக்குறைவு போன்றவற்றால் மதிப்பெண்கள் குறையும். பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவுகள் ஓரளவுக்கு மனநிம்மதி அளிப்பதாக அமையும். தேவையற்ற நண்பர்களின் சேர்க்கையானது உங்கள்க்கு அவப்பெயரை உண்டாக்கும். நல்ல நண்பர்களாக தேர்ந்தெடுத்துப் பழகுவது நல்லது.

### மாதப்பலன் (ஜனவரி)

மாத முற்பாதியில் சூரியன் 3-ல் சஞ்சரிப்பதும், 8-ஆம் தேதி முதல் ராகு லாப ஸ்தானமான 11-ல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் ஓரளவுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். பணவரவுகள் தாராளமாக அமைந்து குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தடைப்பட்ட சுபகாரியங்களும் எளிதில் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது மிகவும் உத்தமம். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரித்தாலும், எதையும் சமாளிக்கக்கூடிய ஆற்றலைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த லாபங்கள் கிடைக்கும். முருகப் பெருமானை வழிபடுவது நல்லது.

### பெப்ரவரி

ஜென்ம ராசியில் செவ்வாயும், 2-ல் சனியும் 4-ல் சூரியனும் சஞ்சாரம் செய்வதால் எதிலும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். தேவையற்ற அலைச்சல், பதற்றம் ஏற்படும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றமுடியாத நிலை உண்டாகும். பணவரவுகள் சரளமாக இருந்தாலும் வரவுக்குமீறிய செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். எதிலும் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்துச் செயற்படுவது. பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம். முருகப் பெருமானை வழிபாடுசெய்வது நல்லது.

### மார்ச்

லாபஸ்தானமான 11-ல் குரு, ராகு சஞ்சாரம்செய்வதும் மாத பிற் பாதியில் 6-ல் சூரியன் சஞ்சரிப்பதும் அற்புதமான அமைப்பாகும். பல்வேறு வகையில் முன்னேற்றங்கள் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். பொன், பொருள் சேரும். நெருங்கி யவர்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறையும். பணம் பல வழிகளில் தேடிவரும். கூட்டுத் தொழில் செய்பவர்களும் முன்னேற்றமான பலனைப் பெறுவார்கள். கொடுக்கல்-வாங்கல் சரளமான நிலையில் நடைபெறும்.

### ஏப்ரல்

ருண ரோக ஸ்தானமான 6-ல் சூரியனும் லாப ஸ்தானமான 7-ல் புதன், 11-ல் குரு ராகுவும் சஞ்சாரம் செய்வதால் உங்களின் பலமும் வளமும் அதிகரிக்கும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். எடுக்கும் காரியங்களில் வெற்றியினைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் அற்புதமாக அமையும். கணவன்-மனைவியிடையே ஒற்றுமை நிலவும். உத்தி யோகத்தர்களுக்கு கௌரவமான பதவிகள் கிடைக் கப்பெறும். பண விடயங்களில் பிறருக்குக் கொடுத்த வாக் குறுதிகளைக் காப்பாற்றி நல்ல பெயரை எடுப்பீர்கள்.

### மே

குடும்ப ஸ்தானமான 2-ல் சனி, செவ்வாய் சஞ்சரிப்பதும் 7-ல் சூரியன் சஞ்சாரம்செய்வதும் சாதகமற்ற அமைப்பாகும். குடும்பத்தில் நிம்மதி குறையும் என்றாலும் குருவின் சாதகமான சஞ்சாரத்தால் எதையும் சமாளிக்கமுடியும். உடல் ஆரோக்கிய விடயத்தில் அதிக கவனம் தேவை. பணவரவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பத் தேவைகளனைத்தும் பூர்த்தியாகும். எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயற்பட்டால் சாதகமான பலனைப் பெறமுடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.உமாசுதன்

# ஒற்றுமைப்பட்டு செயற்படவேண்டியவர்கள் தமிழ் தலைமைத்துவங்களே!



இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய மாற்றம் ஒன்று கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் தோற்றம் கொண்டது. அடிப்படையிலே சிங்கள பேரினவாதம் என்ற தாற்பரியங்கள் மாற்றம் இன்றி அடித்தளமிட மைத்திரி என்றொரு புது முகம் அரச தலைமைத்துவத்தில் வந்தமர்ந்தது. நிறைவேற்றதிகாரம் நாட்டிலிருந்து அகற்றப்பட் வேண்டும் என்ற நோக்கம் தமிழ்மக்களிடமும் தாக்கமுற்றதால் வாக்குரிமைகள் புது முகம் காண வலுத்தந்தன.நல்லாட்சி என்ற சொல்லாட்சி உத்வேகத்தோடு சத்தமின்றி பயணித்தது. ஓராண்டு பூர்த்தி கடந்து புதிய ஆண்டில் நடக்கத் தொடங்கியிருக்கிறது.

இத்தனைக்கும் இந்த நகர்வுகள் நல்லாட்சி என்ற ஆரம்ப வியாக்கியானங்களுக்கு வலுவூட்டாமலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மீண்டும் கடந்தகால அரசின் பரிகாரங்களையும் அரிதாரங்களையும் அவ்வப்போது வார்த்தைகளில் அள்ளித்தெளிப்பதாகவும் அமைந்திருக்கிறது. இனியும் அமையப் போகிறது.

2009 களில் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய மனிதப் பேரவலம் நிகழ்ந்து ஐந்தாண்டுகள் கடந்த நிலையில் அதற்கான பரிகாரங்களாக முன்வைக்கப்பட்ட போர்க்குற்றங்களை கண்டறிவதற்கான சர்வதேச விசாரணை என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பில் ஏமாற்றம் தந்து உள்நாடு என்பதோடு உறைந்துவிட்டது. இன நல்லிணக்கம், சமத்துவம், பொறுப்புக்கூறல் என்பன வார்த்தைகளோடு வரிந்துகட்டிக் கொண்டு நிற்கின்றன. அவற்றின் செயல் வடிவம் என்பது இன்னமும் சாத்தியப்படவில்லை. சர்வதேசங்களின் கட்டாயமாக இவற்றை சரிப்படுத்த வேண்டும் என்ற சாட்டுதல்கள் பிரேரணைகளாக அமிழ்ந்து கிடக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்திலே பல கோலாகலங்களும் அதனிடையேயான ஒலிபரப்புக்களும், அறிவித்தல்களும் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவருகின்ற வடபகுதியை மையப்படுத்தியும் நாடு கடந்து மேற்குலகங்களில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளிலும் வார்த்தைகளின் மலிவு விற்பனையாக பரப்பி வைத்து தூக்கி வீசப்படுகின்றன. குறிப்பாக கடந்த வருடத்தின் இறுதியில் இடம்பெற்ற அரச நத்தார்தின விழா அதன் பின்னராக இவ்வாண்டின் புதிய ஆரம்பத்தில் இடம்பெற்ற அரச தைப்பொங்கல் விழா என்பவற்றை சொல்லமுடியும். கடந்த செப்ரெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பிலான கூட்டத்தொடர் மிகப் பெரிய ஆபத்தையும் சவாலையும் இலங்கை அரசுக்கு ஏற்படுத்தும் என்ற தோற்றம் திசைமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் இலங்கை அரசு கடந்து சென்ற அறுபது ஆண்டுகளிலும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளையும் உரிமைகளையும் வழங்க மறுத்ததுடன் அகிம்சை கடந்து ஆயுதம் ஏந்திய உரிமைப் போராட்டத்தையும் பயங்கரவாதம் என்ற நாம் சூட்டுகையால் ஒடுக்கப் பார்த்தது. அதற்கான ஆதரவுகளையும் சர்வதேசங்களிடம் இருந்து தனது இராஜதந்திர காய்நகர்த்தல்களாலும் நரித்தந்திரங்களாலும் சாதகமாக்கியும் கொண்டது. அதன் உச்சமாக 2009களில் மிகப் பெரிய மனித பேரவலத்தை வடக்கே முள்ளிவாய்க்காலில் கோரத்தாண்டவமாய் நிகழ்த்தி முடித்தது. இதற்கு பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து முற்றாக ஒழித்துக்கட்டிய சாதனை நிகழ்வு என்ற நாமம் வேறு சூட்டி கொண்டாடியும் மகிழ்ந்தது.

உண்மையில் இந்த நிகழ்வுகளின் பாரதூரத் தன்மையும் ஓர் இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தின் உத்வேகமும் அதற்கான அதன் தீவிரப் போக்கும் சர்வதேசத்தின் மனச்சாட்சியை உறுத்தியதோ அல்லது உலுக்கியதோ தெரியவில்லை. காலம் கடந்த ஞானமாக இலங்கையின் வடக்கே இடம்பெற்றது மிகப் பெரிய மனிதப் பேரவலம், போர்க்குற்றம் அதனை தட்டிக்கழிக்க முடியாது. அதற்கான நீதி விசாரணைகளை சர்வதேசத்தின் முன் எதிர்கொண்டு பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேண்டும். அதன் பின்னான நீண்ட இனமுரண்பாட்டை தவிர்க்கும் வகையிலான தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளும் தீர்வை வழங்க இலங்கை அரசு முன்வரவேண்டும் என்பதை ஓர் அழுத்தமாக சொல்லியிருந்தது. சர்வதேசம் என்பது பொதுநலவாயமாக சுருங்கியிருந்தாலும் இந்த அழுத்தம் என்பது ஓர் நம்பிக்கையை தமிழ் மக்களுக்கு தந்திருந்தது.

மேற்போர்ந்த விடயங்கள் கருத்திலெடுக்கப்படும் அதற்கான படிமுறை நிகழ்ச்சி நிரல் தயார் செய்யப்பட்டு இந்த வருடத்தின் ஆரம்பம்; முதலான பதினெட்டு மாதங்களில் ஏற்றுக்கொள்ளும் தீர்வுப் பொதி தருவிக்கப்படும் என இலங்கை அரசும் சொல்லியிருந்தது. ஆனால் இதற்கு மாறான நிகழ்வுகளும் அதன் போதான கருத்துக்களின் திணிப்பும் எதிர்மறையானதாக அமைந்துள்ளன.

நல்லிணக்கம் இன சமத்துவம் என்பன வெறுமனே நிகழ்வுகளை நடத்துவதிலும் ஒன்றாக உட்கார்ந்து அளவளாவி உண்டு மகிழ்வதிலும் தங்கியிருக்கவில்லை. பாதிக்கப்பட்ட இனம் அனுசரிக்கின்ற, மனதார ஏற்றுக்கொள்கின்ற தீர்வுகள் தொடர்பில் வேற்றுமைகள் அற்ற இணக்கங்களிலும் அது சார்ந்த கருத்துக்கள், கலந்துரையாடல்களில் தான் தங்கியிருக்கிறது. உண்மையில் இங்கு இடம்பெறுகின்ற சம்பவங்கள் எவையும் அதற்கு அடித்தளமிடுபவையாக அமையவில்லை. மாறாக நல்லிணக்கம் என்பதில் நலிவையும் இன சமத்துவம் என்பதில் உடைவுகளையும் வலிந்து திணிப்பதாக மாற்றங் கண்டு வருகின்றன.

> தமிழினத்தின் சுயத்தை விட்டுக் கொடுக்காமை என்ற தனித்துவத்தை உடைத்தெறிய சர்வதேசத்தின் சகல விதமான ஒத்துழைப்பும் இலங்கைக்கு கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளதும், தமிழரின் சுயம் என்ற சித்தாந்தம் தோற்கடிக்கப்படவில்லை என்பதான ஏளனம் செய்யும் ஏகாதிபத்தியத்தின் தொனியும் நல்லிணக்கமற்ற கருத்தியலின் உடைப்புத்தான்.

அண்மையில் வலி.வடக்கில் இடம்பெற்ற பொங்கல் விழாவின் பின்னதான கலந்துரையாடல் நிகழ்வில் அரசின் அதிகாரங்களை தன்னகத்தே கொண்ட பிரதானியாக வெளிப்படுத்திய கருத்துக்கள் நலிவையும் உடைவுகளையும் ஆழமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. காணாமற்போனவர்களில் பெருமளவானோர் உயிரிழந்தவர்களாகவே கருதப்படுகின்றனர் என்ற கருத்துரைப்பு ஓர் இனத்திலிருந்து திட்டமிட்டு பயங்கரவாதம் என்ற நாமத்தை வலிந்து திணித்து சட்டம் கொண்டு தாம் அடிமைப்படுத்திய தனியன்களின் காவுகொள்ளலை மறுத்துள்ளது. அந்த செயலை ஏற்று அவர்களை தருவிப்பதற்கான செயல் நிலை என்பதிலிருந்து நழுவி பொறுப்புக்கூறலை உதாசீனம் செய்வதை வலியுறுத்தி நிற்கின்றது. இது உண்மையில் நல்லிணக்கம், இன சமத்துவம் என்ற மாயத் தோற்றத்தின் ஆரம்பத்தில் தமிழர் தரப்புக்குத் தரப்பட்டுள்ள ஓர் நலிந்த நிவாரணம் தான். நல்லிணக்க வெளிப்பாடு அல்ல.



இந்த நலிவின் நிவாரணம் உறவுகளை உலுக்கிய தருணங்கள் நிதர்சனமாய் தொடர்கையில் அடுத்த நிகழ்வு சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில். உலக தலைமைகள் உட்கார்ந்திருந்த உலக பொருளாதாரம் பற்றி பேசுகின்ற. பேசி வருகின்ற ஓர் பொது மன்றத்தின் வெளியில் வைத்து வார்த்தைகளின் மலிவாக விலைபேசி விற்றிருக்கின்றார்.

கடந்த வருடம் அரசியல் கைதிகள் தங்களின் விடுதலை தொடர்பில் உணவுதவிர்ப்பை மேற்கொண்டனர். நிபந்தனையின்றி தங்களை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும் எனக் கோரினர். அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் போராட்டங்களும் வலுப்பெற்றபோது அதற்கான அரசின் மழுப்பலான வியாக்கியானங்களும் நீதி அமைச்சரின் கருத்தும் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்பதாக இருந்தது. இந்த நிலையிலே அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருதவாக சொல்லப்பட்டது. சொல்லப்பட்டு வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என திடமானகருத்தைபிரதமர்சர்வதேசத்தின் பொது வெளியில் முன்வைத்துள்ள தன்மை என்பதும் நல்லிணக்கத்தின் வெளிப்பாடு அல்ல. இனம் சார்ந்த தறுக்கணிப்புத் தான்.

இதற்குச் சமாந்தரமாக தமிழ் மக்களின் இலட்சிய குறிக்கோளாயிருந்த, இருந்துவருகின்ற தமிழினத்தின் சுயத்தை விட்டுக் கொடுக்காமை என்ற உன்னதத்தை கீழ்த்தரப்படுத்தும் மைத்திரியின் கருத்தும் சிதைவுக்குரியதே. குறிப்பாக தமிழினத்தின் சுயத்தை விட்டுக் கொடுக்காமை என்ற தனித்துவத்தை உடைத்தெறிய சர்வதேசத்தின் சகலவிதமான ஒத்துழைப்பும் இலங்கைக்கு கிடைத்துள்ளதாகக் கூறியுள்ளதும், தமிழரின் சுயம் என்ற சித்தாந்தம் தோற்கடிக்கப்படவில்லை என்பதான ஏளனம் செய்யும் ஏகாதிபத்தியத்தின் தொனியும் நல்லிணக்கமற்ற கருத்தியலின் உடைப்புத்தான்.

ஆக, இத்தகைய சுழமைவுகளும் இராஜதந்திர நகர்வுகளும் திட்டமிட்டு நகர்த்தப்பட்டுவரும் நல்லிணக்கத்தின் வெளிப்பாடு போன்றதான அரச நிகழ்வுகளும் பொருத்தமற்ற வார்த்தைகளின் உதிர்வும் நல்லாட்சி என்ற சொல்லாட்சியோடு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளே. நல்லிணக்கம் என்பதற்கான நன்முறைகளின் திட்டமிட்ட ஒழுங்குபடுத்தல்கள் அல்ல. நல்லாட்சியின் முகம் மறைகிறது. நல்லிணக்கத்தின் கரு கலையத் தொடங்கிவிட்டது.

இது தொடர்பில் ஒற்றுமைப்பட்டு செயலுறுதியோடு செயற்பட வேண்டியவர்கள் தமிழ் தலைமைத்துவங்களே. பூர்வீகக் குடிகளாக, தமிழன் என்ற சுயத்தை இழக்காது தாய் மண்ணில் தலைநிமிர்ந்து வாழக்கடமை செய்ய வேண்டிய தருணங்கள் இது.

சாபங்களை களைந்து நல்ல சகுனங்களை விடியலுக்கான தருணங்களாக மாற்றிக் கொள்ள வேண்டிய காலமிது. நேரமிது.

நற்சிந்தனைகள் கொண்டு நல்வழி நடவுங்கள். தமிழன் சுயத்தை செயலால் பெற்றுத் தாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரதருக்கு வந்த சந்தேகம்



நாரதர் எப்போதும் நாராயணா! நாராயணா என்று கூறிக்கொண்டே இருப்பார். இப்படிக் கூறிக்கொண்டிருந்த நாரதருக்குத் தான்தான் கடவுள் பக்தியில் சிறந்தவன் என்ற கர்வம் இருந்தது. இந்தக் கர்வத்தை ஒழிக்க வேண்டும் என்று பகவான் பரந்தாமனுக்கு ஆசை. ஒருநாள் நாரதரோ பரந்தாமனைக் காண வந்தார். அவரும் நாரதரை மகிழ்ச்சியுடன் வரவேற்று "மூவுலகமும் சுற்றினீரா" என்று கேட்டார்.

நாரதரோ மட்டற்ற மகிழ்ச்சியுடன் "ஆமாம் ஆமாம் மூவுலகமும் சுற்றினேன்" என்று கூறினார்.

"ஏதேனும் விசேடமுண்டா?"

"இல்லையே"

"பூவுலகத்தில் பொன்னேரி என்ற கிராமத்தில் என் பரம பக்தன் பரந்தாமனைப் பார்க்கவில்லையா?" என்றார் பரந்தாமன்.

"என்னைவிடப் பரமபக்தனா?" என்றார் நாரதர்.

உம்மைவிடப் பல மடங்கு உயர்ந்த பக்தன்" என்றார் பரந்தாமன்.

நாரதர் உடனே புறப்பட்டார் பூவுலகத்துக்கு பொன்னேரி வந்தார். பரந்தாமன் வீட்டுக்கு வந்தார். பரந்தாமன் தூங்கிக் கொண்டிருந்தான். கண் விழித்தவுடன் "இன்றைய பொழுது நாராயணருக்கு அர்ப்பணம்" என்றான். "நமோ நாராயணா என்று கூறியபடி எழுந்தான். தனது கடமைகளைச் செய்ய ஆரம்பித்தான்.

உணவு உண்ணும் போது "இது நாராயணனுக்கு அர்ப்பணம்" என்றவாறு உண்டான். அதன்பிறகு இரவில் படுக்கைக்குச் செல்லும் போது "இன்றைய இரவு நாராயணனுக்கு அர்ப்பணமாகட்டும்" எனக் கூறினான்.

இதை கவனித்த நாரதருக்கு "என்னைவிட இவனே பக்தன் என்ற எண்ணம் பரந்தாமனுக்கு எப்படி வந்தது? மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு நாளில் மூன்று நான்கு முறை பரந்தாமனை நினைக்கிறான் இந்தப் பரந்தாமன்" என எண்ணினார். வைகுண்டம் வந்து பகவானிடம்தான் பொன்னேரி சென்று கண்டு வந்ததைக் கூறினார்.

பகவான் உடனே ஒரு கிண்ணம் நிறைய எண்ணெய் வரவழைத்து நாரதர் கையில் கொடுத்து "இதில் ஒரு துளி எண்ணெயும் சிந்தக் கூடாது. நீர் என் நாமத்தைச் சொல்லுவதையும் நிறுத்தக் கூடாது" என்றார்.

சிறிது செல்வதற்குள்ளேயே நாராயணா என்று உச்சரிக்க மறந்து தடுமாற எண்ணெய் கீழே சிந்தியது.

பரந்தாமன் கூறினார். 'எண்ணெய் கீழே சிந்தக் கூடாது என நினைக்கும் போது என் நாமத்தை விட்டுவிடுகிறாய். என் நாமத்தைக் கூறுவதில் கவனம் செலுத்தும் போது எண்ணெயை விட்டுவிடுகிறாய்.

பொன்னேரி பரந்தாமன் என்ன செய்கிறான்? இன்றைய என் பொழுது கிருஷ்ணார்ப்பணம் என என் திருவடியில் சமர்ப்பணம் செய்து விடுகிறான். இப்போது சொல் யார் பக்திமான்?" என்று கேட்டார் பகவான்.

பொன்னேரிபரந்தாமனேபக்திமான் என்று நாரதரும் ஒப்புக் கொண்டார். **ஒரு மனப்பட்ட உண்மையான பக்தியே உயர்வு தரும்.**

# வர்ணம் தீட்டுவோம்...



# வரலாற்றில் இன்றைய தினம்

1547 - எட்டாம் ஹென்றியரசரின் வாரிசான 9 வயது ஆறாம் எட்வேட் இங்கிலாந்து அரசரானார்.

1573 - போலந்தில் மத சுதந்திரத்தை அங்கீகரித்து, வோர்ஸோ ஒப்பந்தம் கைச்சாத்து.

1807 - முதல்தடவையாக லண்டன் போல் மோல் வீதி காஸ் ஒளியால் ஒளியூட்டப்பட்டது.

1887 - ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 45 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதுவே இங்கிலாந்து பெற்ற ஆகக் குறைந்த ஓட்டமாகும்.

1887 - மொன்ரானா போட் கிலோக் பனிப்புயலின் போது 38 செ.மீ அகலமும் 20 செ.மீ தடிப்புமுள்ள ஆலங்கட்டி வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

1887 - பாரிஸில் ஈபிள் கோபுரத்தை அமைக்கும் வேலை தொடங்கப்பட்டது.

1909 - இரண்டாவது தடவையாக கியூபாவை விட்டு அமெரிக்கப் படைகள் விலகின.

1915 - கல்வியறிவற்றவர்கள் குடியேறுவதைத் தடுக்க அமெரிக்க ஜனாதிபதி வில்சன் மறுப்புத் தெரிவித்தார்.

1916 - முதன் முறையாக யூதரான லூயிஸ் பிறண்டீஸ் உயர் நீதிமன்ற நீதிபதியாக அமெரிக்க ஜனாதிபதி வில்சனால் நியமிக்கப்பட்டார்.

1918 - ஜேர்மன் வெடிபொருள் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

1932 - ஜப்பானிய படைகள் ஷங்காயைத் தாக்கின.

1935 - கருக்கலைப்பை சட்ட பூர்வமாக ஏற்றுக்கொண்ட முதலாவது மேற்கு நாடாக ஐஸ்லாந்து.

1942 - ஜெனரல் ரிமோஷன்கோ தலைமையிலான சோவியத் படைகள் உக்ரைனுள் பிரவேசம்

1942 - லிபிய - பென்காஷியில் ஜேர்மன் படைகள் நிலைகொண்டன.

1960 - சந்திரனிலிருந்து முதலாவது புகைப்படம் பெறப்பட்டது.

1961 - ருவாண்டா மக்கள் குடியரசு பிரகடனம்.

1988 - கருக்கலைப்புக்கு எதிரான சட்டம் யாப்புக்கு விரோதமான தென கனடா உயர் நீதிமன்றம் தீர்ப்பு.

1991- 22 ஆம் ஆட்சி செய்த சர்வாதிகாரி சியாட் பார்ரே சோமாலியாவிலிருந்து தப்பியோட்டம்.

1993 - பூநகரிப் பாதை திறப்பு தொடர்பான ஒழுங்கு முறைகளைத் தயாரிப்பதில் ஐ.நா. அகதிகளுக்கான தூதரகம் ஈடுபட்டது

1993 - திருமலை படகு விபத்தில் மூழ்கிய படகினுள் 76 சடலங்கள்.

2010 - பங்காளதேஷ் ஷேக் முஜிபுர் ரஹ்மானைக் கொலை செய்த ஐந்து பேர் தூக்கிலிடப்பட்டனர்.

2013 - அமெரிக்க ராஜாங்க செயலாளராக கிலாரி கிளின்[illegible] ஜோன் கெரி தெரிவானார்.

# நைல் நதியின் வரலாறு

*(நேற்று முன்தினம் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

லோ அடைந்ததுன்பத்தைக்கண்டுமனமிரங்கிய ஹீரா அவளை மனித உருவில் மாற்றினாள். ஆனால் தன் கணவனிடம் இனி ஜீயெஸச் சந்திக்கக் கூடாது என்று உறுதி பெற்றுக்கொண்டாள்.

ஆனால் பொய்யே பேசாத கடவுள் பொய்பேசியதால் அவரால் உருவாக்கப்பட்ட கருமேகங்கள் மழையாகப் பொழியத் தொடங்கின! எப்படிப்பட்ட மழை தெரியுமா? கனமழை! தொடர்ந்த பல வருடங்களுக்குக் கொட்டித் தீர்த்தது. தண்ணீர் பெரும் பள்ளத்தில் நிரம்பி அந்த இடமே ஒரு ஏரியாக மாறியது. எகிப்தின் பாலைவனத்தில் மனித உருவில் தவித்துக் கொண்டிருக்கும் லோ வின் தாகத்தைத் தணிக்க அந்நீர் ஒரு ஆறாகப் பெருக்கெடுத்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்தது. அதுவே "நைல் நதி" என்று கிரேக்க புராணங்கள் கூறுகின்றன.

இந்நதியானது தான்சானியா, உகாண்டா, ருவாண்டா, புருண்டி, ஹொங்கோ, கென்யா, எத்தியோப்பியா, எரித்திரியா, தெற்கு சூடான், மத்திய சூடான், மற்றும் எகிப்து ஆகிய பதினொரு நாடுகள் வழியாகப் பாய்கிறது. அதனால் இதனை "சர்வதேச ஆறு" என்றும் கூறுவர்.

நைல் நதி "வெள்ளை நைல்" மற்றும் 'நீல நைல்' என இரு கிளைகளைக் கொண்டுள்ளது. மத்திய ஆப்பிரிக்காவின் 'விக்ரோரியா ஏரி' யில் இருந்து வெள்ளை நைலும், (இது தான்சானியா, உகாண்டா, தெற்கு சூடான் வழியாகப் பாய்கிறது.) எத்தியோப்பியாவில் உள்ள "டானா ஏரி" யில் இருந்து நீல நைலும் (இது சூடானின் தென் கிழக்கு நோக்கிப் பாய்கிறது) உருவாகின்றன. இவ்விரு ஆறுகளும் சூடானின் தலைநகர் "கார்டூம்" இல் ஒன்று சேர்ந்து நைல் நதியாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

[illegible]ன் ஆகிய இரு நாடுகளுக்கும் முக்கிய ஆதாரமாக விளங்குவது நைல் நதியே ஆகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பண்டைய எகிப்தின் முக்கிய இடங்கள் யாவும் நைல் நதியின் கரையை ஒட்டியே அமைந்திருந்தன.

"நைல்" என்ற சொல்லுக்கு எகிப்திய மொழியில் ஆறு என்று பெயர். நைல் நதியின் தோற்றுவாய் எது என்பதில் இன்றளவும் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.



விக்ரோரியா ஏரியே இதன் முக்கியத் தோற்றுவாய் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த ஏரி உருவாக பல்வேறு சிற்றாறுகள் துணை புரிகின்றன. அவற்றுள் முக்கியமானது "காகேரோ" என்னும் ஆறு ஆகும். இது டான்சானியாவில் "புகோபா" என்னும் இடத்தில உற்பத்தியாகிறது. இது தவிர "ருவியோரான்சா"...,"நியாமராங்கோ" போன்ற பல சிற்றாறுகளும் விக்ரோரியா ஏரிக்கு நீர் வழங்கும் ஆதாரங்களாக விளங்குகின்றன. இந்த ஆறுகள் அனைத்தும் ஒன்று கூடி "ருசுமோ" என்ற பெயரில் அருவியாக விழுகின்றன. நைல் நதியின் தோற்றுவாய் என்று நம்பப்படும் இடத்தை "கிஷ் அபே" என்று அழைக்கிறார்கள்.

எத்தியோப்பியாவில் பெய்யும் கனமழையால் நைல் நதியில் பெருக்கு ஏற்படுகிறது. ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் வெள்ளப் பெருக்கு அதிகமாகி நீர் மட்டம் உயரும். எத்தியோப்பியாவிலிருந்து நீர் மட்டும் அடித்து வராமல் வளமான கருப்பு நிற வண்டல் மண்ணையும் நைல் நதி அடித்து வருகிறது. ஒக்ரோபர் மாதம் வெள்ளம் முழுவதும் வடிந்த பிறகு விவசாயம் செய்யத் தொடங்குகிறார்கள். மார்ச் மாதத்தில் இருந்து மே மாதத்துக்குள் அறுவடை இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளகப் பொறிமுறை குறித்து தெளிவுபடுத்தவேண்டும் ஜனாதிபதி

கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான அமெரிக்கப் பிரேரணையில் இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்து விசாரணை செய்ய சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளை உள்ளடக்கிய உள்ளகப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் போன்று அல்லாது சில திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில், இலங்கையும் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி பிரேரணை வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.


இதிலுள்ள மற்றொரு விசேட அம்சம் என்னவென்றால், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் பிரேரணைக்குப் பெற்றுக் கொள்ளமுடிந்ததுதான். கடந்த செப்ரெம்பரில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு தற்பொழுது நான்கு மாதங்கள் கடந்துள்ளதால் இதுவரைக்கும் இலங்கை அரசு இது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளையாவது ஆரம்பித்திருக்கவேண்டும். ஆனால், ஆமை வேகத்திலேயே காரியங்கள் நடக்கின்றன. 2015 ஜனவரி 08 ஆட்சிமாற்றத்தின் பின் அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் இலங்கை மீதான அழுத்தம் குறைந்து போனதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இத்தகைய நிலையில், சில தினங்களுக்கு முன்னர் பி.பி.சிக்கு ஜனாதிபதி அளித்த செவ்வி அனைவருக்கும் ஏமாற்றம் அளித்துள்ளது. மஹிந்த வைப் போன்றுதான் மைத்திரியும் செயற்படப்போகிறாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சர்வதேச ஈடுபாட்டுக்கு ஒருபோதும் இணங்கப்போவதில்லை, நிபுணத்துவம் பெற்ற துறைசார் வல்லுநர்கள் எமது நாட்டில் உள்ளனர் என்று பி.பி.சிக்கு அளித்த செவ்வியில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல்ஹுசைன் இலங்கை வரவிருப்பதாக அறிவித்து சில நாள்களில் ஜனாதிபதியின் செவ்வி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஜனாதிபதி அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில், பி.பி.சிக்கு அளித்த செவ்விக்கு மாறுபட்ட கருத்தை வெளியிட்டிருப்பதை நாம் இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உள்ளக விசாரணை குறித்து ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டில் இல்லை என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்துகிறது. போரினால் பாதிக்கப்பட்ட அங்கவீனமான படைச் சிப்பாய்கள் மற்றும் உயிரிழந்த படைச் சிப்பாய்களின் குடும்பத்தவர்களின் சேமநல மேம்பாட்டுக்காக விசேட சலுகைகளை வழங்கும் விருசர சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றுகையில், போர் காரணங்களைக் கண்டறிந்து நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் செயற்படுத்தவேண்டுமானால் ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்துச் செயற்பட முடியாது என்று தெரிவித்துள்ளார். பி.பி.சிக்கு அளித்த செவ்வியின்போது தெரிவித்த கருத்தும் இதுவும் முரண்படுவதுபோல் தெரிகிறது. ஜனாதிபதி எத்தகைய நிலைப்பாட்டில் உள்ளார் என்பது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, ஜனாதிபதி இதனைத் தெளிவுபடுத்தவேண்டும். பிரேரணைக்கு அனுசரணை வழங்கிவிட்டு அதிலுள்ள முக்கிய விடயத்தில் முரண்பாடான கருத்தை வெளியிடுவது ஜனாதிபதி மீதான நம்பகத்தன்மையை இழக்க வைத்து விடக் கூடியது.




போர்க் காரணங்களைக் கண்டறிந்து நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமானால், ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்து இலங்கை செயற்படமுடியாது. இலங்கை அரசு சர்வதேச ஈடுபாட்டைப் பெற்றுக்கொள்வதன் மூலமே சட்டம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த முடியும்.

போர்க்குற்றம் தொடர்பான விசாரணையில் சர்வதேச ஈடுபாடு என்பது ஐ.நா. வழங்கிய தெளிவற்ற வாக்குறுதி அல்ல என்பதையும் போரால் பாதிக்கப்பட்டு நீதி கோரி நிற்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உத்தரவாதம் என்பதையும் ஜனாதிபதி கவனத்திற்கொண்டு செயற்படுவது அவசியமாகும்.



# பெரிய சந்நியாசியார் உவந்த அரிய பொக்கிஷம்

கே.எஸ்.சிவஞானராஜா

யாழ்ப்பாணத்தின் இதயமெனப் போற்றப்படுவது இணுவில். இந்த ஊரில் இல்லாதது என்று எதுவுமேயில்லை. ஆதலால் இணுவில் ஒரு சஞ்சீவியாகிறது. இங்குதான் ஆன்மிகம் ஊற்றெடுத்துப் பாய்கிறது.

இந்த ஆன்மிக அருவியில் குளித்தவர்களும், குளிப்பவர்களும் ஏராளம். இந்த அருவியின் பெருமையினாலேயே, உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும், பெரு மஞ்சம் ஒவ்வொருவருடமும்தைப்பூசத் திருநாளன்றுபவனிவருகிறது. இணுவிலில் மிகவும் கோலாகலமாக உலாவரும் காட்சி அற்புதமானது, ஆனந்தமானது, ஆன்மிகமானது. இத்தகு ஆன்மிக் அருவியை என்றுமே வற்றாமல் பாயுமாறு ஏற்படுத்தியவர் பெரிய சந்நியாசி யாவார். இவரது காலம் 1860 – 1917 ஆகும். இற்றைக்கு 156 வருடங்களுக்கு முன்னர் அவதரித்தவர். அம்பாளின் உபாசகராக ஆட் கொள்ளப்பட்டார்.

## அனுக்கிரகம்

காரைக்கால் அம்பாளின் அனுக்கிரகத்தால் இவருக்குத் தெய்வ கடாட்சம் கைகூடப் பெற்றது. இவர் தவக்கோலம் பூண்டதனால், எண்ணியது பலித்தது ஆநிரைகளுக்குத் தொண்டாற்றிய பணியினால் இவர் தொட்டதெல்லாம் பேறாகியது. பெரிய சந்நியாசியார் உடம்பெல்லாம் திருநீறால் பொலிந்தது. இதனால் நோய் எல்லாம் பார்வையால் பறந்தோடியது. பில்லி, சூனியம், சூது, களவு, கொள்ளை யாவும் அறவே நீங்கியது. இணுவிலை வாழ்விக்கவென ஆலயந் தோறும் மரங்களை நாட்டினார். நாட்டிய மூலிகை மரங்கள் இணுவிலை நீடித்த ஆயுளோடு வாழ வைத்தன. இவர் 1008 மரங்கள் நாட்டிய உலகப்பிதாமகரானார். மேலும் குளங்கள், கிணறுகள், கேணிகள், ஆவுரஞ் சிக்கல்லு, சுமைதாங்கி, அன்னசத்திரம் எனப் போற்றியமையால் காரைக்கால் என்னும் இடம் தேவர்களும் வந்து வணங்குமிடமாகிற்று. மனிதர்களும் தேவர்களாகும் அற்புதம் இணுவிலிலே இப்போதும் நடைபெறுகிறது.

## மஞ்சம்.

பெரிய சந்நியாசியாரின் பூர்வீக பாரம்பரிய ஆலயமான இணுவில் கந்தசுவாமியாரின் அருட்கடாட்சம் இவர் மீது படர்ந்தமையால், முருகப் பெருமான் தான் உலா வருவதற்கான அலங்காரத் திருமஞ்சம் ஒன்றைக் கனவினில் காட்டி அருளி, பெருமஞ்சமாய் நீ எழுப்புவாயாக " என்று வாக்கருளி மறைந்தார். விடிந்ததும் திருமஞ்சம் உருவாக்கும்பணிபெரியசந்நியாசியாரால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் தொட்டதுதான் உடனே, திருமஞ்ச வேலை – மரங்களாய், சிற்பங்களாய், அலங்காரங்களாய், அற்புதங்களாய், அண்டசராசரங்களாய், தேவர்களாய், முனிவர்களாய், பிரமா, விஷ்ணு, உருத்திர, மகேஸ்வர பாலிப்புக்களாய், நியமசாத்திரங்களாய் எதிர்கால வரங்களாய் படபட கடகடவென மஞ்சம் உருப்பெற்றது. அடடா! இந்திரலோக இரதமாயிற்று. சுமார் முப்பத்தொன்பதரை அடிக்கும் அப்பால் வானோங்கி வரமருளும் விமானமென, மிகப்பிரமாண்டமானதொரு பெரு மஞ்சமாய் 1008 மணிகளின் ஓங்கார நாதமென ஒலிக்க, அந்தணப் பெருமக்களின் மந்திர உச்சாடனம் மனித மனங்களில் செறிய நாதஸ்வர தவில் வாத்தியங்களின் பிரவாகம் செப்பனிட, ஆன்மிக அருவியாய் இணுவில் கந்த சுவாமியார் கோயிலில் மஞ்சம் உலா வரும். வரும்போது அந்த அருள் வெள்ளத் தில் நாமும் திளைத்து, மூழ்கி, வரம் பெற்று எல்லோரையும் வாழவைப்போமாக. இந்த மஞ்சமே உலகத்தில் எங்கும் காணப்படாத அதியற்புத வேலைப்பாடமைந்த பெரு மஞ்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 5 வயதுச் சிறுவன் ஹீரோவாகும் உனக்குள் நான்



ஸ்டுடியோ 18 என்ற நிறுவனத்துக்காக வெங்கடேஷ் குமார்.ஜி எழுதி இயக்கி தயாரித்துள்ள படம், 'உனக்குள் நான்'. இதில் 5 வயதுச் சிறுவன் சஞ்ஜித் ஹீரோவாக நடிக்கிறார். மற்றும் கார்த்திக் நாகராஜன், அப்பாராவ், பக்கிரிசாமி நடித்து இருக்கின்றனர். ஒளிப்பதிவு, ராகுல் ராஜ்குமார். இசை, டோனி பிரிட்டோ. பாடல்கள்: விவேக் வேல்முருகன், ஜி.மல்லிகா. இப்படத்தின் பாடல் இறுவட்டை இசை அமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் வெளியிட்டார். அப்போது படம் பற்றி வெங்கடேஷ் குமார்.ஜி கூறியதாவது:-

5 வயதுச் சிறுவனுடைய கண்ணோட்டத்தில் நடக்கும் கதை இது. தன்னுடைய தந்தை இயக்குநராகப் பணிபுரியும் தியேட்டரில், அனிமேன் படம் பார்க்கும் சிறுவன், அந்தப் படத்தில் நடக்கும் காட்சிகளின் மாயவலையில் சிக்கி கனவு காணத் தொடங்குகிறான். தனது தாயுடன் அவனது பயணம் தொடங்குகிறது. இதன்மூலம் அன்பு, பாசம் மற்றும் வாழ்க்கை பற்றி தெரிந்துகொள்கிறான். ஆனால், அந்தக் கனவு நிஜமா? பொய்யா என்பது கிளைமாக்ஸ். 77 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்தப் படத்துக்கு 'யு' சான்றிதழ் கிடைத்துள்ளது. மார்ச் மாதம் திரைக்கு வருகிறது.



ஒருவன் அடைந்ததைக் கண்டு பொறாமைப்படாதீர்கள். அவன் இழந்தவை தெரிந்தால் அடைய வேண்டும் என்ற ஆசையே உங்களுக்கு வராது.

துன்பத்துக்கு காரணமாம்; பரவாயில்லை. வாழ்க்கையில் துன்பப்படக்கூடாதென்றாவது ஆசைப்படு.

twitter

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவு கூடுதல் என்றாலும், தாராள செலவால் மிச்சத்துக்கு வாய்ப்பில்லை. உடல்நலத்தில் மிகுந்த கவனமாக இருக்கவும்.

**இடபம்:** முரண்பட்ட சூழல் ஏற்படலாம். பொறுமையாக இருப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை குறைவான அளவில் இருக்கும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பர்கள், உங்களை வியப்புடன் பார்க்கும் நிலை உண்டு. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற வாய்ப்பு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** செயல்களில் அதிக கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதான அணுகுமுறை அவசியம். உடல்நிலையில் அதிக அக்கறை வேண்டும்.

**சிங்கம்:** நியாயமாக பேசுவீர்கள். செயல்களை விரைந்து முடிக்க மனதில் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணிகள் நிறைவேறும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலை ஏற்படலாம். செயல்களில் தாமதமும், குளறுபடியும் இருக்கலாம். தொழில், வியாபாரம் சீர்பெற, நண்பர்களின் உதவி உண்டு. பொருள்கள் வாங்கும் வகையில் அதிக செலவாகலாம்.

**துலாம்:** முக்கிய பணி ஒன்றை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த எதிர்மறை சூழ்நிலை விலகும். எதிர்காலத் தேவைக்குச் சேமிப்பீர்கள். உங்கள் திட்டங்களை நிறைவேற்ற வாய்ப்பு வரும்.

**விருச்சிகம்:** உங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். உங்களைச் சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணவரவில் இலாப விகிதம் அதிகரிக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும்.

**தனுசு:** மனக்குறையை உறவினர்களிடம் சொல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பெற கடுமையாக உழைப்பீர்கள். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**மகரம்:** அவசரப் பணிகள் ஏற்படலாம். தொழில், வியாபார இலக்கு நிறைவேற நண்பர்களின் உதவி கிடைக்கும். முக்கிய செலவுக்குச் சேமிப்புப் பணம் பயன்படும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**கும்பம்:** பணிகளில் நிதானமும், செயற்றிறனும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். குடும்பத் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்:** சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு உயரும். தொழில், வியாபாரம் வளர வாய்ப்பு தேடி வரும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். ஓய்வு நேரத்தை குழந்தைகளுடன் கழிப்பீர்கள்.

## படித்ததில் பிடித்தது

# வாட்சாப் வந்து பார்



(வைரமுத்து குரலில் படிக்கவும்)
உன்னைச் சுற்றி நோடிபிகேன் சத்தம் ஒலிக்கும்
இராத்திரியின் நீளம் விளங்கும்
உனக்கும் கவிதை வரும்
கண்ணுக்கழியில் கருவளையமும் வரும்
குரூப்பில் சேர்த்துவிடுபவன் எமனாவான்
செல்ஃபி புகைப்படம் பதிவு செய்தே

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 5 | 4 | 7 | 3 | 1 | 2 |
| 3 | 5 | 7 | 8 | 2 | 1 | 6 | 4 | 9 |
| 2 | 4 | 1 | 6 | 3 | 9 | 7 | 8 | 5 |
| 7 | 2 | 9 | 4 | 1 | 8 | 5 | 3 | 6 |
| 5 | 1 | 8 | 3 | 9 | 6 | 4 | 2 | 7 |
| 6 | 3 | 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 8 |
| 9 | 6 | 2 | 1 | 7 | 3 | 8 | 5 | 4 |
| 1 | 7 | 5 | 9 | 8 | 4 | 2 | 6 | 3 |
| 4 | 8 | 3 | 2 | 6 | 5 | 9 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 30 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 160 | 140 | 160 | 100 | 140 | 130 | 70 |
| கரட் | 200 | 180 | 100-300 | 180 | 140 | 200 | 145 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 150 | 160 | 90 | 80 | 80 | 160 | 70 | 120 |
| பாகல் | 100 | 120 | 100 | 100 | 100 | 200 | 90 | 130 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 70 | 60 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 70 | 70 | 70 | 60 | 90 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 130 | 100 | 120 | 100 | 100 |
| பூசணி | 50 | 60 | 60 | 70 | 50 | 80 | 45 | 60 |
| தக்காளி | 70 | 80 | 70 | 80 | 70 | 120 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 20 | 30 | 40 | 10 | 20 | 40 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 340 | 350 | 280 | 260 | 600 | 270 | 350 |
| புடோல் | 100 | 80 | 80 | 80 | 60 | 100 | 50 | 60–70 |
| கோவா | 80 | 140 | 100 | 120 | 80 | 140 | 100 | 130 |
| வெண்டி | 120 | 120 | 100 | 120 | 100 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 100 | 160 | 100 | 160 | 80 | 200 | 100 | 170 |
| லீக்ஸ் | 100 | 160 | 100 | 120 | 100 | 160 | 100 | 120 |
| தேங்காய் | 50 | 30–40 | 50 | 30–50 | 50 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 | 60 | 80 | 55 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 100 | 80–100 | 40 | 50 | 35 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 250 | 280 | 250 | 280 | 180 | 400 | 180 | 150–170 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 100 | 140 | 140 | 100 | 80–100 |



### நாளை

தை-15
வெள்ளிக்கிழமை 29.01.2016
திதி: பஞ்சமி பி.ப.2.18
நட்சத்திரம்: அத்தம் முழுவதும்
ராகுகாலம்: 11.06-12.36 வரை
சுபநேரம்: 06.36-08.06 வரை

## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | [illegible] | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 800 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 350 | 300 | 250 | – |
| கணவாய் | 600 | 500 | 500 | 650 | 600 | 700 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 300 | 500 | 600 | 700 | 600 | – | 550 |
| சீலா | 250 | 500 | 400 | 450 | 400 | 400 | 400 |
| விளை | 500 | 400 | 400 | 500 | 450 | – | 400 |
| முரல் | 250 | 300 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 300 | 400 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 700 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 400 | – | 300 | 500 | – | 400 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 350 |
| நகரை | 150 | 250 | – | 200 | 300 | – | 350 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 200 | 200 | 150 | 300 | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 200 | – |
| மதனம் | 250 | 250 | 180 | 370 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 100 | 250 | 250 | 400 | 400 | 200 | 200 |
| | 150 | 150 | 200 | 300 | 300 | – | – |

### பிரதேச

என்று அறிவித்துள்ளமையால் அதிகாரிகளிடத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் இணைத்தலைவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, ஐக்கிய தேசியக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் இணைத் தலைவர்களாகவும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களே செயற்படவுள்ளனர்.

இவ்வாறானதொருநிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தன்னால் பங்கெடுக்க முடியாது என்றும், அதற்குப் பதிலாக - தனது பிரதிநிதியாக அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்பார் என்றும் அறிவித்துள்ளார். அதிகாரிகளிடத்தில் இந்த விடயம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது:

ஜனாதிபதியினாலேயே ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். அத்துடன் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் தனது பிரதிநிதியாக ஒருவரை நியமனம் செய்ய முடியாது. இவ்வாறானதொருநிலையிலேயே, முதலமைச்சர் மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

மேலும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாகப் பங்கேற்பவர்கள், கூட்டத்தில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இணைத் தலைவர் ஒருவரின் பிரதிநிதியாகச் செயற்படுபவர் ஒருவரால் அவ்வாறு முடிவு எடுக்க முடியாத நிலை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அதிகாரிகள், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தேவையற்ற சர்ச்சைகளையும் ஏற்படுத்தும் என்று தெரிவிக்கின்றனர்.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான தமது நேரத்தை ஒன்றாக ஒதுக்கித் தருகின்ற போதிலும், வடக்கு மாகாண முதலமைச்சர் – அவரது பிரதிநிதியின் நேர ஒதுக்கீட்டில் முரண்பாடு ஏற்படுவதாகவும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

மன்னார், வவுனியா மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பங்கேற்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கேற்று உரையாற்றும்போது, நாடாளுமன்றஉறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில்பங்கேற்றுமக்களின் குறைகளைத் தெரியப்படுத்த வேண்டுமே தவிர, கூட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியை ஏற்றிருக்கும் முதலமைச்சர், அமைச்சர் என்பவர்களுடன் இணைத் தலைவர்களாக இருக்கமுடியாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### பொன்சேகாவுக்கு

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிபிளவுபடாமல் இருக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் வலுவடையச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சிக்கு ஐ.தே.க. வலை வீசியுள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் புதிய கட்சி உருவாகுவது உறுதியாகியுள்ளது. புதிய கட்சியின் அவசியம் பற்றி மகிந்த முதன் முறையாக நேற்றுமுன்தினம் வாய் திறந்துள்ளார்.

இதேவேளை, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சேனக்கடி சில்வா தலைமை வகிக்கும் அபே ஜாதிக பெரமுன கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கத் தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேனக்கடிசில்வா, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளராகப் பணி [illegible] 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இவர்கள் இருவரும் கடந்த அரசால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

ஐ.தே.கவின் வலையில் சிக்கிய சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் எதிர்வரும் சில நாள்களில் ஐக்கிய தேசியக்கட்சியின்கூட்டணியுடன்இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளது என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. (த-சி)

### சுதந்திர

அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், வடக்கு மாகாண முதலமைச்சரும், இலங்கைக்கான மனித உரிமை பொறுப்பதிகாரியும் ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று அரசியல் கைதிகள் கோருகின்றனர்.

நல்லாட்சி அரசு தொடர்ந்தும் எமது மக்களையும், எம்மையும் ஏமாற்றுவதால் எமது மக்களுக்கும் எமக்கும் எந்த ஆட்சேபனையும் இல்லை. அடுத்த மாதம் இடம்பெறவுள்ள சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலைசெய்யப்பட வேண்டும். தவறின் 14 சிறைகளிலுமுள்ள தமிழ் அரசியல் கைதிகளான நாம் மீண்டும் போராட்டத்தை முன்னெடுப்போம்.

தமிழ் அரசியல் கைதிகள் 13 பேர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோதும், பயன் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. எமக்கான நீதி தமிழர் என்ற ஒரே காரணத்தால்தான் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருவதாகவே கருதுவதாகக் கைதிகள் கூறுகின்றனர்.

அதனால் நாம் மீண்டும் ஒரு பட்டினிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகப் போகின்றது. இதன்போது மக்கள் புரட்சி தாயகத்திலும் புலத்திலும் வெடிக்கும். அப்போது புரியும் தமிழ் அரசியல் கைதிகளின் பலமும் பலவீனமும். இது நல்லாட்சி அரசுக்கு விடுக்கும் இறுதி எச்சரிக்கை -என்றுள்ளது. (த-4)

### அரசமைப்பு

சுதந்திரக்கட்சியின்மத்தியசெயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய அரசமைப்பைக்கொண்டுவர நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அந்தச் செயற்பாடு தற்போது இடம்பெறுகின்றது. அரசமைப்பு சபை உறுதியான பின்னர் புதிய அரசமைப்பைக் கொண்டுவருவது தொடர்பில் தீர்மானங்களைமேற்கொள்ள முடியும். அதன் பின்னர் புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களின் அபிலாஷை களைப் பெற்றுக்கொள்ள மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னரே புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியும். புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாவிடினும் நாட்டில் தற்போது காணப்படும் அரச்மைப்பு கட்டாயம் மறுசீரமைப்புச் செய்யப்படும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-என்று கூறியுள்ளார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவெடிப்பு

ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவக்கிரிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற நிலவெடிப்புச் சம்பவம் தொடர்பில் குறித்த பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டு அந்தப் பகுதியின் தன்மையை அறியத்தருமாறு தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தைக் கோரியிருந்தோம். இதன் பிரகாரம் குறித்த நிறுவனப் பிரதிநிதிகள் இன்று (நேற்று) முழுநாளும் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அவர்களின் சிபார்சுகளின் அடிப்படையில் குறித்த பிரதேச மண்ணின் தன்மையானது மிகவும் சொரசொரப்பானதாக - இறுக்கமற்ற தன்மையில் காணப்படுவதே குறித்த வெடிப்புக்களுக்குக் காரணம்.

இதனால் இந்தப் பிரதேசத்தில் குடியிருக்கவோ அல்லது தோட்டச் செய்கைக்கோ அச்சம் கொள்ளத்தேவையில்லை எனத் தெரிவித்துள்ள போதிலும் மழை காலத்தில் மட்டும் அதிக நீரின் தன்மையால் சில சந்தர்ப்பத்தில் மாறுதல் ஏற்படக் கூடும். எனவே மழை யின்போது அவதானமாக இருக்குமாறு கோரியுள்ளனர் - என்று கூறினார்.

இதேவேளை,

நிலவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் நேற்று ஆய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கொழும்பில் இருந்து வருகை தந்த தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன் அதிகாரிகள் இந்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர்.

நிலத்தின் கீழ் உள்ள பாறை அமைப்புகள் தொடர்பில் விசேட கருவிகள் மற்றும் ஜீ.பீ.எஸ். சாதனங்களின் ஊடாக இந்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளபட்டன.

இதனால் நிலவெடிப்பு இடம்பெற்ற தோட்டப் பகுதிகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொதுமக்கள் உட்செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், 500 மீற்றர் தூரத்தைச் சுற்றி மஞ்சள் பட்டி கட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.பண்டார கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த பகுதியில் நில அதிர்வு இடம்பெற்றதாகக் கூறப்படுவது முற்றிலும் பொய்யான விடயம். இது ஒரு சாதாரண நிலவெடிப்பே.

இதனால் யாரும் அச்சம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. யாழ்ப்பாணத்தில் நில அமைப்பு மயோசின் காலத்துச் சுண்ணாம்பு பாறைகளினால் ஆனாது. பல மில்லியன் காலத்துக்கு முன்னரே யாழ்ப்பாணத்தின் நிலாவரை நீருற்று, வில்லூன்றி தீர்த்தக்கேணி, கெருடாவில் குகை என்பன இவ்வாறான பாறை மாற்றங்களினாலே ஏற்பட்டன.

இப் பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு நிலத்தின் கீழ் உள்ள சுண்ணாம்புப் பாறையில் ஏற்பட்ட சிறு விரிசலாக இருக்கக் கூடும். இது தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பகுதியில் உள்ள நிலத்தடி மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் வரை, உறுதியாக எதுவும் கூற முடியாதுள்ளது - என்றார்.

(த-ரி5-101-107)

## உள்ளக

சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் எழுப்பிய வாய்மூல விடைக்கான கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போரால் பாதிக்கப்பட்ட முள்ளிக்குளம் சமூகம் தொடர்பில் கோடீஸ்வரன் கேள்வி எழுப்பியிருந்தார். இந்தக் கேள்விக்குப் பதிலளித்து மேலும் கருத்து வெளியிட்ட அமைச்சர் சுவாமிநாதன்,

முள்ளிக்குளம் மட்டுமல்லாது குறிப்பாக, வடக்கு, கிழக்கில் வசிப்பவர்கள் இலங்கையில் இடம்பெற்ற இனமோதல் விளைவுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் நன்கு அறிவேன். அதனால் தான் இந்த அரசானது மீண்டும் ஒரு போர்ச் சூழல் ஏற்படாதவாறு தனது கடமைகளை முன்னெடுத்து வருகிறது.

இம்மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறினர். ஆகையால், இந்த அரசினது குறுகிய காலத்திற்குள் இலங்கை வரலாற்றில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற சொற்பதத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகிறது.

தமது காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக முள்ளிக்குள மக்கள் பிரதிநிதிகளால் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட இவ் விடயம் புதிய அரசால் கையாளப்படுகிறது.

முள்ளிக்குளத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக அங்கு இடம்பெயர்ந்த 169 குடும்பங்களுக்குப் பூர்வீக கிராமத்தை அண்டிய பகுதிகளில் தலா 80 பேர்ச்சஸ் வீதம் மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது-என்றார்.

(கு-சி)

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி – 2016 நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

## மூன்று நாள்கள்: 300 காட்சிக் கூடங்கள்



யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 07ஆவது வருடமாக நாளை வெள்ளிக்கிழமை முதல் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. கடந்தகாலத் தரவுகளுடன் ஒப்பிடுகையில் இந்த முறை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்மாணம், உபசரிப்பு, உணவு, மென்பானவகை, பொதியிடல், வாகனங்கள், தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடைத்துறை, விவசாயம், நுகர்வோர் உற்பத்திகள் உள்ளிட்ட பல துறைகளை உள்ளடக்கிய 300 காட்சிக்கூடங்கள் இந்த கண்காட்சியில் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வகையான பொருள்கள் சந்தை விலையிலும் குறைவான விலைகளில் விற்பனை செய்யப்படவுள்ளன என யாழ்ப்பாணம் வர்த்தகக் கைத்தொழிற்துறை மன்றத் தலைவர் கே.விக்னேஸ் தெரிவித்தார்.

7 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம்வர்த்தகக் கைத் தொழிற்துறை மன்றம் எல்.ஈ.சி.எஸ். நிறுவனத்துடன் இணைந்து கடந்த ஆறு வருடகாலமாக மிகவும் வெற்றிகரமாக யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்தியுள்ளதுடன் தற்போது ஏழாவது வருட காலமாகக் கண்காட்சியை ஏற்பாடு செய்து நடத்தவுள்ளது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் நாங்கள் ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுகள்,கண்காட்சியில் பங்குபற்றப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் எனத் தற்போதே கண்காட்சிக்கான முன்னேற்பாடுகள் என்பன களைகட்டத் தொடங்கியுள்ளன.

## வணிகம்

கண்காட்சிக்கான காட்சியறைகளை நாங்கள் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளோம். வடபகுதியிலுள்ள கைத்தொழில் வர்த்தக நிறுவனங்களை மையப்படுத்தும் காட்சியறைகள் ,வடபகுதிக்கு அப்பால் தங்கள் கைத்தொழில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களின் காட்சியறைகள் என்பன இதில் இடம்பெற்றுள்ளன. அதிகமான வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறையில் ஈடுபடும் நிறுவனங்கள் இம்முறை முன்பதிவு செய்துள்ளமையால் கண்காட்சிக் கூடங்களுக்குப் பற்றாக்குறை நிலைமை காணப்படுகின்றது.

எங்களுடைய இந்த நிகழ்விற்குக் கடந்த காலங்களைப் போல யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் இந்தாண்டும் தங்களுடைய பங்களிப்புக்களை வழங்கவுள்ளனர். இந்தியாவிலிருந்து 60 வர்த்தக மற்றும் முதலீட்டாளர்கள் எங்களுடைய பிரதேசத்தில் காணப்படுகின்ற கைத்தொழில் முதலீட்டாளர்களைக் கண்டு எதிர்காலத்தில் வடபகுதியில் கைத் தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடல்களை எதிர்வரும் 30 ஆம் திகதி இதே விடுதியில் நடத்தவுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள அனைத்து தொழில் முயற்சியாளர்களும் தமது உற்பத்தி மற்றும் சேவைகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச வலையமைப்புடன் இணைப்பதன் ஊடாக தமது உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான பரந்தளவிலான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள ஓர் இணைப்புப் பாலமாக இந்தக் கண்காட்சி அமைகிறது.

முயற்சியாளர்கள் பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் இயந்திர சாதனங்களையும் அதன் பயன்பாட்டினை யும் இனங்கண்டு தத்தமது தொழில்துறையில் பிரயோகிப்பதற்கும் சிறந்த ஒரு களமாக இது அமையும். நிலைத்து நிற்கக்கூடிய புதிய தொழிற்துறைகளை இனங்கண்டு சிறந்த முறையில் முன்னெடுத்து வெற்றிகரமான தொழில் முயற்சியாளன் எனும் நிலையை அடைவதற்கு இந்த நிகழ்வு பயனுடையதாக அமையும்.

தற்போது யாழ்ப்பாணத்துக்குத் தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து முதலீடு கொண்டு வரப்பட்டுள்ளது என்றால் அதற்குப் பிரதான காரணமாக யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சி காணப்படுகின்றது.

எங்களுடைய கண்காட்சி மூலம் வெளியிலிருந்து வடப்பகுதியில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம் . தங்களுடைய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வந்து காட்சிப்படுத்தினார்கள். இங்குள்ள தொழில் முயற்சியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். தங்கள் வர்த்தக முயற்சிகளை இங்குள்ள வர்த்தகக் கைத்தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தினார்கள். இன்று வடபகுதியில் வர்த்தகக் கைத்தொழில் முயற்சிகள் புதியதோர் பரிணாமம் பெற்றமைக்கு அடித்தளமிட்டது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி என்றால் அது மிகையாகாது.

தற்போது உலகளாவிய ரீதியில் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளில் வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்திலுமுள்ள பிராந்தியங்களிலும் மிகவும் பிரமாண்டமான வகையில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா உட்பட்ட நாடுகளில் வருடம் தோறும் நடத்தப்படுகின்ற பிரமாண்ட வர்த்தகக் கண்காட்சிகளுக்கு இலங்கையிலிருந்து , வடபகுதியிலிருந்து எத்தனையோ தொழில் முயற்சியாளர்கள் சென்றிருக்கிறார்கள்.எத்தனையோ தொழில்நுட்ப அறிவுகளை இங்கே வரவழைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் நாங்கள் இந்த விடயத்தில் ஒதுங்கி இருக்க முடியாது. நாங்களும் எங்களுடைய பிரதேசத்தின் வர்த்தக மற்றும் கைத் தொழில் முயற்சிகளை அதிகரிக்க வேண்டிய தேவையிலுள்ளோம். எங்கள் பிரதேசத்தில் சிறந்த ஆரோக்கியமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்க வேண்டும்.

எங்களுடைய பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்புவதில் பிரதான பங்கினைத் தனியார் துறையினர் தான் ஆற்றி வருகின்றனர். பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி,வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்றவற்றில் தனியார் துறையினரின் பங்களிப்புக் காத்திரமானதாக உள்ளது.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பளிஹக்கார, கௌரவ விருந்தினர்களாக இந்திய துணைத்தூதுவர் நடராஜன், யாழ்.அரச அதிபர் வேதநாயகன், மற்றும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

பார்வையாளர் நுழைவுக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும். அத்துடன் பாடசாலை மாணவர்கள் கட்டணமின்றி அனுமதிக்கப்படுவர்.பார்வையாளர்கள் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமையன்று நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக முன்கூட்டியே வருகை தந்து கண்காட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.இவ் வருடம் கண்காட்சியில் பங்குபற்றும் துறைகளும் அதிகமாகவே காணப்படுகின்றன.

மேலும் இக்கண்காட்சியில் முக்கிய அம்சங்களாக, நுகர்வோர் தெரிவுகள் முதல் கைத்தொழில் பொருள்கள் மற்றும் சேவைகள் வரை 300 இற்கும் மேற்பட்ட கண்காட்சிக்கூடங்கள், இக்கண்காட்சிக்கு 60,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தரவுள்ளமை, மாலைப்பொழுதில் நேரடி இசை நிகழ்வுகள், சிறுவர்கள் விளையாடுவதற்கான வசதி உட்பட பொழுதுபோக்குப் பூங்கா, அனைத்து வகையான உணவு மற்றும் பான வகை, கூவி விற்கும் உணவுக்கூடங்கள், 1000 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விசேட தள்ளுபடிகள்,வியப்பூட்டும் பரிசுகளை வெல்வதற்கு மணித்தியாலத்திற்கு ஒரு முறை அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்,விசேட உயர்கல்விக்காட்சிக்கூடங்கள், யாழ்ப்பாணத்தில் இலங்கையின் முதல்தர தேயிலையின் சுவை அனுபவம் மற்றும் சுற்றுலா ஆகியன காணப்படும் எனவும் தெரிவித்தார்.

கண்காட்சியின் பிரதான அனுசரணை நிறுவனங்களில் ஒன்றான எல்.ஈ.சி.எஸ். நிறுவனத்தின் அதிகாரி றிஸ்னி, ஐடியல் குறூப் நிறுவனத்தின் அதிகாரி சுரேஷ் நவரத்தினராஜா, யாழ்ப்பாணம் வர்த்தகக் கைத்தொழிற்துறை மன்றத்தின் முன்னாள் தலைவர் கே.பூரணச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

(த-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி

ஏனைய காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நேற்றைய கலந்துரையாடலில் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் – மீள்குடியமர்வு தொடர்பான விவரங்கள் அரச அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்டன. பாதுகாப்புத் தரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டு தரவுகளிலுமே முரண்பாடுகள் காணப்பட்டன. இதனையடுத்து சரியான தகவல்களைத் திரட்டி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை, ஜனாதிபதி மைத்திரிபால பணித்திருந்தார்.

இதற்கமைய யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் முப்படைத் தளபதிகள் கலந்து கொண்டனர். அத்துடன் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்களும் பங்குபற்றினர்.

நலன்புரிநிலையங்களில் தற்போது தங்கியுள்ள மக்களின் சொந்தக் காணிகள் எங்கு உள்ளன என்ற விவரம் முதலில் அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்டது. அவர்களது சொந்தக் காணிகள் எந்தக் கிராம சேவையாளர் பிரிவில் உள்ளன என்ற விவரமே காண்பிக்கப்பட்டது. இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அந்தக் காணிகளை நேரடியாக அடையாளம் காணும்படியான வரைபடத்தை தயாரிக்குமாறு பணித்தார்.

கிராம சேவையாளர் பிரிவில், எந்தப் பகுதியில் எந்த இடத்தில் இருக்கின்றது என்பதை தெளிவாக – அச்சொட்டாக அடையாளப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பணித்தார். உயர் பாதுகாப்பு வலயம் தவிர்ந்து, ஏனைய இடங்களில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளையும் இவ்வாறு அடையாளமிடுமாறு அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கையை, பிரதேச செயலக அதிகாரி ஒருவரும், இராணுவத்தின் தரப்பு அதிகாரி ஒருவரும் இணைந்து மேற் கொள்வர்.

நலன்புரி நிலையங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினதும் காணி எங்குள்ளது என்பது அடையாளப்படுத்தும் நடவடிக்கை இரண்டுவாரங்களில் முடிக்கப்பட வேண்டும். இதன் பின்னர், அவ்வாறு அடையாளப்படுத்துவதற்கு அமைய இராணுவத்தினர் தம்மால் மாற்றக் கூடிய முகாம்களை இடமாற்றவேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5-101)

## பயங்கரவாதத்

தினால் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர். மேலும் 14 பேரைப் புனர்வாழ்வுக்கு அனுப்ப நீதி மன்று பணித்துள்ளது.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21 பேரும், வழக்கில் ஏற்கனவே பிணை வழங்கப்பட்டிருந்த 39 பேரும் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது கைதிகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிக்கையைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

அதனைப் பரிசீலித்த நீதிமன்று பிணை வழங்கப்பட்டிருந்தவர்களில் மூன்று பேரை வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

ஏற்கனவே பிணை வழங்கப் பட்டிருந்தவர்களில் 14 பேரைச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் ஒரு வருட புனர்வாழ்வுக்கு அனுப்பு மாறும் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

புனர்வாழ்வுக்குச் செல்லவுள்ளவர்களின் கோரிக்கையின்பேரில், புனர்வாழ்வு பெறுவது தொடர்பில் அவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு நீதிமன்றத்தினால் இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் ஒருவருக்குத் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றைய 21 தமிழ் கைதிகளையும் தொடர்ந்து இரண்டுவாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளன. (த-4)

## விடுவிக்கப்பட்ட

கூட்டத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையில், யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே, இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கேள்வியை எழுப்பியுள்ளார்.

தற்போது இராணுவத்தினர் வசமிருந்து பெருமளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அண்மையிலும் காணிகள் விடுவிக்கப்பட்டன. ஆனால், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமரவில்லை. ஏன் இந்த நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையில் மேலும் காணி விடுவிப்பு தொடர்பில் ஏன் கேள்வி எழுப்பப்படுகின்றது என்று அவர் கேட்டுள்ளார். கடந்த காலங்களில், உயர் பாதுகாப்பு வலயக் காணிகளை விடுவிப்பதுத் தொடர்பில் மாத்திரம்தான் கோரிக்கை விடுத்து வந்தீர்கள். தற்போது உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் உள்ள காணிகளின் விடுவிப்பு தொடர்பிலும் ஏன் பேசுகின்றீர்கள் என்று இராணுவத் தளபதி அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

இதன்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், காணிகள் விடுவிக்கப்படவேண்டும். உங்களின் பாதுகாப்புத் தேவைக்கு ஆகக் குறைந்தது எவ்வளவு காணி தேவை என்பதை நேரில் சென்று மதிப்பீடு செய்யுங்கள். அதன் பின்னர், எவ்வளவு காணி தேவை? எவ்வளவு காணி விடுவிப்பது என்பது பற்றிப் பேசலாம் – என்றார்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர் என்று இதன்போது பிரதேச செயலாளர்கள் பதிலளித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## சர்வதேசத்

குறித்து சனல் 4 ஊடகவியலாளர் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது அரசு உறுதி பூண்டிருக்கின்றது. பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறை எதிர்வரும் மே மாதம் உருவாக்கப்படும்.

போரின் இறுதிக் கட்டத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளில் சந்தேகங்கள் உள்ளன. சரியான எண்ணிக்கையைக் கண்டறிவதில் நாம் ஆர்வம் கொண்டிருக்கிறோம்.

போருக்குப் பின்னரும் பலர் காணாமற்போயுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் இறந்து போயிருக்கலாம். அவர்கள் எவ்வாறு இறந்தனர். என்ன நடந்தது என்று அறிந்து கொள்ளும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் – என்றார். (த-வ-5)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



29.12.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரும் ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆசிரியருமான

**கந்தையா பசுபதிப்பிள்ளை**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அவரது இல்லத்தில் இன்று (28.01.2016) நடைபெற உள்ளன. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**புத்தூர் வடக்கு, புத்தூர்.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**திருமதி சிவபாக்கியம் கணேசன்**



பெரியதோட்டம் மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் கணேசன் 26.01.2016 செவ்வாய்க்கிழமை அதிகாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சி.கணேசனின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - யாழ் கச்சேரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற க.முகுந்தனின் அன்புத் தாயாரும் திருமதி ச.இராஜேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரியும் க.திரிபுரசுந்தரி (ஆசிரியர்) அவர்களின் பெரியதாயாரும் த. கதிர்காமநாதனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.01.2016 செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியதோட்டம்,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**சுரேந்திரன் நிருஜன்**



பறாளை சுழிபுரத்தினை பிறப்பிடமாகவும் இல.151. நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரன் நிருஜன்(ஸ்ரீலங்கா டெலிகொம் - வவுனியா தொழிநுட்ப உதவியாளர்) 25.01.2016 திங்கட்கிழமை விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார்.

அன்னார் சீனியர் ஒழுங்கை கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி துரையப்பா ஐயா, பறாளை சுழிபுரத்தினைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு திருமதி கதிர்காமநாதன் ஐயா ஆகியோரின் அன்புப் பேரனும் து.சுரேந்திரன்(ஓய்வு நிலை மேல் நீதிமன்ற பதிவாளர்) - பத்மரஜனி(பாப்பா) தம்பதிகளின் அன்பு மகனும் சங்கீதா (கனடா), கஜரூபன்(பொறியியலாளர்), செந்தூரன்(பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரனும் கேயூரநாதனின் (கனடா), அன்பு மைத்துனரும் சூடனின்(கனடா) ஆசை பெரியமாமாவும் காலஞ்சென்ற கோமளாம்பிகையின் மருமகனும் காலஞ்சென்ற து.வைத்தியலிங்கம் மற்றும் து.மகாதேவன், து.சிவபாலன், து.விவேகானந்தக்குருக்கள் ஆகியோரின் பெறாமகனும் திரு திருமதி குகமூர்த்தி, பாலச்சந்திரன்(கனடா), விமலச்சந்திரன் (லண்டன்) காலஞ்சென்ற விஜயச்சந்திரன்(கொலண்ட்) ஆகியோரின் அன்பு மருமகனும் திரு திருமதி பாண்டுரங்கனின்(கனடா) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2016 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 151 நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு - 077 305 3061**

## கண்ணீர் அஞ்சலி

2016.01.27 புதன்கிழமை இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **திரு. மனோகரன் அல்பிரட் ஜெயசிங்கம்** அவர்களின் அன்புத் தந்தை

**ஞானசேகரம் மனோகரன்**

**அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை, (மல்லாகம்)**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**கதிரவேலு கண்மணி அம்மா**
**(பொலிஸ் அம்மா)**



**தோற்றம்**
**24.08.1924**

**மறைவு**
**08.02.2015**

ஓராண்டான போதும் ஓயவில்லை எம் துயரம்மா!
புன்னகைக்கு நீயே அரசியம்மா!
உன் பூவிழிகள் ஏன் தான் மூடியதம்மா!
ஒளி சிந்துகின்ற ஒளி அரசி நீயம்மா!
விதி வந்து விளக்குத் திரியை அணைத்ததம்மா!
எம் குடும்பத்தின் அன்பரசியும் நீதானம்மா!
இரக்க மற்ற எமன் வந்து ஏன் அழைத்தானம்மா!
எழில் பொங்கும் மதிவதனியும் நீதானம்மா!
எம் கண்மணியும் பொன்மணியும் நீயே அம்மா!
உன் பூதவுடல் மாத்திரமே அழிந்ததம்மா!
புகழுடலோ இன்றும் மனங்களில் வாழுதம்மா!
ஆண்டொன்று ஆகிடினும் ஆறவில்லை எம் துயரம்.
உயிர்ப்பூக்கள் கொண்டு மனம் உருகி
உமை நாளும் வணங்குகின்றோம் பாரம்மா!

**வேலாயுதபிள்ளை பாமா**
**(மகள்)**
**சுதந்திரபுரம் கொலனி**

மகள்,மருமக்கள்,
[illegible]
பூட்டப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மங்கையற்கரசி தர்மலிங்கம்



உடுப்பிட்டி, கொம்மாந்தறையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி, கல்லுவம் மற்றும் திருமகள் சோதி வீதி, நவிண்டிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி தர்மலிங்கம் நேற்று (27.01.2016) புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியின ரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற Dr.ஆ.தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற பதிவு வைத்திய அதிகாரி) அவர்களது பாசமிகு மனைவியும் பாஸ்கரன் (லண்டன்), பாஸ்கரி, மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சொரூபினி (லண்டன்), Dr. கேதீஸ்வரன் (பிரதி மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் - வடமாகாணம்), அம்பிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் நித்தியானந்தம், சதானந்தம், புனிதவதி, சச்சிதானந்தம் (லண்டன்), தயானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சிதமலர், தேவி, கணேசமூர்த்தி, பார்வதி, காலஞ்சென்ற சதாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஐந்தூரி (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), மிதுஷன் (லண்டன்), கௌதமன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), ஆரண் (லண்டன்), மிஷே ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லவண், பிரணவன் (லண்டன்), ஜனனி ஆகியோரின் பெரிய தாயாரும் கௌரி (சிங்கப்பூர்), அஜந்தன் (லண்டன்), திவ்யா (லண்டன்), சரண்யா (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது நவிண்டில் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருமகள் சோதி வீதி,
நவிண்டில், கரவெட்டி.

T.P: 021 226 4160
077 6043 848

தகவல்:
குடும்பத்தினர்.

(அ/28941)



## செல்லையா கணநாதன் (மெக்கானிக் கண்ணன்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணநாதன் கடந்த 26.01.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா-இராசபூமணி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், விஜயரூபன் (Singer Plus), கயனரூபன் (சுவிஸ்), இராஜரூபன், கம்ஷானந்தி, கிருபானந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகாவின் (சுவிஸ்) அன்பு மாமனும், வர்சிகாவின் (சுவிஸ்) அன்பு பேரனும், ரங்கநாதன் (Video ரங்கன்) விமலநாதன் தயாநிதி (சுவிஸ்) ஜெகநாதன் சுகந்தினி யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமார் (லண்டன்), புஸ்பமலர் (கொழும்பு) குணராஜா (சுவிஸ்) கருணேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வீதி, கைதடி வடக்கு, கைதடி.
077 078 3191, 077 757 0596

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலக வாழ்விற்காய்
03 . 02 . 1991



விண்ணுலகப் பயணமாய்
09 . 02 . 2015

## சின்னையா பர்மிலா (சங்கீதா)

(மட்டக்களப்பு சுவாமிவிபுலானந்தா அழகியற்கற்கை நிறுவன இசைத்துறை 3ஆம் வருட மாணவி)

திதி : 28.01.2016

சங்கீதா என்னும் சரித்திரம் சாய்ந்து
ஆண்டு ஒன்று தாண்டுகின்றது - ஒன்றல்ல
ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
ஓயாது உன் நினைவலைகள் எம்மில்
வாடாத மல்லிகையாய் எம்மை மகிழ்விக்க வந்தவளே
நாமெல்லாம் வாடி நிற்க எங்கு சென்றாய் எங்கள் அம்மா
மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தவளே - இன்று
விண்ணுலகில் தெய்வமாகத் திகழ்கின்றாய்
நீண்டகாலம் அங்கு தங்காதே - மீண்டும்
எம்மிடம் வந்திடம்மா எங்கள் குலவிளக்கே
உன் நினைவுகளைச் சுமந்து கொண்டு - உன்
வரவுக்காய் காத்திருக்கும்........

இல.9, சாளம்பன்குளம்,
யோகபுரம், மல்லாவி.
தொடர்பு: 077 475 0966

குடும்பத்தினர், உற்றார்,
உறவினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19 . 10 . 1995



இறப்பு
28 . 01 . 2013

## தவராசா டினோஷன்

கனவுகள் பல சுமந்து
சாதனைகள் படைத்திடும் வேளைதனில்
மின்னாமல் இடி விழுந்ததுவோ
கண்ணிமைக்கும் நேரத்தில் விண்ணுற்றாய்
உனக்காய் கண்ணீர்ப்பூக்கள் சிந்திக்
கவலையோடு உருகுகின்றோம்
என்றென்றும் உன் நினைவை ஏற்றி
வைப்போம்.

புதுக்குளம், கோவிற்குளம்
மன்னார்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதிநீர் கொட்டி குழந்தைகள் காயம்

சாவகச்சேரி,ஜன.28

தேநீர் தயாரிப்பதற்கு மேசை மீது வைக்கப்பட்டிருந்த கொதிநீர் கொட்டியதில் பாதிப்படைந்து ஒரு வயது மதிக்கத்தக்க இரு குழந்தைகள் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேசை மீது வைக்கப்பட்டிருந்த கொதிநீரை குழந்தைகள் இழுத்து வீழ்த்தியதால் ஒருகுழந்தைக்கு தலை காது தோள் ஆகிய பகுதிகளிலும், மற்றைய குழந்தைக்கு வயிற்றிலும் காயம் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-9)


## University of Jaffna

UNIT OF HEALTH SCIENCES,
FACULTY OF MEDICINE.

**Commencement of Academic Activities**

**B.Sc. in Medical Laboratory Sciences, B.Sc. in Nursing and Bachelor of Pharmacy**

The Orientation Programme for the newly admitted first year students to the Unit of Allied Health Sciences, Faculty of Medicine, and University of Jaffna for the Academic Year of 2015/2016 will commence on Monday, 8th of February 2016 at 9.30am at the **Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil.**

The new students are requested to participate in the Orientation Programme without fail.

**Registrar** 28.01.2016
**University of Jaffna**


## நல்லூர் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் 2016

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் நல்லூர் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08ஆம் திகதிய **NP/05/01/GE6/UNS/RQ** இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படை த்தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.(வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ரூபா ஐம்பதைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப்பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு, **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்.** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்
5. ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின் படி விண்ணபதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனத் தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்

**விண்ணப்ப முடிவுத்திகதி**

**2016.02.10** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**பதவி – காவலாளி (ஆண்)** ( வெற்றிடம் - 01 )

**கல்வித்தகைமை**

கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் /சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

* 2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A ஆகும்.

2016.01.28
திகதி

திருமதி.தி. அன்னலிங்கம்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**பாலச்சந்திரன் கஜேந்திரன்**

**சுதாஜினி கஜேந்திரன்**



ஆண்டொன்று போனாலும்
ஆறாது உங்கள் பிரிவு மீண்டுந்தான்
காண்பதற்கு மீளாதோ உங்கள்
வாழ்வு கண்ணீரில்தான் நனைந்து
கரைகின்றோம் எம் வாழ்வை
மண்மீது உங்களை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.

348 முதலாம் ஒழுங்கை,
உக்குளாங்குளம்,
வவுனியா.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



நேற்று (27.01.2016) இறைபதமடைந்த எமது அன்பு நண்பர் திரு.ம.அ. ஜெயசிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**ஞானசேகரம் மனோகரன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்: **ஜெயகரன், பாலரூபன், திலீபன், ஆனந்தராசா, கிருபாகரன்.**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
14 . 11 . 1932



கர்த்தரின் அணைப்பில்
27 . 01 . 2016

**ஞானசேகரம் மனோகரன்**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசேகரம் மனோகரன் நேற்று (27.01.2016) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பு-நேசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வதி றோஸின் அன்புக் கணவரும், ஜெயசிங்கம், ஜெயகுலன், ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிறிஸ்ரின் மாலினி, வமிலா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனிபர் டிலானி, சுரன்ஜன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் (மலேசியா) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தம்பளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிங்கவாசா" அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி முருகேசு நல்லம்மா



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.121,D.10. உருத்திரபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது இல. 54/1, திருவையாறு, கிளிநொச்சியில் வாழ்ந்து வந்தவருமாகிய **திருமதி முருகேசு நல்லம்மா அவர்கள் 27.01.2016 அன்று காலமானார்.** அன்னார் காலம்சென்றவர்களான விசுவலிங்கம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலம் சென்ற ஐயம்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும் பூரணம், மனோன்மணி (ஓய்வு பெற்ற பிரதம தாதி) இராமச்சந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர்) குலசிங்கம் (முன்னாள் ப.நோ. கூ.சங்க லிகிதர்), தனபாலசிங்கம் (கனடா), தர்மபாலன்(கனடா), இன்பநாதன்(கனடா), பத்மநாதன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலம்சென்ற பசுபதிப்பிள்ளை, மற்றும் தம்பிஐயா (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), வசந்தகோகிலம், காலம்சென்ற ஞானசௌந்தரி மற்றும் குலநாயகி, மீனாம்பிகை (கனடா), யோகராணி (கனடா), திருக்கலாதேவி(கனடா), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்றவர்களான ஆறுமுகம், சிவக்கொழுந்து, சின்னத்துரை, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலம் சென்றவர்களான சிவபாக்கியம், கந்தையா, இளையதம்பி ஆகியோரின் மைத்துனியும், தேவறஞ்சிதா, கனகறஞ்சிதா, தெய்வேந்திரன், செல்வறஞ்சிதா, லோகறஞ்சிதா, யோகேந்திரன், சுரேந்திரன், குமணன், நிமலினி, எழிலினி, லோஜினி, கபிலன், தயன், ஜசீலன், சசிபரன், ஜெயந்தன், சத்தியன், ஜனகன், நயனன், சுவர்ணன், ருதுசா, சாகித்தியா, கவிவர்ணன், சுபோதன், சுபேதன், சுபாங்கன், இலக்கியன், சங்கீர்த்தன், மாதங்கி ஆகியோரின் அன்பு பேத்தியும், காலம்சென்ற நிரோசா, மற்றும் உஜிதா, கோசலை, லொசானி, டயானி, தருணிகா, தருணிகன், கோபிகன், பிருந்தன், பிரணவன், வைஸ்ணவி, பிரதீஸ், யாமளன், சைதன்யன், அமரர் சௌஜன்யன், மற்றும் சின்மயன், அனந்தினி, வர்சன், தமிழவி, அகரன், யதுமினன், அக்சதா, ஜனோதன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2016 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.54/1, திருவையாறு இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள்** அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

**இராமச்சந்திரன் (இலங்கை) - 0772556004**
**தம்பிஐயா மனோன்மணி (இலங்கை) - 0776166080**
**பூரணம் (இலங்கை) - 0772644017**
**குலசிங்கம் (ஆனந்தநகர்,கிளிநொச்சி) - 0766860254**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன்னாள் பங்குத்தந்தை விக்ரர் டெலான் அடிகளாரின் ஞாபகார்த்தமாக மின்னல் கழகத்தின் அனுசரணையுடன் பாசையூர் கடற்றொழிலாளர் சங்கம் நடத்திய கடல் சார் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாசையூர் கடற்பரப்பில் இடம்பெற்றன. (ம-23)

## வாலிபர், ஆவரங்கால் மத்தி அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜன. 28
நீர்வேலிஐக்கியவிளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற்றமுதலாவது ஆட்டத்தில் கச்சாய் வொலிக்கிங்ஸ் அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் தோப்பு வாலிபர் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மெய்வன்மைப் போட்டிகள்

*சாவகச்சேரி மகளிர் கல்லூரி*

சாவகச்சேரி, ஜன. 28
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் இன்று பி.பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ம-9)

*மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை*

மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் சிறிராமச்சந்திரன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-109)

*இமையாணன் அ.த.க. வித்தியாலயம்*

யாழ்ப்பாணம் இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக குறித்த வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் நவமணி சந்திரசேகரம் கலந்துகொள்ளவுள்ளார்.

*வல்வை மகளிர் வித்தியாலயம்*

வல்வை மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் செல்விசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியிடம் வீழ்ந்தது யாழ்ப்பாணக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், ஜன. 28
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 175 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதான்த்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கதியோன் 50 ஓட்டங்களையும், சயந்தன் 37 ஓட்டங்களையும், மதுசாந் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் கொலின்ஸ், துவாரகன் இருவரும் தலா 3 இலக்குகளையும், கஜீபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜிந்துசன் 20 ஓட்டங்களையும், சதுசன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பில் கதியோன் 6 இலக்குகளையும், சண் சேயன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

83ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சயந்தன் 57 ஓட்டங்களையும், திவாகரன் 31 ஓட்டங்களையும், சிறிகுமார் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் ஜிந்துசன் 3 இலக்குகளையும், கொலின்ஸ், கஜிபன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி119 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக திலக்சன் 62 ஓட்டங்களையும், கஜீபன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணியின் சார்பில் கதியோன் 5 இலக்குகளையும், மிதுசன் 4 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## மகாஜனாவின் கால்பந்தாட்ட அணிக்கு கல்லூரியால் மகத்தான வரவேற்பு

தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் தங்கப்பதக்கம் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அணிக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்லூரிச் சமூகத்தால் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சங்கத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட சமபோசா கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில்பெண்களுக்கான15வயதுப்பிரிவில் மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது. கிண்ணத்துடனும் தங்கப்பதக்கத்துடனும் நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பிய அணியினருக்கு கல்லூரி சமூகத்தினரால் மகாத்தன வரவேற்பு வழங்கப்பட்டது. கல்லூரியின் முன்றலில் வைத்து கல்லூரியின் பிரதி அதிபர் வே.சந்திரசேகரத்திடம் கிண்ணம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து முன்றிலில் இருந்து வீராங்கனைகள் கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் கல்லூரியின்பாவலர்துரையப்பாமண்டபம் வரை அழைத்துச் செல்லப்பட்டு தேநீர் விருந்து உபசாரம் இடம்பெற்றது. (ம-23)



## தோழர்களை வீழ்த்தியது முல்லைத்தீவு சென்.யூட்

யாழ்ப்பாணம், ஜன. 28
முல்லைத்தீவு மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியிடம் வீழ்ந்தது விசுவமடு தோழர்கள் அணி.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய விசுவமடு தோழர்கள் அணி 20பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக தினேஸ் 20 ஓட்டங்களையும், சசி 19 ஓட்டங்களையும், கௌசி 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முல்லைத்தீவுசென்.யூட்அணிசார்பில்குகதாஸ்5 இலக்குகளையும், தபேந்திரன், வியாசன் இருவரும் தலா 2 இலக்குகளையும், கண்ணன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு சென்.யூட் அணி 13.1 பந்துப்பரிமாற்றத்தில் 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக மிராஜ் 23 ஓட்டங்களையும், சுபேந்திரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விசுவமடு தோழர்கள் அணி சார்பில் சசி 2 இலக்குகளையும், காந்தன், கௌசி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GENUINE PARTS & SERVICE

# யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2016

மாநகர சபை மைதானம், யாழ்ப்பாணத்தில்,

**2016 ஜனவரி 29, 30 மற்றும் 31 ஆம் திகதிகளில்**

**காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும்.**

---

## இலவச சேவை முகாம்

**இலவச வாகன பரிசோதனை**
**மற்றும் புகைபரிசோதனை**

பொது நூலக வீதி, யாழ்ப்பாணத்தில்,

**2016 ஜனவரி 30 மற்றும் 31 ஆம் திகதிகளில்**

**காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.**

---

சிறுவர்களுக்கான ஒன்று கூடல்
இன்றைய விளையாட்டு நாளைய வெற்றி

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்

சுப்ரமணியம் பூங்கா, யாழ்ப்பாணத்தில்,

**2016 ஜனவரி 30 ஆம் திகதி**

**காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.**

**உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம் !**

DPMC

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

நிறுவன பதிவு இலக்கம் PB270

சென். மார்டின் ட்ரேட் சென்டர் ..... வீதி, யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு
0773763201/ 0777776726/ 0772960920/ 0773441833/ 0214700600.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலன் போடர் விருது வென்றார் வோர்ணர்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கான, ஆகச்சிறந்த விருதான அலன் போடர் பதக்கத்தை அந்த அணியின் ஆரம்ப வீரரான வோர்ணர் வென்றுள்ளார். ஆஸியின் தலைவரான சிமித்தை முந்தியே, இக்கௌரவத்தை அவர் பெற்றுக் கொண்டார். ஆண்டின் டெஸ்ட் வீரருக்கான விருதையும், டேவிட் வோர்ணரே வெற்றி கொண்டார். சிறந்த வீராங்கனைக்கான மெலின்டா கிளார்க் விருதை, எலைஸ் பெரி வெற்றிகொண்டார். ஒரு நாள் ஆட்டங்களுக்கான சிறந்த வீரர் விருதை கிளென் மக்ஸ்வெல் வென்றார். (ம)

**KBK Accounting Centre**
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
A/L 2018, A/L 2017, A/L 2016
பிரிவுகளுக்கான **கணக்கீட்டுப்**
பாடம் புதிய பிரிவுகளாக ஆரம்பமாகின்றது
(MCQ, Paper Class உட்பட)
Tue,Thu,Sat,Sun - 4-7 pm
தரம் 10, 11 இற்கான வணிகக் கல்வியும், கணக்கீடும்
தொடர்புகளுக்கு: திரு.பாலகஜன் 077 216 8884

**மாபெரும் தளபாட Sale**
29, 30, 31
வீடு மற்றும் அலுவலகத்துக்கு
தேவையான அனைத்து தளபாட
பொருள்களையும்
பெற்றுக்கொள்ளலாம்
077 831 4201
076 821 9413
இல.136,
கந்தர்மடம் சந்தியிலிருந்து
500 M

விசேட இறுதிக் கருத்தரங்கு
Feb - 06ஆம் திகதி
நடைபெறவுள்ள
அலுவலக உதவியாளர்
போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்பு...
Sat, Sun - 9.00 - 3.00 pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
T.P : 077 4696 695

## சேவைநலன் பாராட்டு



**திரு.சுப்பிரமணியம் கணேசு**

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம்**
**(02.11.1981 - 28.01.2016)**

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் 1981ஆம் ஆண்டு கூட்டுறவு பரிசோதகராக கடமையில் இணைந்து 35 வருடங்கள் கூட்டுறவு துறையின் வளர்ச்சிக்கு அரும்பெரும் சேவையாற்றி அகவை அறுபதை பூர்த்திசெய்து இன்றுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர். **திரு.சுப்பிரமணியம் கணேசு**

**அவர்கள் ஓய்வுக்காலத்தில் மென்மேலும் பல செல்வச் சிறப்புக்களைப் பெற்று நோய்நொடியின்றி சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.**

| சேவைக்கால சுருக்கம் | |
|---|---|
| 02.01.1981 - 31.12.1987 | கூட்டுறவு பரிசோதகர் - முல்லைத்தீவு |
| 01.01.1988 - 31.12.1993 | கூட்டுறவு பரிசோதகர் - யாழ்ப்பாணம் |
| 01.01.1994 - 31.12.1995 | கூட்டுறவு பரிசோதகர் - ஊர்காவற்துறை பிரதேசசெயலகம் |
| 01.01.1996 - 30.04.1998 | கூட்டுறவு பரிசோதகர் - முல்லைத்தீவு |
| 01.05.1998 - 31.07.2005 | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் |
| 01.08.2005 - 21.07.2009 | மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் |
| 22.07.2009 - 10.09.2011 | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - கிளிநொச்சி |
| 11.09.2011 - 03.03.2015 | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் வடமாகாணம் |
| 04.03.2015 - 28.01.2016 | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம் |

**உத்தியோகத்தர்கள்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்.**

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2016 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் கருவாட்டுக் கடைகளை 2016 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் **18.02.2016 ஆம் திகதி** வியாழக்கிழமை முற்பகல் 10.00 **மணி** வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில். தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும் . ( எக்காரணம் கொண்டும் அன்று **முற்பகல் 10.00 மணிக்கு** பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.) இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்பட கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் **17.02.2016 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணி** வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கருவாட்டுக் கடைகளுக்குரிய கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 2/3 பகுதியை 25.02.2016 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.**

2016 ஆம் ஆண்டு கருவாட்டுக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம்( இதர வரிகள் தவிர ) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | கருவாட்டுக் கடை - இல. 01 | 83,050.00 | 8,305.00 | 1,000.00 |
| 02. | கருவாட்டுக் கடை - இல. 02 | 83,050.00 | 8,305.00 | 1,000.00 |

குறிப்பு :- இந்நகராட்சி மன்றத்தின் கருவாட்டுக்கடைகளிலிருந்து 1Km சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கருவாட்டு விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

நகராட்சி மன்றம்,
கா.சண்முகதாசன்,
சாவகச்சேரி.
செயலாளர்,
28.01.2016
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
உத்தரவாதம் : 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரை

உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள் ...

ClearVid CMOS sensor

4 Ch Packege
4 Ch DVR 1
800 TVL CMOS Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 2
3C 2V Cable 50M
Power Cable 50M
25900/=

8 Ch Packege
8 Ch DVR 1
800 TVL CMOS Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 4
3C 2V Cable 100M
Power Cable 100M
40900/=

Effio

4 Ch Packege
4 Ch HD DVR 1
750 TVL SONY Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 4
3C 2V Cable 50M
Power Cable 50M
40900/=

8 Ch Packege
8 Ch HD DVR 1
750 TVL SONY Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 8
3C 2V Cable 100M
Power Cable 100M
69900/=

AHD High Definition

4 Ch Packege
4 Ch AHD DVR 1
1.3MP 960P AHD Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 2
3C 2V Cable 50M
Power Cable 50M
43900/=

8 Ch Packege
8 Ch DVR 1
1.3MP 960P AHD Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 4
3C 2V Cable 100M
Power Cable 100M
77900/=

free mobile view
free internet view

DVR , HDDVR, AHDDVR
Sony Effio Cameras, Cmos Camers
AHD (1.0MP, 1.3MP) Cameras
IP (1.0MP, 2.0MP) Cameras
PTZ Cameras, PTZ Stands
Power pack (12V 1A - 30A)
BNC Connector DC Jack
DVR Rack, DVR Cabinet .
போன்றவற்றை உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிநவீன cctv camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.
குறிப்பு:- உங்கள் கணனிகளிலும் கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும், ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021 222 1121/1166 Mob: 0777 667 975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.